சக்தி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 JUN 1948
MADRAS



குமரி முனையில் தமிழ்க் குரல் .... கவிமணி தே. வி.
பகவத் சிங்கின் அந்தியகாலம் .... ப்ரான்நாத் மேத்தா
பழைய பந்தல் .... வி. ஸ. காண்டேகர்
அந்தச் சிறுவன் .... மாக்ஸிம் கார்க்கி
காடாறு மாதம் .... கு. அழகிரிசாமி

சர்வதாரி அணு 8 வைகாசி

சக்தி காரியாலயம்
சென்னை—14.

பொருள் அடக்கம்

மலர் 15 : இதழ் 2

○

தமிழ் நாட்டுக்குப் பெருமை	...	தலையங்கம்	1
காலச் சுழல்	...	குறிப்புகள்	2
திருடொழிப்போம்	...	"மணியன்"	4
குமரிமுனையில் தமிழ்க் குரல்	...	சி. தேசிக விநாயகம் பிள்ளை	6
கிராமத்துக்குச் செல்லுங்கள்	...	மகாத்மா காந்தி	8
காடாறு மாதம்	...	கு. அழகிரிசாமி	12
பகவத் சிங்கின் அந்தியகாலம்	...	ப்ரான் நாத் மேத்தா	21
விஞ்ஞானம் எதற்கு?	...	பொ. திருகூடசுந்தரம் பிள்ளை	25
பொது உடைமை நாட்டில்......	...	கண. முத்தையா	30
குழந்தையின் வீட்டு வாழ்க்கை	...	மு. அருணாசலம்	34
அந்தச் சிறுவன்	...	மாக்ஸிம் கார்க்கி	37
படங்கள்	...	...	41—48
எமிலின் பாங்கர்ஸ்ட்	...	பார்பரா கான்வே	49
இரண்டு விளக்குகள்	...	ல. ச.	52
பத்திரிகை ரேடியோ	...	விஞ்ஞானி	56
தாய்மொழிக் கொடி	...	சி. க. வைத்தீஸ்வரன்	58
நாரை விடு தூது	...	நா. கி. நாகராசன்	61
ஆகஸ்டு 15	...	ராமசரண் சர்மா	66
எதிர்காலத்தில் எப்படி இருக்கும்?	...	பிரான்சிஸ் ராட்மன்	70
பழைய பந்தல்	...	வி. ஸ. காண்டேகர்	72
அரிஸ்டாட்டில்	...	வி. சக்கரை செட்டியார்	79
சாக்கடையிலிருந்து (தொடர் கதை)	...	பி. கேசவதேவ்	82
புத்தக உலகம்	...	கு. அ.	87

✻

சர்வதாரி சக்தி வைகாசி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
JUN 1948
MADRAS

INDIVIDUALITY "Plus"

சிறியது "S-4"
18 ct. கெட்டி தங்கம் ரூ. 245/-

சிறியது "H-2"
18ct. கெட்டி தங்கம் 250/-

தனிச்சிறப்பு வாய்ந்தது.
நம்பிக்கை வாய்ந்தது.

ஒரு கடிகாரத்தைத் தேர்ந்தெடுப்பதில் அதன் தனிச்சிறப்பு மட்டும் முக்கிய அம்சமாகாது. தனிச்சிறப்புடன சகல விதத்திலும் நம்பிக்கையளிக்கக்கூடியதாயிருந்தால்தான் உங்களுக்கு கடிகாரம் காலத்தை சரிவரக்காட்டும் அவைகள் கையில் கட்டிக்கொள்வதில் திருப்தியும் பெருமிதத்தையும் தரும்.

ஒவ்வொரு வெஸ்ட் எண்ட் கடிகாரமும் தனிச் சிறப்புடன் உறுதியும் நம்பகமானதாகவும் இருக்கும். எங்கள் பெயர் போட்டுள்ள கடிகாரத்தில் மேலே குறிப்பிட்டுள்ள அம்சங்கள் நிறைந்தது என்பது உத்திரவாதமானது.

தற்போதைய நிலையில் நாங்கள் விளம்பரம் செய்துள்ள ரகங்களெல்லாம் விநியோகம் செய்ய இயலாத நிலையில் இருக்கிறோம். எங்களிடமுள்ள இருப்பிற்குத் தகுந்தபடி கூடுமான வரையிலும் உங்கள் ஆர்டர்கள் கவனிக்கப்பட்டு கடிகாரங்கள் அனுப்பப்படும்.

வெஸ்ட் எண்ட் வாட்ச் கம்பெனி
பம்பாய் & கல்கத்தா

WEST END WATCH Co.

BOMBAY — CALCUTTA

உங்கள் கூந்தல் இம்மாததிரி படியாமலிருந்தால்



அதை ஸ்வஸ்திக் வாசனையிடப்பட்ட ஆமணக்கெண்ணையால் படியச்செய்யுங்கள்

உங்கள் கூந்தல் சுருட்டையாயும் படியாமலு மிருந்தால் கண்ட தைலங்களால் உங்களுக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகாது ஸவஸதிக் வாசனை கூடப்பட்ட ஆமணக்கெண்ணை. உங்கள் தலை மயிரின் அழகை வெளிப்படுத்தி கூந்தல் நன்ருக வாரிக் கொள்ளும்படி உதவுகிறது. அதி மனோஹரமான வாசனை யுடையதால் ஸ்வஸ்திக் பரிமள ஆமணக்கெண்ணையை யெதார்தம் தெரிந்த ஆடவரும் பெண்டிடும் விரும்பிப் போற்றுகிருர்கள்.

இதர உயர்தர ஸ்வஸ்திக் தயாரிப்புகள் காந்தி ஸோப், ஸ்வஸ்திக்
க்ஷவர ஸோப், சலவை ஸோப்புகள்,
கோவாலின் பிராந்ட் வனஸ்பதி முதலியன.



வாசனைகூடப்பட்ட ஆமணக்கெண்ணை

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட், பம்பாய்

SHTL.PT Som. 21 Tamil

கேளுங்கள் !!

ஸ்டார் ஆப் இந்தியா
பென்ஸில்களுக்கு

மதராஸ் பென்ஸில் பாக்டரி

உயர்தர அச்சுவேலைகளுக்கும்
லித்தோ பிரிண்டிங்குக்கும்

ஹோ & கம்பெனி

எல்லாவிதமான உயர்தர
ஸ்டேஷனரி சாமான்களுக்கு

வி. பெருமாள்செட்டி & சன்ஸ்

நெ. 5, ஸ்டிஞ்சர்ஸ் தெருவு

சென்னை—1

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி

லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள் :

5,00,000 நூற்கும் கதிர்கள்	ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல்.	நம்பர் 80 வரை நூல்கள்

●

நாங்கள் சப்ளை செய்வது:

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக் கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக் கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

●

தற்காலம் நூல் விநியோகம் கட்டுப்பாடு செய்யப்பட்டிருப்பதால், உங்கள் தேவைக்கு உங்கள் மாகாணம் அல்லது ஸ்டேட்டில் உள்ள துணிக் கட்டுப்பாடு அதிகாரிக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்

சர்வதாரி	வைகாசி
மலர் 15	இதழ் 2

சக்தி

மெய்ப் பொருள் காண்பது அறிவு

தமிழ் நாட்டுக்குப் பெருமை

தமிழர் தலைவர் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் ஜூன் 21-ம் தேதியிலிருந்து உத்தியோக பூர்வமாக இந்திய நாட்டின் தலைமை ஸ்தானத்தை ஏற்கப் போகிறார். சமீப காலத்தில் தமிழ் நாட்டார் எவருக்கும் இப்படிப்பட்ட அகில இந்திய தலைமைப் பீடம் கிடைத்ததில்லை. இப்பொழுது கவர்னர் ஜெனரல் பதவியில் தமிழராகிய ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரை நியமித்திருப்பது கண்டு தமிழர்கள் பூரிப்படைகிறார்கள். இன்று இந்தியாவில் காஷ்மீரப் போர், ஹைதராபாத் தகராறு, மூலைக்கு மூலை முதலாளி—தொழிலாளி போராட்டங்கள், சோற்றுப் பஞ்சம், துணிப்பஞ்சம் இப்படிப்பட்ட பல பிரச்னைகள் ஏற்பட்டிருக்கின்றன. தவிரவும் இந்திய அரசியலை வகுக்க வேண்டிய மகத்தான பொறுப்பையும் பாஷாவாரி மாகாணங்களை ஏற்படுத்தவேண்டிய மிகப் பெரிய காரியத்தையும் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. இந்த நிலையில் இந்திய அரசியல் ஞானிகளில் பிரசித்தி பெற்றவராக உள்ள நம் தலைவர் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் இந்திய தேசத்துக்குத் தலைமை பூண்டது மிகவும் பொருத்தமான காரியமாகும். இவருடைய தலைமையில் பிரச்னைகள் நீங்கிய, சுபிட்சமான நவ இந்தியா உதயம் செய்யும் என எதிர்பார்க்கிறோம்.

காலச்சுழல்

பாரதிக்கு விடுதலை:

சென்ற அக்டோபர் மாதம் எட்டயபுரத்தில் பாரதி மண்டபத் திறப்பு விழாவின்போது, ஸ்ரீ கிராமணியார், ஸ்ரீ ஜீவானந்தம் முதலியவர்கள் நாட்டு மக்கள் நலமுற்று வாழ எண்ணி, பாட்டிலே தனி இன்பத்தை நாட்டிய பாரதியின் பாடல்கள் தனிப்பட்ட நபரின் சொத்துரிமையாயிருக்கும் விஷயத்தைக் குறிப்பிட்டு, நாட்டுக்கே பொதுவான பாரதியின் பாடல்கள் நாட்டின் பொதுச் சொத்து ஆக வேண்டும் என்று கூறினார்கள். அதற்கு அந்த விழாவில் எந்தவித எதிரொலியும் ஏற்படவில்லை. சமீபத்தில் சென்னையில் சில தமிழ் எழுத்தாளர்கள் கூடி, இதே நோக்கத்தை இயக்க ரீதியாக வற்புறுத்த வேண்டும் என்ற கொள்கையோடு பாரதி விடுதலைக் கழகம் என்ற சங்கத்தை ஸ்தாபித்தனர். அதன் காரணமாக நாட்டின் பல திக்குகளிலிருந்தும் அதற்கு ஆதரவு தரும் எதிரொலிகள் கிளம்புகின்றன. தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவரும் இம் முயற்சிக்கு ஆதரவு தருவதாகக் கூறியுள்ளார். நகரசபைகள், எழுத்தாளர் சங்கங்கள், பத்திரிகைகள், வாலிபர் சங்கங்கள் எல்லாம் இதற்கு ஆதரவு தருகின்றன. பாரதி பாடல்களைப் பதிப்பிக்கும் உரிமையும், பாடல்களை, திரையிலும் இசைத் தட்டிலும் பயன்படுத்தும் உரிமையும் தனிப்பட்ட நபர்கள் கையில் இருக்கும் விஷயம் எல்லோரும் அறிந்ததே. பாரதி பாடல்களை தேசச் சொத்து ஆக்குவதை நாம் ஆதரிக்கிறோம். இது விஷயத்தில் பாரதி விடுதலைக் கழகத்தார் எண்ணுகிறபடி அரசியலாரே, இந்த நற்பணியை நிறைவேற்றி வைப்பது நலம். நாட்டின் பல திசைகளிலிருந்தும் ஆதரவு பெருகி வருவதைக் கண்டும், அரசியலார் மக்கள் விருப்பத்தை நிறைவேற்றி வைப்பதில் தயக்கம் காட்டக்கூடாது. பாரதி தமது காலத்தில் சம்பாதித்த ஒரே சொத்து அவருடைய பாடல்கள்தான். ஆகவேதான் அந்தப் பாடல்களை, அவருடைய மனைவி மக்கள் பாரதி விட்டுச்சென்ற சொத்தாக அதைக் கருதி விட்டார்கள். ஆனால், இன்று பாரதி பாடல்களைப் பொதுச் சொத்து ஆக்குவதன்மூலம் பாரதியின் குடும்பத்தாருக்கு பிரயோஜனம் இருக்குமா என்று யோசிக்கலாம். இது விஷயத்தில் அரசியலாரே ஒரு தகுந்த தொகையை, பாரதியின் குடும்பத்துக்கு சன்மானமாகக் கொடுத்து, பாரதியின் பாடல்களை, நாட்டுமக்கள் விருப்பப்படி பொதுச் சொத்து ஆக்குவதற்கு உடனே ஆவன செய்ய வேண்டுமென்று கூறுகிறோம்.

பாலஸ்தீன் யுத்தம்:

பாலஸ்தீன் கடந்த 25 வருஷங்களாக பிரிட்டனுடைய தர்மகர்த்தா மேற்பார்வையின் கீழ் இருந்து வந்தது. பிரிட்டன் தர்மகர்த்தாவாக இருந்தபோதே பாலஸ்தீனம் ரணகளரியாக இருந்துவந்தது. பாலஸ்தீனத்தில் பெரும்பான்மையாக உள்ள அரேபியர்கள் தங்களுக்குத்தான் பாலஸ்தீனம் சொந்தம் என்று கூறுகிறார்கள். அநேக வருஷகாலமாக பாலஸ்தீனத்தில் அரேபியர்கள் தான் வாழ்ந்து வருகிறார்கள். யூதர்களோ, பூர்வீக சரித்திரச் சான்றுகளை காட்டி 'பாலஸ்தீனத்தில் எங்களுக்கும் பங்குண்டு' என்கிறார்கள்; புதிதாக யூதர்கள் இங்கே குடியேறத் தொடங்கிவிட்டார்கள். இந்த தகராறைத் தீர்க்க ஐ. நா. சபை பாலஸ்தீனத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று கூறியது. இதை அரேபியர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. கடைசியில் பிரிட்டன் 14—5—48 இரவு 12-மணிக்குத் தன் தர்மகர்த்தா உத்தியோகத்தை முடித்துக்கொண்டு பாலஸ்தீனத்தை விட்டுக் கிளம்பிவிட்டது. பிரிட்டன் போய்விட்டாலும் பிரிட்டனின் கைபட்டிருந்தால் மஞ்

சனும் கரியாகும் என்பது உலகப் பிரசித்தம். இப்போது யூதர்கள் இஸ்ரேல் நாடு என்ற பெயரிட்டு தங்கள் நாட்டை பாலஸ்தீனத்தில் ஸ்தாபித்துக் கொண்டார்கள். இதை அமெரிக்காவும் அங்கீகரித்துவிட்டது. ஆனால் அரேபியர்கள் விடாப்பிடியாக யூதர்களை எதிர்த்துப் போரிடுகிறார்கள். எகிப்தும் அரேபியருக்கு உதவியாகப்போய் யூதர்கள் மீது படை எடுத்துவிட்டது. இனி மற்ற முஸ்லிம் நாடுகளும் எகிப்தைப் பின்பற்றும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இனி வல்லரசுகளும் ஆளுக்கொரு கட்சியில் சேர்ந்தால் அப்புறம் உலக யுத்தம்தான். பாலஸ்தீனத்தைப் பிடித்த கெட்டகாலம் பாலஸ்தீனத்துடன் நிற்குமா, அல்லது உலகத்தையும் சேர்த்துப் பிடிக்குமா என்பதே இன்று கேள்வி.

பாஸிஸக் கட்சி:

ஆஸ்வால்டு மோஸ்லி என்ற ஆங்கிலேயரைப் பற்றிப் பலருக்குத் தெரிந்திருக்கலாம்; தெரியாமலும் இருக்கலாம். இவர் ஒரு பாஸிஸ்ட். யுத்த காலத்தில் தாம் பிறந்த நாடாகிய இங்கிலாந்துக்கே துரோகம் செய்து, ஹிட்லருக்கு ஐந்தாம் படையாக ஒத்துழைத்தவர். இதனால் இவருக்கு மரண தண்டனை கூடக் கிடைக்கும் போல் இருந்தது. ஆனால் அப்போது இங்கிலாந்தின் ஆட்சி பீடத்தில் இருந்தவர்கள் பாஸிஸ்ட்கள் இல்லை என்றாலும் பாஸிஸ புத்தியுடையவர்களாக இருந்தமையால் தானோ என்னவோ ஆஸ்வால்டு மோஸ்லிக்கு விடுதலை கிடைத்தது. இப்போது அவர் தம் தலைமையில் ஒரு புதுக் கட்சியை ஆரம்பித்திருக்கிறார். உலகமெங்கும் இக் கட்சிக்குக் கிளைகள் ஸ்தாபிக்கவும் போகிறார்களாம். இந்தியாவில் சென்னையுட்பட சில பிரதான நகரங்களில் இக் கட்சியின் கிளைகளை நாட்ட முயற்சி செய்கிறார்களாம். வங்காளி ஒருவர் இந்தியாவில் இந்தக் கட்சிக்கு ஆள் சேர்க்கும பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார். பாஸிஸ்ட் கட்சியைப் போன்ற நாசக் கட்சியை உலகம் கண்டதில்லை என்ற உண்மையை யுத்தகாலத்தில் தெரிந்துகொண்டிருப்போம். இந்தக் கட்சியை இவ்வளவு பகிரங்கமாக நடமாட அனுமதிப்பது உலகத்துக்கே ஆபத்து. ஏற்கெனவே கட்சிப் பூசல்களால் அடிபட்டுக் கிடக்கும் இந்தியாவில் இந்தப் புதுக் கட்சி நுழைந்துவிடாதவாறு பொதுமக்கள் தடுத்துக் கொள்ளுவதுடன், இந்திய அரசாங்கமும் சட்ட பூர்வமாகத் தடை செய்ய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பரிதாபம்

ஒரு தனித்தமிழ் அடிகளார் ஒரு கூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கும்போது, "ஆரியர் வருகையினால் பிற்கால நூல்களில் ஏராளமான வடமொழிச் சொற்கள் புகுந்துவிட்டன. நம் மூவர் தேவாரத்திலோ, மணிமொழியாரின் திருவாசகத்திலோ, வடமொழிச் சொற்களைக் காண முடியாது. அவர்களைப் பின்பற்றியே, வடமொழிச் சொற்களை நீக்கி, தனித் தமிழாக எழுதவேண்டும்" என்றார்.

கூட்டத்தில் உட்கார்ந்திருந்த ஒரு பண்டிதசிகாமணி, "நம் சம்பந்தப் பெருமான் தேவாரத்தில் வடமொழிச் சொற்கள் விரவி வருகின்றதை அடிகளார் காணவில்லை போலும்! ஞானசம்பந்தர் என்ற பெயரே எம்மொழியினது?" என்று கேட்டார்.

உடனே தனித்தமிழ் அடிகளார் "என் சம்பந்தப்பெருமானும் பிழைசெய்து விட்டாரே! என செய்வது?" என்று கூறி அந்தக் கூட்டத்திலேயே அழுதுவிட்டாராம். அடிகளின் தனித்தமிழ்ப் பற்றைக் கண்டு எல்லோரும் பிரமித்துப்போய்விட்டார்களாம்!

—பி. எம்.

திருடொழிப்போம்

'மணியன்'

○

வியர்வையெனும் பெயரினிலே ரத்தம் சொட்டும்;
வேல்போலப் பருதிகதிர் கொண்டு குத்தும்;
அயருகின்ற உடலதிலே மழையும் கொட்டும்;
அவதிகளைச் சகித்தே, மண் சுமந்து வாழ்வேன்.

வயிற்றோடு பசிமோதும் உடலினோடு
வாதைமிகும் நோய்மோதும்; இவைகள் தாங்கும்
பயிற்சியிலும் வெற்றிபெற்று, உழைத்துழைத்தே
பத்துமா தங்கடந்து வெற்றிகண்டேன்.

நாளெல்லாம் மண் சுமந்து வாங்கும் கூலி
நாலணாக் காசதனில் கேப்பை வாங்கி
கூழ்சமைத்து குடித்துவிட்டு, மிச்சம்வைத்து
கோத்திருந்தேன் கயிற்றினிலே காலணாக்கள்!

நூற்றறுபதாக அந்தக் காலணாக்கள்
நொந்த எந்தன் மனைசெழிக்க வளர்த்த இன்பம்
சாற்றத்தான் போமோ! இவ் வுலகவாழ்வு
தந்தமுதல் இன்பங்காண்! தமியேர் வாழ்வில்!

மண்சுமக்க நாலணாக்கூலி; ஆனால்
மண்வெட்ட எட்டணா; இந்தக்காசு
மண்வெட்டி ஒன்றுபெறப் போதுமென்று.
மகிழ்ச்சியுடன் காசைஎடுத்தே கடைக்கு

ஏகினேன்; மண்வெட்டி ஒன்று வாங்கி,
எடுத்திட்டேன் கைகளிலே; ஓடும்ரத்தம்
ஆகமெலாம் அமுதமெனப்பாய, நானும்
அளித்தேன்காண், முத்தமொன்று மண்வெட்டிக்கே!

குடிசைக்குக் கொண்டுவந்தேன், மரத்தால் செய்த
கோலொன்று மாட்டினேன்; மனமேதுள்ள
சடுதியிலே வேலைக்குப்போனேன்; ஆங்கே
சலியாது உழைத்தவெனக் கெட்டணாக்கள்!

பத்துநாள், மண்வெட்டி என்க்குத்தந்தி
பசியறியா வாழ்வினிலே, அதனைப்போற்றி
மெத்தையதாம் வைக்கோலில் பேணிவைத்தேன்
மெய்சோர்ந்து கண்ணயர்ந்தேன் ; விழித்தபின்பு

காலையிலே கேப்பையினை வாங்கிவந்து
காய்ச்சிஎந்தன் பாழ்வயிற்றை நிரப்பிவிட்டு
வேலைக்குச் செல்வதற்கு, இறுகும்மண்ணை
வெட்டுகிற ஆயுதத்தைத் தேடிச்சென்றேன்.

தேடினேன் ; காணவில்லை! எங்கே போகும் ?
சிவனையே மிகுத்துவைத்து, வாழ்நாளெல்லாம்
வாடுகின்ற, நான் வாங்கி மறைத்து வைத்த
மண்வெட்டி காணவில்லை! யார் எடுப்பார் ?

வாடுகின்ற என்போன்றோர் எடுத்திருப்பார் !
வாட்டுகிற பசிதீர்க்கும் மார்க்கம் காண
பாடுபடும் ஏழைமக்கள் எடுத்தி ருப்பார் !
பசியினிலே எமையாழ்த்தி, மாயவிட்டு

என்போன்றோர் உணவதனைப் பறித்துத் தாங்கள்
ஏழடுக்கு மாடிதனில், நகையில், காரில்,
பொன்போன்ற பட்டுடையில் பொதித்துவைத்தால்
போக்கெங்கே எந்த மக்குக் களவையல்லால் ?

திருடுகின்ற தொழிலொழிப்போம் ; நம்மை இங்கே
திருட்வைத்தகூட்டத்தை ஒழித்துக்கட்டி,
குருடர்களாய் நமைநோக்கி 'திருடர்' என்பார்
கோளுரையும் கொன்றுலகை வாழ்விப்போமே !

*

நாகர்கோவிலில் இம் மாதம் 14-ம் தேதி நடைபெற்ற எழுத்தாளர் மகாநாட்டு வரவேற்புரையில் கவிமணி கூறியவற்றில் சில பகுதிகள்.

குமரி முனையில் தமிழ்க் குரல்

சி. தேசிக விநாயகம் பிள்ளை

இந் நாட்டிலுள்ள கல்வெட்டுகள், செப்பேடுகள் எல்லாம் தமிழ் என்றேன். பழமையான ஏட்டுச் சுவடிகள் கிடைக்குமானால் அவையும் தமிழாகத்தான் இருக்கும். சிறிது காலத்துக்கு முன்னால் மலபாரிலிருந்து ஒரு ஏட்டுப் பிரதி கிடைத்தது. அது வட்டெழுத்தில் எழுதப்பட்ட திருவாய் மொழி ஏடு. இதைத் தாம் நேரில் பார்த்ததாகக் காலம் சென்ற கே. ஜி. சேஷையர் அவர்கள் என்னிடம் சொன்னார்கள்.

திருவிதாங்கூர் அரசாங்கத்தார், வலை வீசு புராணம் என்றொரு ஏட்டுச் சுவடியைப் புத்தகமாகப் பதிப்பித்திருக்கிறார்கள். இதை மலையாளிகள் யாரும் வாங்குவதில்லை. ஏன்? பாடல்களெல்லாம தமிழ்ப் பாடல்கள். அவர்களுக்குப் பொருள் விளங்காது. தமிழர்களும் வாங்குவதில்லை. காரணம் தமிழ் நூலைப் பழைய மலையாளமென்று நினைத்து மலையாள எழுத்தில் பதிப்பித்திருப்பதுதான். பாடல்களெல்லாம் தூய தமிழ். கதை திருவிளையாடற் புராணத்திலுள்ள வலை வீசு படலத்தைத் தழுவியது.

அரண்மனையிலுள்ள கையெழுத்துப் பிரதிகளிலிருந்து சமீபத்தில் ஒரு ஏடு கிடைத்தது. அரிச்சந்திரன் கதையை வெண்பாவினால் எழுதப்பட்ட ஏடு இது.

இதனைத் தாமதியாமல் நமது திருவிதாங்கூர் பல்கலைக் கழகத்தார் வெளியிடுவார்களென்று நம்புகிறேன். தேடிப் பார்த்தால் இத்தகைய ஏட்டுப் பிரதிகள இன்னும் எத்தனையோ மேல் கடற்கரை நாடுகளிலிருந்து கிடைக்கப் பெறலாம். அவற்றைத் தேடிச் சேர்ப்பது மட்டுமல்ல; இன்னும் வெளிப்படுத்தப் படாமல் கிடக்கின்ற பல கல்வெட்டுகளையும் வெளிக்கொண்டு வருவதும் மிகுந்த பயனைத் தருவதாக இருக்கும்.

இத்தகைய பழந் தமிழ் நாட்டிலே இன்று தமிழ் புறக்கணிக்கப் படுகின்றது. தமிழன் என்றால் ஏளனம் செய்யப்படுகின்றான். எழுத்தாளர் பெரு மக்களே! இதனை எண்ணிப் பாருங்கள்.

ஆனால் இந்த வறட்சியிலுங் கூட தமிழ் விதை இந் நாட்டில கருகிப் போகவில்லை. அவ்வப்போது புலவர் மணிகள் பலர் தோன்றிக் கொண்டு தான் இருந்தார்கள். இன்னும் இருக்கின்றார்கள். காலஞ் சென்ற கவிஞர்களில் மனோன்மணிய ஆசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களும், செண்பகராமன் பள்ளு ஆசிரியர் அவர்களும், பக்தி ரசக் கீர்த்தனைகள பல பாடிய நீலகண்ட சிவம் அவர்களும், சட்ட ஞானமும தமிழாராய்ச்சித் திறமும் வாய்க்கப்பெற்ற கே. ஜி. சேஷய்யரவர்களும், கந்த புராணக் கீர்த்தனை பாடிய நீலகண்ட ஆச்சாரி அவர்களும், சாணக்கிய சூத்திரம் பாடிய அவர் மகன் கணபதி ஆச்சாரி அவர்களும், லலிதா புராணம் பாடிய தேசிக விநாயகம் பிள்ளை அவர்களும் ஆராய்ச்சி வல்லுநரான கே. என். சிவராஜ் பிள்ளை அவர்களும், 'திவான வெற்றி' என்னும் பெயருடைய விற்கதை பாடிய வெற்றி கொண்டான் புலவரும் குறிப்பிடத் தகுந்தவராவர்.

இன்னமுதொழுகுமிசை தமிழிசை இங்கிலத்தோங்கிட, இரவும் பகலும் உழைத்து வரும் இசைக் கவியரசு இலட்சுமண பிள்ளையவர்கள், 'ஓரும் அவதானம் ஒரு நூறு செய்திந்தப் பாரில் புகழ் படைத்த பண்டிதராம்' செய்குதம்பிப் பாவலர் அவர்கள், கம்பன் கவியின் கனியமுதை ஊட்டி நம்மை அம்புவியிலே தேவராய் ஆக்கி வரும் குமரேச பிள்ளை அவர்கள் முதலியோர் இன்றைய தமிழ் நாட்டில் தமிழ்ப் புலவரின் பரம்பரையினராய் விளங்கிக்கொண்டிருக்கிறார்கள். இளம் புலவர்களும் எத்தனையோ பேர் இக்காலத்தில் இருக்கின்றனர். அவர்கள் பெயரை எல்லாம் இங்கு எடுத்துக் கூற நேரமில்லை.

* * *

தமிழில் எண்ணற்ற புத்தகங்களும் பத்திரிகைகளும் தோன்றத் தலைப்பட்டுவிட்டன. இப் பக்கம் பார்த்தால் பத்திரிகை; அப் பக்கம் பார்த்தால் சஞ்சிகை. இவை நம் நாட்டில் எழுத்தாளர்களின் தொகை நாளுக்கு நாள் ஏறிக்கொண்டு வருவதையே காட்டுகின்றன. இதைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது ஒரு நண்பர் சொன்னார்: "எண்ணற்ற சஞ்சிகைகளும் புத்தகங்களும் தோன்றிய வண்ணம் இருக்கின்றனவே, இவற்றை வாங்குபவர் யார்? படிப்பவர் யார்? எங்கே சேமித்து வைப்பது? இலக்கிய உலகில் கருப்பத் தடை செய்யவேண்டும் காலம் வந்து விட்டது போலிருக்கிறதே" என்றார். அதற்கு நான் "கவலைப் படவேண்டாம். வாழ்க்கைப் போராட்டத்தில் வலுவுள்ளது நிலைக்கும்; வலுவற்றது மறையும்; இது நியதி" என்றேன். தமிழுலகம் புத்தகமின்றி வறண்டு கிடந்தது. இப்பொழுது தான் ஊற்றுக் கிளம்பிப் பாயத் தொடங்கியிருக்கிறது. ஆதலால் கருப்பத் தடைக்கு இது காலமல்ல என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர்.

ஆனால் நான் எழுத்தாளர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். 'தமிழில் அது இருந்தது; இது இருந்தது' என்று பழம் பெருமை பேசிக்கொண்டிருக்காமல் எது தேவையோ அத்துறையில் இறங்கி அவர்கள் உழைக்கவேண்டும். முத்தமிழ் முத்தமிழ் என்று முழக்கம் செய்கிறார்கள். இசைத் தமிழில் எத்தனை புத்தகங்கள் இருக்கின்றன? பண்டை நூல்களைப் படித்துவிட்டு நாம் 'பெருநாரை' 'பெருங்குருகு' என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருந்தால் இசை ஞானம் உண்டாகிவிடுமா? அந்த நாரைகளும் குருகுகளும் மறைந்து போய்விட்டன. இனி நம்முடைய வலைக்குள் அகப்படப் போவதில்லை. ஒரு ஏழை உண்ணச் சோறும் உடுக்கத் துணியுமில்லாமல் தவிக்கிறான். அவனிடத்தில் அவனுடைய பாட்டனும் கொள்ளுப்பாட்டனும் பெரிய கப்பலோட்டி வியாபாரிகளாயிருந்தார்கள் என்று பழம் புராணம் படிப்பதனால் என்ன பயன்?

நாடகத் தமிழ் என்பதன் பொருள் தான் என்ன? நாடகம் என்னும் சொல்லுக்கு "ட்ராமா", நடனம் என்ற இரண்டு பொருள் உண்டு; கூத்துக்கும் அப்படியே.

சில தமிழர்களிடம் இதைப்பற்றிப் பேசினால் தமிழிலிருந்த இசைத் தமிழ் நாடகத் தமிழ் நூற்கள் கொஞ்சமா? அவையெல்லாம் கபாடபுரத்தைக் கடல் கொண்டதோடு போய்விட்டன என்று சொல்லி நம் வாயை அடைத்துவிடுகிறார்கள். போய்விட்டன, போய்விட்டன என்று சொல்லிக் கரையிலிருந்து அலையை எண்ணிக்கொண்டிருந்தால் அவை வந்து கரையேறுமா? புது நூல்கள் ஆக்குவதுதானே செய்யத் தக்க முயற்சி. தமிழில் நாடகங்கள் அதிகமாக இல்லை. இசையைப்பற்றி வடமொழி தெலுங்கு முதலியவற்றில் இருப்பது போன்ற நூல்கள் தமிழில் உண்டா? தற்காலத்தில் சில அறிஞர்கள் நாடகங்கள் எழுதி வெளியிடத் தொடங்கியிருக்கின்றனர். அவர்களுடைய முயற்சி பெரிதும் பாராட்டற்குரியது. செந்தமிழ்ச் செல்வி பல காளிதாஸர்களையும் ஷேக்ஸ்பியர்களையும் இப்ஸன்களையும் பெர்னார்ட் ஷாக்களையும் பிறப்பித்து உதவுவாளாக.

கிராமத்திற்குச் செல்லுங்கள்

○

மகாத்மா காந்தி

> நகரங்கள், கிராமங்களைச் சுரண்டிக் கொண்டிருக்கின்றன. படித்தவர்கள் நகர வாசத்தை மேற்கொண்டு விடுகிறார்கள். கிராம வாசிகள வாழ்வில் லப் பூச்சிகளாக, வறுமையில் தத்தளிக்கிறார்கள். இந்த அநியாயம் ஒழிவது எப்படி?

இந்தியாவை அதன் ஒரு சில நகரங்களில் போய் கண்டுவிட முடியாது; அதிலுள்ள ஏழு லட்சம் கிராமங்களில்தான் இந்தியாவைக் காண முடியும். இது என்னுடைய அபிப்பிராயம்; நான் எண்ணற்ற தடவைகள் இப்படியே திரும்பத் திரும்பச் சொல்லிவந்திருக்கிறேன். ஆனால், நகர வாசிகளாகிய நாமோ, இந்தியாவின் சொரூபத்தை இந்திய நகரங்களில் காணலாம் என்றும், கிராமங்கள் நகரவாசிகளாகிய நம் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உண்டாக்கப்பட்டவை என்றும் நம்பி வந்திருக்கிறோம். கிராமத்திலே வாழும் அந்த ஏழை மக்கள் வயிறார உண்ணுகிறார்களா, அவர்களுக்குக் கட்டுவதற்குப் போதுமான துணி கிடைக்கிறதா, வெயிலுக்கும் மழைக்கும் பாதுகாப்பாக இருக்க அவர்களுக்கு வீடு உண்டா என்பனவற்றைப் பற்றி நாம் விசாரித்து அறிந்துகொள்ள ஒரு போதும் நினைத்தது கிடையாது.

பொதுவாக நகரவாசி கிராமத்தானைச் சுரண்டியே வந்திருக்கிறான் என்பதையும், அந்த ஏழையின் சாப்பாட்டைச் சாப்பிட்டே வாழ்ந்து வந்திருக்கிறான் என்பதையும் நான் அறிவேன். அநேக பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் இந்திய மக்களின் நிலையைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். ஆனால், எனக்குத் தெரிந்த வரையிலும் ஒருவராவது இந்தியாவின் கிராமவாசி தன் உடலையும் உயிரையும் பேணுவதற்குரிய வசதிகளைப் பெற்றிருக்கிறான் என்று சொன்னதாகத் தெரியவில்லை. அதற்குப் பதிலாக ஏராளமான ஜனக்கூட்டம் பட்டினி பசியோடு வாழ்ந்து வருவதாகவும், நூற்றுக்குப் பத்துப் பேர் அரைப்பட்டினியோடு வாழ்ந்து வருவதாகவும், மீதியுள்ள கோடிக் கணக்கான மக்கள் ஆபாசமாக உள்ள ஒரு சிறங்கை உப்பு, கொஞ்சம் மிளகாய், தீட்டிய அரிசி அல்லது வேறு ஏதாவது ஒரு தானியம் இவற்றைக் கொண்டு ஜீவிப்பதாகவும் எழுதியிருக்கிறார்கள்.

நம்மில் யாரையாவது ஒருவரை மேற்சொன்ன சாப்பாட்டைச் சாப்பிட்டு வரும்படி சொன்னால், நாம் ஒரு மாதத்துக்குமேல் உயிரோடிருப்போம் என்ற நம்பிக்கை நமக்கு ஏற்படாது; உயிரோடிருந்தாலும், நம்முடைய மூளையும் அறிவும் அடியோடு கெட்டுப்போகும் என்று பயப்படுவோம். இல்லையா? ஆனாலும் கிராமவாசிகள் இதே நிலையில் ஒவ்வொரு நாளையும் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள்.

மக்களில் நூற்றுக்கு எழுபத்தைந்துபேர் விவசாயிகள். ஆனால் அந்தக் கிராமவாசிகளுடைய உழைப்பின் பலனை நாம் பறித்துக் கொள்ளுவதானாலும், அல்லது பிறர் பறித்துக்கொள்ள நாம்

அனுமதிப்பதானலும், சுயராஜ்யம் என்ற உணர்ச்சி நமக்கு ஏற்படப் போவதில்லை.

கிராமத்து மக்களுக்கு நாம் மாபெரும் தீங்கை இழைத்து விட்டோம். இந்தப் பாவத்திற்குப் பிராயச்சித்தம் செய்துகொள்ளுவது எப்படி? கிராமவாசிகளின் கெட்டொழிந்த தொழில்களும் கலைகளும் புத்துயிர் பெறவும், அவர்கள் நிரந்தரமான ஒரு 'மார்க்கெட்'டைப் பெறவும் நாம் உதவியளிப்பதன் மூலம்தான் நாம் பிராயச்சித்தம் செய்து கொள்ள முடியும்.

காய் கறிகளையும், கீரை வகைகளையும் அதிகச் செலவில்லாமல் அவர்களே பயிர்செய்துகொள்ளவும், அதன் மூலம் சுக தேகிகளாக வாழவும் அவர்களால் முடியும் என்பதை நாம் அவர்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டும். கீரைகளை அவிக்கும்போது கீரைகளில் உள்ள பெரும்பாலான ஜீவ சத்துக்களெல்லாம் கெட்டுப்போய் விடுகின்றன என்பதையும் நாம் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

கிராமவாசிகளுக்கு இன்று தேவையானவை எண்ணும் எழுத்தும் அல்ல; அவர்களுடைய பொருளாதார வாழ்க்கை எப்படிப்பட்டது என்பதையும் அந்தப் பொருளாதார வாழ்க்கையை எப்படிச் சீர்படுத்துவது என்பதையும் அவர்களுக்கு நாம் அறிவிக்கவேண்டும். இன்று அவர்கள் கேவலம் யந்திரங்களைப் போல வேலை செய்கிறார்கள்; பொறுப்பு உணர்ச்சியோ, சுற்றுப் புறங்களைப்பற்றிய கவனமோ, தாங்கள் செய்யும் வேலையில் சந்தோஷமோ இல்லாமல் உழைக்கிறார்கள்.

எப்படி நேரத்தையும், சுகாதாரத்தையும், பணத்தையும் திட்டப்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும் என்பதை நாம் அவர்களுக்குப் போதிக்க வேண்டும். லயனல் கர்ட்டிஸ் நம் கிராமங்களை சாணிக்குவியல்கள் என்று கூறினர். இந்த சாணிக்குவியல்களை எல்லாம், முன்மாதிரியாக இலங்கும் கிராமங்களாக நாம் மாற்றி யமைக்க வேண்டும். சுத்தமான காற்று வீசும் பிராந்தியத்தில் வாழ்ந்தாலும், நம் கிராமவாசிகளுக்குச் சுத்தமான காற்று கிடைப்பதில்லை. புத்தம் புதிய நல்லுணவு கிடைக்கும் இடத்தில் கிராமவாசிகள் வாழ்ந்து வந்தாலும் அவர்களுக்குப் புத்தம் புதிய நல்லுணவு கிடைப்பதில்லை. நான் ஏதோ உபதேசியாரைப் போலப் பேசுகிறேன்; ஏனென்றால் நான் உபதேசம் செய்து உத்தாரணம் செய்யப் பாடுபடுவது கிராமங்களை சௌந்தரிய சாதனங்களாக மாற்றி யமைப்பதற்குத்தான்.

கிராமத் தொழில்களுக்குப் புத்துயிர் அளிப்பதென்பது, கதர் இயக்கத்தைப் பரப்புவதுதான். கையால் நூற்று நெய்த உடை, கையால் செய்த காகிதம், கைக்குத்தல் அரிசி, வீட்டிலே தயாரிக்கப்பட்ட ரொட்டி, வெண்ணெய் முதலியவை யாவும் மேலை நாடுகளில் அசாதாரணமான வஸ்துக்களல்ல; ஆனல் இந்த வஸ்துக்களுக்கு இந்தியாவில் உள்ள முக்கியத்துவத்தில் நூற்றில் ஒருபங்குகூட மேலை நாடுகளில் இல்லை. நம்மைப் பொறுத்த மட்டிலும் கிராமத் தொழில்கள் புத்துயிர் பெறுவது கிராமவாசிகளுக்கு வாழ்வாகவும், கிராமத் தொழில்கள் நசிப்பது கிராமவாசிகளுக்குச் சாவாகவும் இருக்கின்றன.

கிராமத்தில் ஒவ்வொரு வீட்டிலும் மின்சார வசதி இருக்கும் பட்சத்தில் கிராமவாசிகள் மின்சார சக்தியின் உதவியைக் கொண்டு தங்கள் தொழில்களைச் செய்துவரலாம். அதுபற்றி எனக்குக் கவலையில்லை. அப்படியென்ருல், கிராம சமுதாயத்தில் அல்லது கிராம ராஜ்யத்தில் மேய்ச்சல் தரைகள் இருப்பதைப் போல மின்சார நிலயங்களும் இருக்கும். ஆனல், மின்சார வசதியோ யாதொருவிதமானயந்திர வசதியோ இல்லாமல் இருக்கும் இடங்களில் வேலையற்று இருப்பவர்கள் என்னசெய்வது?

கல்வியறிவு என்ற லாபத்தை அடைந்தவர்களால் அசட்டை செய்யப்பட்டு கிராமங்கள் எல்லாம் அநேக காலம் கஷ்டத்தில் ஆழ்ந்து கிடந்திருக்கின்றன. கல்வியறிவு உடையவர்கள் நகரவாசத்தைத் தேடிக்கொண்டார்கள். சேவை மனப்பான்மை உள்ளவர்களைக் கிராமங்களில் போய் வசித்திருக்கச் செய்து, கிராமவாசிகளுக்குச் சேவை செய்வதையே வாழ்க்கையாகக் கொள்ளும்படி தூண்டி, கிராமங்களுடன் ஒரு நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளச் செய்யும் முயற்சியே கிராம இயக்கம் என்பது.

கிராம சமுதாயங்கள் புத்துயிர் பெறச் செய்ய வேண்டும். இந்தியக் கிராமங்கள் இந்திய நகரங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வந்துள்ளன. நம் நகரங்கள் அந்நிய நாடுகளுக்குச் சந்தைகளாக மாறி, அந்நிய நாடுகளிலிருந்து, மலிவான, மட்டமான சாமான்களை இறக்குமதி செய்து குவிக்கத் தொடங்கியதும் கிராமங்கள் தேய்ந்து போய்விட்டன. இந்தியாவும் வறுமையில் ஆழ்ந்து விட்டது.

சுயநலத்துக்காகக் கிராமங்களைச் சுரண்டி வந்ததை விட்டுவிட்டு கிராமங்களிலிருந்து நகரங்கள் பெற்றுவந்த சக்திக்கும் ஜீவாதாரத் தேவைகளுக்கும் பிரதிபலனுக, நகரங்கள் கிராமங்களுக்குத் தங்கள் கடமையைச் செய்ய வேண்டும் என்ற உணர்ச்சி ஏற்பட்டால்தான் கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் இடையே சுமுகமான ஒரு நல்லுறவு ஏற்படும். இந்தச் சமூகப் புனருத்தாரண வேலையில் நகர மக்கள் ஈடுபடுவதானல், அவர்களுக்கு அளிக்கப்படும் கல்விப் பயிற்சி கிராமங்களின் தேவைகளை அனுசரித்ததாக இருக்கவேண்டும்.

கிராம இயக்கமானது கிராமவாசிகளைப்போல நகரவாசிகளுக்கும் ஒரு நல்ல கல்வியாகத் திகழ்கிறது. நகரங்களிலிருந்து செல்லும் ஊழியர்கள் கிராமிய மனப்பான்மையைத் தங்களுக்குள்ளே வளர்க்க வேண்டும்; கிராமத்து மக்களைப்போல வாழும் முறையைக் கற்றுக் கொள்ளவேண்டும். இதற்கு, கிராமவாசிகளைப்போல ஊழியர்களும் பட்டினி கிடக்க வேண்டும் என்று அர்த்தமல்ல; இப்படிக்கூறியது பழைய வாழ்க்கை முறையில் ஒரு பெரிய மாறுதல் ஏற்படவேண்டும் என்பதற்காகத்தான்.

லட்சியமாக இலங்கும் கிராமவாசிகளாக நாம் ஆகவேண்டுமே ஒழிய, சுகாதாரத்தைப் பற்றி விசித்திரமான அபிப்பிராயங்களை வைத்துக்கொண்டும், எப்படிச் சாப்பிடுவது, எதைச் சாப்பிடுவது என்பவைபற்றி யாதொரு கவனமும் செலுத்தாமலும் இருக்கும் கிராமவாசிகளாக நாம் ஆகக்கூடாது. பெரும்பாலான கிராமவாசிகளைப் போல எப்ப

டியோ சமையல் செய்து எப்படியோ சாப்பிட்டு, எப்படியோ வாழ்வதைப் போல வாழக் கூடாது. அவர்களுக்கு லட்சிய உணவு இன்னது என்பதை நாம் காட்டுவோமாக! விருப்புக்களுடனே அல்லது வெறுப்புக்களுடனே அவர்களிடம் நாம் செல்லாமல், அந்த விருப்பு வெறுப்புக்களின் அடிப்படைக் காரணங்களை அறிவோமாக!

படை பதைக்கும் வெயிலில் குனிந்த தலை நிமிராமல் உழைக்கும் கிராம வாசிகளைப்போல நாம் மாறவேண்டும். கிராமவாசிகள் தாங்கள் குளிப்பதற்கும், துணிமணிகளைத் துவைப்பதற்கும், சட்டி பானைகளைக் கழுவுவதற்கும், ஆடு மாடுகளுக்குத் தண்ணீர் காட்டி, அவற்றைக் குளிப்பாட்டுவதற்கும் பயன்படுத்தும் குட்டையிலிருந்து எப்படித் தண்ணீரை அள்ளிக் குடிக்க மனம் வரும் என்பதையும் ஆராயவேண்டும். அப்பொழுது தான் நாம் பொது மக்களுக்கு உண்மையில் பிரதிநிதித்துவம் வகிக்க முடியும். கிராமவாசிகளும் நமக்குச் செவி சாய்ப்பார்கள். மேற்கூறியவற்றைச் செய்யாத வரையில் எதுவுமே சாத்தியமாகாது.

கிராமப் பொருளாதாரப் புனரமைப்பு, உணவுச் சீர்திருத்தத்தில் தொடங்குகிறது என்றால், கிராமத்து மக்கள் தாங்கள் இழந்த ஆரோக்கியத்தை மீண்டும் பெறுவதற்குரிய எளிய மலிவான உணவுவகைகளைக் கண்டுபிடிக்க வேண்டும். இப்போது கிராமத்து மக்களைத் துன்புறுத்தி வருகிற அநேக நோய்களை ஒழிக்க வேண்டுமானால் அவர்கள் தங்கள் உணவில் பச்சைக் கீரைகளைச் சேர்த்துக் கொள்ளவேண்டும். கிராமவாசிகளின் உணவில் ஜீவசத்து குறைந்திருக்கிறது; இதைச் சரிக்கட்டுவதற்குப் புத்தம் புதிய பச்சைக் கீரைகளை அவர்கள் சேர்த்துக் கொள்ளவேண்டும். நல்ல முறையில் பச்சைக் கீரைகளைச் சேர்த்துக் கொள்ளுவதன் மூலம் பழைய உணவு முறைகளில் ஒரு புரட்சி ஏற்படுத்திவிட முடிவதுடன், பாலிலிருந்து பெறக்கூடிய ஜீவசத்தைப் பச்சைக் கீரைகளிலிருந்தே பெற்றுவிட முடியும்.

நகரங்கள் தம்மைத்தாமே கவனித்துக்கொள்ளும் சக்தி பெற்றிருக்கின்றன. ஆகவே நாம் கிராமங்களை நோக்கித்தான் திரும்ப வேண்டும். கிராமவாசிகளின் தப்பபிப்பிராயங்களையும், மூட நம்பிக்கைகளையும், குறுகிய மனப்பான்மையையும் போக்க வேண்டும். இதைச் செய்வது, நாம் அவர்களுடன் தங்கியிருந்து, அவர்கள் சுகதுக்கங்களைப் பகிர்ந்துகொண்டு, அவர்களிடையே கல்வியறிவையும், பொது அறிவையும் பரப்புவதன் மூலந்தான் சாத்தியப் படுமே ஒழிய வேறு எந்த வழியிலும் சாத்தியப்படாது.

✲

கால வித்தியாசம்

பழைய காலத்தில் பணத்தை மிச்சம் பிடிப்பவன் லோபி; இப்போது பணத்தை மிச்சம் பிடிப்பவன் ஒரு அதிசயம்.

—ஸன்ஷைன் மாகஸின்

இரண்டு வாலிபர்கள் சுற்றுப் பிரயாணம் செய்த கதை இது. அந்தக் கார்டாறு மாத காலத்தில், இந்த இருவரின் குணசித்திரங்களே மாறிவிடுகின்றன. சந்தர்ப்பகோளாறுகளால், மனித சித்திரம் நிலைப்பான உருவைப் பெறுது, அலை மோதும் சுழியைப் போலவும் ஆற்றைப் போலவும் இயக்க உருவிலேயே இருந்து கொண்டிருக்கிறது என்று சொல்லுகிறது கதை.

★

கார்டாறு மாதம்

○

கு. அழகிரிசாமி

அறிமுகம் :

போன வருஷத்தில் ஒருநாள். அன்று காலை ஏழு மணியிருக்கும். ஊருக்கு மேல் புறத்தில் இருக்கும் 'இளையவர்' வீட்டுக் கிணறு, அன்று அந்தக் கிராம வாசிகள் சிலரின் பட்டி மண்டபம் ஆகிவிட்டது. கிராமத்திலே, ஏதோ ஒரு பெரிய வகுப்பில் 'பெயி'லாய்ப் போனவர்களும் வேலையற்றிருக்கும் வாலிபப் படிப்பாளிகளும் (இவர்கள்தான் ஊரில் காலையில் குளிப்பவர்கள் ; சொகுசுக்காரர்கள்) கிணற்றுக்குள்ளே குளிப்பதும் வேஷ்டி துவைப்பதுமாக இருந்ததோடு ஒரு முக்கியமான கிராமச் செய்தியைப் பற்றியும் விமர்சனம் செய்துகொண்டிருக்கிறார்கள். செய்தி என்னவென்றால் அந்த ஊரிலே, ஒரு ஆசாமி இன்னொருவனுடைய மனைவியைக் கூட்டிக்கொண்டு ரகசியமாக இரவோடு இரவாக ஊரைவிட்டு ஓடிவிட்டான். இதைப்பற்றித் தான் பேசிக்கொண்டிருக்கிறார்கள், அந்தக் கிணற்றில் குளித்துக் கொண்டிருப்பவர்கள்.

கொஞ்சநேரம் செல்லுகிறது.

குளித்துவிட்டு வீடு திரும்புகிறான் இருபத்தி மூன்று வயது நிரம்பிய ஒரு வாலிபன். வரும் வழியில் பாதி தூரத்தில் அந்த வாலிபனுக்கு எதிராக மற்றொருவன் குளிப்பதற்காக கிணற்றை நோக்கி வந்துகொண்டிருக்கிறான். அவனுக்கும் வயது இருபத்தைந்துக்குள்ளாகத்தான் இருக்கும்.

இருவரும் சந்திக்கிறார்கள்.

"எங்கே? குளிக்கவா?" என்று சம்பிரதாயமாகக் கேட்கிறான் குளித்துவிட்டுப் போகும் வாலிபன்.

"ஆமாம்"

"சமாச்சாரம் தெரியுமா? கீழத் தெருவில்......"

மேற்கொண்டு சொல்லத் தயங்குகிறான் குளித்துவிட்டுப் போகும் வாலிபன்.

மற்றவன், "தெரியும், தெரியும்" என்று சொல்லிவிட்டு தலையைக் குனிந்தவாறே மேற்கே கிணற்றை நோக்கி நடக்கிறான்.

ஒருவனுடைய மனைவியை மற்றொருவன் ரகசியமாக அழைத்துக்கொண்டு ஓடிய செய்தியை மனம் விட்டுப் பேசிக்கொள்ளுவதற்கு இருவருக்கும் நாணம் ; பரஸ்பரம் அவ்வளவு கௌரவத்துடனும், மதிப்புடனும் பழகிக் கொண்டவர்கள் இந்த இருவரும். ஆகவே அந்தச் செய்தி இருவருக்கும் வாயில் வைத்துப் பேசிக்கொள்ளக் கூடாதவாறு அவ்வளவு ரசாபாசமாக இருக்கிறது.

குளித்துவிட்டு வருகிறவன் "ஏண்டா, இந்த விஷயத்தை அவனிடம் சொல்லப்போகிறேனும்?" என்று தனக்குள்ளேயே நினைத்து வெட்கப்படுகிறான்.

குளித்துவிட்டுப் போகும் அந்த வாலிபன், நான்.

மற்றொருவன், என் நண்பன் செல்லையா.

* * *

அதே வருஷம் கார்த்திகை மாதத்தில் செல்லையாவும் நானும் திருவனந்தபுரம் போய் வரலாம் என்று புறப்பட்டோம். இந்தியாவின் பூங்காவனம் என்று குறிப்பிடப்படும் அந்தப் பிரதேசத்தைக் காணவேண்டும் என்ற ஆசை வெகு நாட்களாக மனதில் ஊறிக்கொண்டிருந்தது; காண்பதற்குச் சந்தர்ப்பமும் கிடைத்தது.

முதலில் திருவனந்தபுரம் விஜயம்: மனதில் கற்பனை பண்ணிப் பார்த்த அழகுக்கெல்லாம் புறமுதுகு காட்டிவிட்ட அந்தக் கற்பனையூரின் சௌந்தரிய தரிசனத்தில் எங்களுக்கு ஒரே மனப் பூரிப்பு. கட்டணம் வசூலித்துக் காட்டக்கூடிய ஒரு அலங்காரமான நாடக அரங்கம் போல இருந்தது அந்த நகரத்தின் சுபாவமான தோற்றம். நகரத்தின் ஒவ்வொரு பகுதியும் வேண்டுமென்றே அழகாக இருக்கவேண்டும் என்று பிடிவாதம் பிடித்துக் கொண்டு இருந்தது போன்ற அதியாயமான அழகு! இப்படிப்பட்ட காட்சியைக் காணும் போது மனப் பூரிப்புக்கு என்ன பஞ்சம்? ஆனால் மனப் பூரிப்போடு எங்கள் அனுபவம் நின்றுவிடவில்லை......

கல்லான அகலிகை ராமனுடைய திருவடிஸ்பரிசத்தால் உயிரும் உணர்ச்சியும் பெற்று எழுந்த கதையைப் படித்திருக்கிறோம். அதே போல, இந்தப் புது ஊருக்கு வந்தவுடன் எங்கள் உள்ளத்திலும் உடலிலும் புதுப் புதுச் சக்திகள், புதுப்புது உணர்ச்சிகள் உண்டாகி உயிர் பெற்று நாட்டியமாடுவது போன்ற பிரமை தட்டியது. உண்மையில் அது பிரமையா அல்லது உண்மையா என்பதே சந்தேகம்.

நம் சொந்தக் கிராமத்தில் தவழும் குழந்தை முதல், சாகப் போகும் கிழவன் வரை மனிதக் கூட்டம் முழுவதிற்குமே நம்மைத் தெரிந்திருக்கும்; நம்மைப் புரிந்திருக்கும்; நம்மைப் பற்றிய சித்திரம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் முத்திரை போட்டிருக்கும். இந்தச் சித்திரத்தின் குணா குணங்களை நாமும் கண்டறிந்து, அவைகளை ஒட்டி நம் நடைமுறையை லயப் படுத்தி வாழ்வது நியதி; அதுதான் நேர்மை; அதைத் தவிர்த்தால் வேறு வழியுமில்லை......

இங்கே, இந்த அந்நியப் பிரதேசத்தில் அந்தச் சித்திரம் எவர் உள்ளத்திலும் கிடையாது. நிர்வாணமாகத் தெருவில் நடந்து சென்றாலொழிய யார் எவர் என்று நம்மைக் கவனிக்கும் நபர் ஒருவரைககூட இங்கே காண முடியாது. இந்தக் கட்டு மீறிய சுதந்திரத்தில் கட்டுப்பாட்டை உடைக்கும் ஏதாவது ஒன்றைச் செய்து தீரவேண்டும் என்ற அபிலாஷை எங்கள் உள்ளத்தில் ஒரு பெரியபேயாகத் தலையாட்டம் போடத் தொடங்கிவிட்டதற்கு முதல் சான்று, திருவனந்தபுரம் ஹோட்டல் அறையில் வாழ்க்கையிலேயே முதல்

முறையாக செல்லையா 'சிகரெட்' பிடித்தது.

இருட்டில் உட்கார்ந்து ஆளுக்கொரு சிகரெட்டை இழுத்துவிட்டுக் கட்டையை ஒரு மூலையில் எறிந்துவிட்டோம். ஏதோ அநாசாரமான காரியத்தைச் செய்வதாக, சமூகக்கோட்பாடுகள் உருவாக்கிய மனச்சாட்சி என்ற அந்தப் பல கிறங்காட்டும் பச்சோந்தி மனதைக் கடித்தாலும், இருட்டு நேரமானதால் அதனுல் ஒன்றும் செய்ய இயலவில்லை. மனச்சாட்சி முகத்தில் எழுதும் வெட்கத்தையும் விகாரத்தையும் இருட்டு மறைத்து விடும் என்ற துணிவில் சிகரெட் புகைத்ததைப் பற்றிய சிந்தனை இல்லாமல் படுத்தவர்கள் காலையில் எழுந்து கருகிப் போன சிகரெட் கட்டைகளைப் பார்த்ததும், வெட்கத்தால் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கவே கூசினேம்.

மறுநாள் காலை:

அன்று சிகரெட் வாங்க இருவருக்கும் துணிவு பிறக்காதது மட்டுமல்ல, முதல் நாளைய பாவ காரியத்துக்குத் தன்னையறியாமல் மனம் பரிபூரணமாக மன்னிப்புக்கோரி ஏங்கியது. புகை பிடித்த அந்த ஞாபகம் மறைந்து ஒழியாதா என்று தவிப்பாக இருந்தது இருவருக்கும்......

பத்மனப ஸ்வாமி கோவிலுக்குப் போனேம். கோவிலுக்குப் போகும்போது பாதி வழியில் அருமையான மாம்பழங்களை ஒரு கூடையில் வைத்துக் கொண்டு வந்தாள் ஒரு பெண். அவள் உடம்பில் ஒரே ஓர் அழுக்குப் பாடி; இடையில் ஒரு முண்டு.

பழங்களை விலை கேட்கும் போது பரஸ்பரம் ஒருவர் பாஷை ஒருவருக்குத் தெரியாத நிலையில் இரண்டு கட்சியிலும் பேச்சை விட சிரிப்புக்குப் பிரதானம் கிடைக்கவே, எங்களுக்கிடையே ஏதோ ஓர் உறவு பெருகிக் கொண்டு வந்தது. இந்த விளையாட்டில் சிறிது நேரத்தைப் போக்கிவிட்டு ஓர் அரை டஜன் பழங்களை வாங்கிக் கொண்டு கோவிலைப் பார்த்து நடந்தோம். இந்த இரண்டு பிரம்மச்சாரிக் கட்டைகள் ஊர் வாய்க்குப் பயப்படுவதாகக் கருதாமல், ஒழுக்க சீலத்தையும் பெரிய மனுஷத்தனத்தையும் அனுஷ்டிப்பதாக மனப்பால் குடித்துக் கொண்டு பெண்கள் கூட்டத்தை முள் வேலியாகக் கருதி வீதி விட்டு வீதிசுற்றி நடந்துவருவதை விட்டு, பட்டப்பகலில், ஊரம்பலத்தில் யாரோ ஒரு பெண்ணேடு சிரித்துப்பேசி நேரத்தைப் போக்கியதை நினைக்க நினைக்க விசித்திரமாக இருந்தது. அதே ஜனநடமாட்டம் நிறைந்த தெருவில் மாம்பழத்தைக் கடித்துத் தின்று கொண்டே நடந்தோம். 'தெருவில் வைத்துச் சாப்பிடுவதா?' என்ற என் சம்பிரதாயக் கேள்வியின் எதிர்மறைப் பொருளை உணராத செல்லையா, 'இங்கே நம்மை யாருக்குத் தெரியும்?'' என்ற கேள்வியைப் போட்டு தன்னையும் என்னையும் பரிபக்குவம் செய்துவிட்டான்.

'இங்கே நம்மை யாருக்குத் தெரியும்?' இந்தக் கேள்வியும் இதனுல் பிறந்த துணிவும் இல்லாவிட்டால் அன்று கோவிலுக்குப் போக நேர்ந்திருக்காது. அழகு என்று சொல்லப்படும் எல்லாமே வந்து கூடும் அந்தச் சந்தைக்கு—கோவிலுக்கு—போனது, உண்மையில் பக்திப் பெருக்கினுல் அல்ல; சுயம்வரத்துக்குச் செல்லும் ராஜகுமார்

களின் கும்மாளத்துடன்தான் போனேம்......

அங்கும் சில வேடிக்கைகள்; விளையாட்டுகள்! பழக்காரி உபாக்யானத்தின் மூலப் பொருளை வேறு விதமாக விளக்கும் வேறு சில கட்டங்கள்......

இப்படி மொத்தம் மூன்று நாட்கள் திருவனந்தபுரத்தில் தாமதம்.

வழக்கமாகச் சாப்பிடுவதைப் போல இரட்டிப்புச் சாப்பாடு, சிறு குழந்தைகளைப் போல கண்ணில் பட்ட பண்டங்களையெல்லாம் வாங்குவது, தெரு வழியாகத் தலைப்பாகை கட்டிக் கொண்டு நடப்பது, எங்காவது ஓரிடத்தில் உட்கார்ந்து அங்குள்ள பத்துப் பதினைந்து பேரைக் கண்டும் வெட்கப் படாமல் பாடுவது, எல்லாவற்றையும் விட மேலாகப் 'பழையபடியும் சிகரெட் வாங்குவோமா?' என்று ஏகதேசமாக நினைப்பது...

இந்த நிலையில் திருவனந்தபுரத்தை விட்டுப் புறப்பட்டு, நேராக நாகர்கோவிலுக்கு வந்து சேர்ந்தோம். வழக்கம் போல முதலில் அங்குள்ள லைப்ரரிக்குப் போனேம்; அப்புறம் கோவிலுக்கு. இந்த இரண்டு காரியங்களும் ஆனபிறகு, நாங்கள் ஏற்கெனவே கேள்விப்பட்டிருந்த இரண்டொரு சங்கீத வித்வான்களைக் கண்டு அவர்களுடன் பேசிக்கொண்டிருந்து விட்டுத் திரும்பினேம். இரவில் ஹோட்டலின் மாடியில் அலுப்போடு வந்து படுத்தோம். படுத்ததும் செல்லையா அப்படியே சிறிது நேரத்தில் உறங்கிவிட்டான். மாலையில் நேரங்கழித்துச் சாப்பிட்ட 'ஸ்ட்ராங்' காப்பியின் போதை என்னைத் தூங்கவிடவில்லை. ஏதாவது எழுதவேண்டும் அல்லது படிக்கவேண்டும் என்று நினைத்து இரண்டையுமே செய்து பார்த்தேன்.' இரண்டிலும் படுதோல்வி. மோட்டார் சைக்கிளில் பயணம் செய்கிறவன் உடலைப்போல மனசுக்குள் ஒரே படபடப்பு. ஏதோ ராகத்தை முனகிக்கொண்டே இருந்தேன். சாரீரம் சுகமாக வளைந்து கொடுத்தது. ஆனல் இரவு பத்து மணிக்கு நாம் 'குரலெடுத்துப் பாடி' விட்டால் செல்லையா தூக்கம் கலைந்து எழுந்து விடுவதோடு விவகாரம் நின்று விடாதே என்று பயந்து மாடியை விட்டுக் கீழே இறங்கி வந்தேன். ஹோட்டல் ஒதுங்கவைக்கும் நேரம். பழையபடியும் காப்பியைச் சாப்பிட்டேன். வேறு எதையாவது செய்தாகவேண்டும் என்ற மனக்கிளர்ச்சிக்குக் காப்பியைக் காண்பித்தது மனம். தென்னை மரத்தில் தேள் கொட்டி பனைமரத்தில் நெறிகட்டிய கதையாக ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் எதைச் செய்தாலும் சுகமாகவும், அர்த்த புஷ்டியாகவும் இருந்தது.

வெளியே வந்தேன். வெற்றிலை பாக்குக் கடையில் ஒரு சிகரெட்டை (சிகரெட்டேதான்!) வாங்கிப் பற்றவைத்துக்கொண்டு மாடிக்கு வந்தேன். 'எதைச் செய்தாலும் யாரும், என்னவும் கேட்காமல் இருக்கிருர்களே?' என்ற, வாசகத்தை வாயோ மனமோ சொல்லக்கூடிய வாறு அப்படிப் பைத்தியம் பிடிக்கவில்லை தான். ஆனல் மனம் என்னவோ அப்படித்தான் தாத்பர்யம் செய்துகொண்டது!

சிகரெட் தீ விரலைத் தீண்டும் வரை புகைத்துவிட்டு வந்து படுத்தேன். வாசலில் போடும்

கோலத்தின் கோடு ஒன்று எங்கேயோ தொடங்கி எங்கெங்கோ வட்டம் போட்டுக் கொண்டு, எங்கேயோ போய் முடிவதுபோலத்தான் மன ஓட்டம் இருந்தது. ஒரு எண்ணத்துக்கும் அதை அடுத்துக் காரணமின்றிப் பிறக்கும் மற்ருெரு எண்ணத்துக்கும் உள்ள ஒற்றுமை, கருப்புக்கும் வெள்ளைக்கும் உள்ள ஒற்றுமைதான். அந்த ஒருகோடி சிந்தனைகளில் முக்கியத்துவம் நிறைந்த சிந்தனைகள் இரண்டு:

ஒன்று: ஒரு தடவையாவது 'ஒயின்' குடித்துப் பார்ப்போமா?

இரண்டு: யாராவது ஒரு மலையாளப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டால் என்ன?

மறுநாளே கன்னியாகுமரிக்கு வந்து விட்டோம். செல்லையாவும் நானும் இப்போது யார் யாரகவோ மாறி விட்டோம்! ஒரே ஊர் வாசிகளான எங்கள் இருவரிடையிலும் இருந்த மதில்கள் இப்போது அடியோடு சாய்ந்து விட்டன. 'உலகோப்பான செய்' என்ற தருமம் போய் பரஸ்பரம் ஒருவருக் கொருவர் காட்டிக் கொள்ளும் மரியாதையும், அந்த மரியாதையின் உள்மூச்சு வெளிமூச்சாக இருக்கும் பயமும் கண்ணியமான பேச்சும் எங்களோடு திருவனந்தபுரம்வரை வந்து விட்டுப் பழையபடியும் சொந்த ஊருக்கு விடை பெற்றுக் கொண்டது மாதிரி இருந்தது.

பரஸ்பரம் வெளிப்படையாக உள்ளத்தின் அபிலாஷைகளைத் தெரிவித்துக் கொள்ளுவோம். நாசூக்காக அளவைக்குறைத்துச் சாப்பிடுவதைவிட்டு, பேய்த் தேனி தின்பதிலிருந்து பிரம்மச்சரியத்தின் அந்தரங்கப் பகுதியை காட்டிக் கொள்ளுவதுவரை எல்லாம் சகஜமாகிவிட்டது. ஒருவர் சற்று மட்டமாக எதையும் கூறி விட்டால், மற்ருெருவர் மௌனம் சாதித்து, விரசப் பாதாளத்தில் விழாமல் தப்பித் தப்பிப் பழைய படியும் ஒய்யாரநடை போட்டு நடக்க ஆரம்பித்துவிடுவோம்.

மதுரையில் காலேஜில் கூடப் படித்த ஒருவன் தாசிவீட்டுக்குப் போனது, ஒழுக்கம் என்பது அர்த்தமில்லாத விஷயம் என்று யாரோ பகுத்தறிவோடு சொன்னது, காலாகாலத்தில் உரிய பருவத்தில் கல்யாணம் செய்து கொள்ளுவதின் நன்மைகளைவிட அப்படிச் செய்யாததால் ஏற்பட்ட சங்கடங்கள்—இப்படிப் பல விஷயங்களை மூன்றும் மனிதன் தலையில் அநியாயமாகத் தூக்கிவைத்து நாங்கள் இருவரும், எங்கள் இருவர் சம்பந்தமாகவே பேசிக்கொண்டிருந்தோம். கடைசியில், கண்ணில் படும் யாராவது ஒரு அழகி (அழகியாக இல்லாவிட்டாலும் பரவாயில்லை) அதிசயம் நிகழ்ந்தது போல, கடைக்கண்ணுல் பார்த்து விட்டால், அவளை ஜூலியட்டாகவோ, லைலாவாகவோ நினைத்து உயிரையும் உடலையும் அவளுக்கு அர்ப்பணம் செய்யும் பரிபக்குவத்தை யடைந்த கட்டத்தில் செல்லையா வந்து நிற்கும் தருணம்......

அன்று தங்குவதற்கு ஒரு சத்திரத்தின்மேல் மாடி கிடைத்தது. பெரிய அறை. ஏதோ திருவிழாக் காலங்களில் கன்னியாகுமரிக்கு வருகிறவர்கள் வந்து தங்கக் கூடிய அறை அது. வருஷத்தில், விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில நாட்களுக்குத்தான் அந்த அறையில் மனிதவாசம்.

கட்டழகி தவமணி தேவி தன் மேனியை மிருதுவாகவும் மென்மையாகவும் வைத்திருக்க லக்ஸ் டாய்லட் சோப்பைத் தான் நம்புகிறார்

அதிரூபவதியான இந்த சினிமா நட்சத்திரத்தின் அழகு படுத்திக்கொள்ளும் முறை லக்ஸ் டாய்லட் சோப் தான். சருமத்தை சுத்தம் செய்து மிருதுவாக்கு இச்சோப்பின் வெண்ணிறம் கொண்ட சுகந்த நுரை போல் வேறெதுவுமில்லை என்பது அவருக்குத் தெரியும். மென்மை வாய்ந்த பூரணப்பொலிவுள்ள மேனியை விரும்பும் எல்லோரையும் அவர் லக்ஸ் டாய்லட் சோப் உபயோகித்து தவறாமல் சுத்தம் செய்துகொள்ளும்படி உபதேசிக்கிறார்.

லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்!

LTS. 174-50 TM

உறுதியான பற்களுக்கு

சரீர தத்துவ சாஸ்திரத்தில் கண்டுள்ள பற்களைக் கெடுக்கும் துர்நீர்களைச் சமனப் படுத்தக்கூடிய சக்தி வாய்ந்த மில்க் ஆப் மெக்னீஷியா "பிலிப்ஸ் டூத் பேஸ்டில்" 75 சதவிகிதத்திற்கு மேல் கலந்திருக்கிறது. பிலிப்ஸ் டூத் பேஸ்ட் பற்களை பளபளப்பாக்கி சுத்தம் செய்வதுடன், பற்களுக்கும் ஈறுக்கும் உறுதியைக் கொடுத்துக் காக்கிறது. பிலிப்ஸ் ஒன்றுதான் பூரணமாகக் காப்பாற்றக்கூடியது. ஏனென்றால் பிலிப்ஸில்தான் மில்க் ஆப் மெக்னீஷியா கலந்திருக்கிறது.

நாசத்தைத் தடுப்பது
பிலிப்ஸின் குணம்

No. 4

பட்டு

என்றால் மிருதுவாயுள்ளது

அது மைசூர் பட்டானால் ச்பர்சத்திற்கு மிருதுவாயுள்ளதுடன் உயர்ந்த நெசவு, அதிகநாள் உழைப்பு. மேலான ரகம் எல்லாம்சேர்ந்து மிக அழகான தாகும்.

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு கவர்ன்மெண்ட் சில்க் வீவிங் பாக்டரீ, மைசூர்.

MSK 11 TM

நாளுக்கு ஒரு ரூபாய் என்று வாடகை பேசி அறையில் சாமான்களைக் கொண்டுபோய்ப் போட்டோம்.

விசாலமான அறைதான். மேல்பக்கமாக இருந்த இரண்டு ஜன்னல்களில் கம்பிகள் இல்லாவிட்டால் ஜன்னல் வழியாக குதிரையும் நுழையும்; யானையும் நுழையும். அவ்வளவு பெரிய ஜன்னல்கள். வடக்குச் சுவரில் இருந்த மாடக்குழியில் அகல் விளக்கு வைக்கப்பட்டிருந்தது. உள்ளே ஒரே ஒரு கட்டில்தான் இருந்தது; அதாவது தெற்கத்திச் சீமையில் ஏராளமாகக் காணப்படும் பனைநார்க்கட்டில். நபர்களின் எண்ணிக்கை இரண்டாக இருந்ததால், கட்டிலோடு ஒரு கோரைப்பாயையும், இரண்டு தலையணைகளையும் கொண்டுவந்து போட்டான் வாடகைக்கு விட்டவன். அகல்விளக்கில் கொஞ்சம் எண்ணெயும்விட்டு பக்கத்தில் எண்ணெயுடன் ஒரு டம்ளரையும் வைத்துவிட்டுப் போனான். இப்படியாக அறையை வசதி செய்து கொண்டு, கடற்கரைக்குப் புறப்பட்டோம். கோவிலில் வேலைசெய்யும் ஒரு பிராமணப் பையன் வந்து கன்னியாகுமரித் தலத்தின் மகத்துவங்கள், குமரியம்மன் தவம் செய்த இடம், தீர்த்த விசேடங்கள் முதலியவற்றை விளக்கிச் சொல்லிக் கொண்டே வந்து முக்கியமான இடங்களையெல்லாம் அழைத்துக் கொண்டுபோய்க் காட்டினான்.

தையல் நாயகி (குமரியம்மன்) சிவன்மீது கொண்டிருந்த தாபத்தை வெறிக் கூத்தாடச் செய்த சமுத்திர கோஷத்தைக் கண்டு தானோ என்னவோ கடலை அந்தக் காலத்தில் மன்மதனுடைய முரசுக்கு ஒப்பிட்டிருக்கிறார்கள். தெய்வப் பிறப்பாகிய தையல் நாயகியையே யுகம் யுகமாய் வெறி தணியாது நின்று நித்தம் தவம் செய்ய வைத்த கடலின் சூழ்நிலை எங்களையும் பாதிக்காமல் விட்டு விட நியாயமில்லை. திருவனந்தபுரம் பத்பனப ஸ்வாமியைத் தரிசனம் செய்யப் போன மாதிரியில் கன்னியையும் தரிசனம் செய்து விட்டு, சாப்பாட்டையும் முடித்துக்கொண்டு அறைக்குத் திரும்பினோம்.

திரும்பும் போது இருவரும் ஏகமனதாகவே சிகரெட், வெற்றிலை பாக்கு முதலிய சரக்குகளை வாங்கிக் கொண்டோம். அறைக்கு வந்தோம். அறையின் கதவைத் திறந்ததும், வேலைக்காரன் வந்து விளக்கேற்றி விட்டு, 'சாப்பாடு எடுத்துக் கொண்டு வரலாமா?' என்று கேட்டான். அதற்கு அவசியமில்லாத விபரத்தைச் சொன்னதும்'பால் சாப்பிடுகிறீர்களா!' என்று கேட்டுச் சம்மதம் அறிந்து பால் வாங்கிக்கொண்டு வந்து கொடுத்தான். வேலைக்காரனுடைய சேவை இத்துடன் நின்றுவிடவில்லை. படுக்கை விரித்துப் போட்டு அவன் நின்ற நிலையைக் கண்டதும் செல்லையா அவனை 'பளிச்' சென்று முன்பின் யோசியாமல் உடம்பு பிடித்துவிட ஆக்ஞாபித்து விட்டான்! இந்தப் புது அனுபவத்தை இருவரும் ஏற்றுக்கொண்டு விட்டோம். வேலைக்காரன் போய் விட்டான். அப்புறம் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு விளக்கை அணைத்து இருவரும் கட்டிலிலும் பாயிலுமாகப் படுத்துக்கொண்டோம்.

கட்டிலில் படுத்திருந்த செல்லையா வாடைக்காற்று அடிக்கிற

தென்று ஜன்னல்களைச் சாத்தி விட்டான். ஆகவே, சிறிது நேரத்தில் அறைக்கென்று பிரத்தியேகமாக உள்ள விளக்கெண்ணெய் விளக்கின் வாசம் மண்டிவிட்டது. இதைப் பற்றி நான் சிந்தனை செய்து கொண்டிருந்தபோது என்னைப் பெயர் சொல்லி அழைத்தான் செல்லையா.

"என்ன சமாச்சாரம்?"

"இந்தக் கட்டிலில் பவுடர் வாசம் அடிக்கிறது!"

இருவருமே சிறுபிள்ளைகளாகி விட்டோம்!

"பவுடர் வாசமா?"

"வந்து பாரேன்"

எழுந்து கட்டிலின் பக்கமாகப் போனேன். செல்லையா என் தலையைக் கொண்டுபோய் கட்டிலின் தலைமாட்டின் பக்கமாக ஒட்ட வைத்தான். முகர்ந்துபார்த்தேன். பவுடர் வாசம் தான்! இதுபோதாதா உல்லாசப் பேச்சுக்கு?

கொஞ்ச நேரம் கழித்துப் பழையபடியும் நான் பாயில் வந்து படுத்தேன். பவுடர் வாசத்தை அனுபவித்துப் புரளும் செல்லையாவின் ஆட்டபாட்டத்தை கட்டிலின் 'கிறீச்' சப்தம் அறிவித்தது.

'எந்தப் பெண் வந்து படுத்துறங்கிய கட்டிலோ?' — இந்த உபோத்காதத்துடன் தொடங்கி விட்டது ஒரு ரசமான இதிகாசம்!

ஸ்தல யாத்திரைக்காக வந்த ஒரு குடும்பத்தின் செவ்விளம் தளிராகக் குருத்துவிட்டுவளர்ந்த யாரோ ஒரு இளம் பெண், நிலவு மயக்கத்தில் யோக நித்திரை செய்யும் சௌந்தர்யக் காட்சியை உள்ளம் எழுதிப் பார்த்தது. கீழைநாட்டுப்பெண்கள் கண்வளரும் பேரழகை வியந்து எழுதிய அனதோல் பிரான்சின் வாசகத்தை இருவரும் பரஸ்பரம் பரிமாறிக் கொண்டோம். அந்தப் பெண்—

அவளுடைய அழகு, அவளுடைய காதல், அவளுடைய இதயத் தேட்டங்கள், அவள் பாடும் பாட்டு, அவள் ஏதோ ஓர் அழகான அந்தி மாலையில் யாருடைய குதூகலத்துக்காகவோ கண்ணாடிமுன் நின்று 'பவுடர் பூசிக் கோலம் புனைந்தபோது அலங்காரத்தில் திருப்தியும் அதிருப்தியும் ஒருங்கே படர்ந்து கொண்டிருந்த அவள் காதல் உள்ளம்...

இப்படியே விரிந்துகொண்டு போன கதையை எந்த இடத்திலோ என் உறக்கம் முடித்து விட்டது.

பகலெல்லாம் சுற்றி யலைந்ததால் உடம்பில் ஒரே அலுப்பு. ஆகவே அயர்ந்து உறங்கி விட்டேன். உறங்கி எவ்வளவு நேரமாகி யிருக்கும் என்று எனக்குத் தெரியாது. திடீரென்று செல்லையா என்னைத் தட்டி எழுப்பினான். எனக்கு விஷயம் புரியவில்லை.

"என், என்ன சமாச்சாரம்?"
—இது நான்.

"கொஞ்சம் எழுந்திரு. சீக்கிரம்......"

"என்ன விஷயம்?"

என்னவோ ஏதோ என்று தூக்கம் கலைந்து எழுந்தேன்.

"கட்டிலில் ஒரே மூட்டைப் பூச்சியாக இருக்கிறது. தூங்கவே முடியவில்லை" என்றான் செல்லையா.

"மூட்டையா?..."

செல்லையா அகல் விளக்கை ஏற்றினன். மூட்டைப்பூச்சி என்றதும் எனக்கு உடம்பெல்லமோ அரிப்பு எடுத்துவிட்டது. அந்தக் கட்டிலை நடு வீட்டில் போட்டுக்கொண்டு உறங்குவது எப்படி? மூட்டை கடிக்காமல்தான் இருந்தாலும், மேற்கொண்டு தூக்கம் பிடிக்குமா? இருவரும் கட்டிலை எடுத்துக்கொண்டு வந்து வெளியே வராந்தாவில்போட்டுவிட்டோம். செல்லையா ஊரிலிருந்து கொண்டு வந்த படுக்கையை வெறுந் தரையில் விரித்துப் படுத்துக்கொண்டான். எனக்கு அந்த மூட்டைப் பூச்சியின் ஞாபகம் அகலவே இல்லை. நான் படுத்திருக்கும் பாயிடமே சந்தேகம் வலுத்து விட்டது.

"ஒரே சப்பாத்தி மாதிரி வந்து அப்பிவிட்டதப்பா, மூட்டை" என்று சொன்னன் செல்லையா. கட்டிலைப் பற்றிய நினைவில் அருவருப்புக்கு மேல் அருவருப்பைக் கொண்டுவந்து குவித்தன செல்லையாவின் சொற்கள்.

"சிறிது நேரத்திற்கு முன் ரம்பையாக இருந்த கட்டிலா இது!" என்றேன்.

செல்லையா சிரித்தான்.

எங்களுடைய பைத்தியக்காரக் கனவின் கன்னத்தில் அறைவிட்டது இந்த மூட்டைப்பூச்சியனுபவம். அந்தக் கற்பனை மங்கையின் அழகான தோற்றத்துக்கும் அழகான அலங்காரத்துக்கும் மறைவில், ஒரே ஈரும் பேனும் பற்றி புழுக்கள் நெளிவது போல இருந்தது கட்டிலில் மூட்டைப்பூச்சி பற்றி இருந்தது. இந்த ஆபாசத்துக்காக, எங்களுக்குத்தான் மனம் வெட்கியது. சுற்றுப்பிரயாணத்தின் அலையில் மிதந்து நீச்சடித்துக் கொண்டிருந்த எங்கள் போதையை மட்டுப்படுத்தி விட்டது இந்தப் பிரத்தியக்ஷ அனுபவம். ஆனலும் ஊரிலிருந்த எங்கள் பூர்வாசிரம ஸ்திதி கிட்டிவிடவில்லை.

காலையில் சீக்கிரமாகவே எழுந்துவிட்டோம். கடற்கரையில் போய் சூரியோதயம் பார்க்க வேண்டும். இது கன்னியாகுமரி வாசிகளின் காலைச் சடங்கு. படுக்கை விட்டு எழுந்து வெளியேவரும்போது அந்த கட்டில் கண்ணில்பட்டது. எனக்கு அவமானமாக இல்லாவிட்டாலும் மனதுக்குள்ளேயே சிரிப்பு வந்தது. ஆனல் செல்லையாவையும் பக்கத்தில் வைத்துக்கொண்டு கட்டிலைப் பார்க்க ஒரு மாதிரித்தான் இருந்தது.

கடற்கரையில் சூரியோதயம் பார்த்துவிட்டு, அங்கேயே ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்பினேம். திரும்பும்போது கோவிலுக்கு முன்புறமாத உள்ள ஒரு ஹோட்டலுக்குள்ளே நுழைந்தோம். ஹோட்டலின் உள்ளே கூட்டமாக இருந்ததால், வெளியில் உள்ள தாழ்வாரத்தில் உட்கார்ந்தே பலகாரத்தைச் சாப்பிட்டோம்.

சாப்பிட்டு முடிந்தது.

இனி......?

வழக்கம்போல, அதாவது புது வழக்கம்போல, சிகரெட் வாங்க வேண்டும். நான் 'எனக்கு வேண்டவே வேண்டாம்' என்று மறுத்துவிட்டேன். செல்லையா மட்டும் பக்கத்துக் கடைக்குப் போய் ஒரு சிகரெட் பெட்டியையும் நெருப்புப் பெட்டியையும் வாங்கிக் கொண்டு வந்து ஹோட்டல்

தாழ்வாரத்தில் உட்கார்ந்தான்.. செல்லையா சிகரெட் குடித்துக் கொண்டிருக்கும்போது...

ஹோட்டலின் உள் அறையி லிருந்து திடீரென்று ஒருவர் வந்து எங்கள் கண் முன் பிரத்தி யக்ஷமானார். செல்லையா துள்ளி விழுந்தான். 'பளிச்'சென்று சிகரெட் துண்டைத் தூர எறிந்து விட்டு, சிகரெட் பெட்டியைப் பத்திரப்படுத்தப் போனான். முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைக்க முடியுமா? இனி மறைத்துத்தான் பயன் என்ன? யாருக்குத் தெரியக்கூடாது என்று மறைக்கப் பார்க் கிறோமோ, அவருக்கு உண்மை தெரிந்துவிட்டது; மறைக்க முயன்றதும், சிகரெட் பெட்டியை பெயரளவுக்கு சட்டைப் பையில் எடுத்துப் போட்டுக்கொண்டதும் அவருக் குத் தெரிந்துவிட்டது.

வந்தவர் எங்கள் ஊர் கிராம முனிசீப்பு.

"என்ன...?" என்று கேட் டார், சிவ பூஜையில் நுழைந்த அந்த மனிதர்.

"எப்போது வந்தீர்கள்?" என்றும் கேட்டார்.

செல்லையா என்னை முந்திக் கொண்டு "வந்து ஒரு வார மாகிறது" என்று படபடப் பாகச் சொன்னான். என்னை முந்திக் கொண்டு வந்தவரிடம் பேசினால், நல்ல பிள்ளையாகி விட முடியுமா?

"ஊருக்கு எப்போ?" என்று கேட்டு விட்டு எங்கள் பக்கத்தில் உட்கார்ந்தார்.

"சாயங்காலம் புறப்பட வேண்டும், நீங்கள்...?" அவர், தாம் எப்போது ஊருக்குப் போ கிறார் என்ற விபரத்தைச் சொன் னார். அந்த விபரம் இங்கே எதற்கு?

கிராம முனிசீப்பு வந்தது எங் கள் ஊரே வந்தது போலிருந்தது.

அவரிடம் விடை பெற்றுக் கொண்டு நாங்கள் எங்கள் அறைக்குப் புறப்பட்டு வரும் போது, கன்னியாகுமரியில் ஒரு தெருவின் வழியாக நடந்து வரு வதற்கும் சொந்த ஊரில் ஒரு தெருவின் வழியாக நடந்து வரு வதற்கு வித்தியாசமே தெரிய வில்லை. எங்கள் பிரயாண போதை அலுத்துச் சலித்து 'கொளக்' கென்று விழுந்து விட்டது. இந்தச் சங்கடமான நிலைமைக்கு நெகிழ்ச்சி கொடுக்க வேண்டும் என்று ஏதோ பாட்டை சீட்டி யடிக்க ஆரம்பித்தேன்.

"உஸ். தெருவழியே என்ன சீட்டியடிக்கிறது?" என்று செல்லையா தடுத்தான்.

அன்று, கிணற்றிலிருந்து நான் குளித்து விட்டுத் திரும்பும் போது, செல்லையா என்னைச் சந் தித்துப்பேசிய பாவனையில் அவ் வளவு அடக்க ஒடுக்கமாகப் பேசிக்கொண்டு வந்தான்.

'இனிப் போய் அந்தக் கட்டிலை எப்படியடா செல்லையா பார்க்கப் போகிறான்?' என்ற சிந்தனை யுடன் அறையை நோக்கி நடந்து கொண்டிருந்தேன்.

செல்லையாவும் பரிதாபகர மாகத் தலைகுனிந்த வண்ணம் பின்னோடு வந்து கொண்டிருந் தான்!

இந்தியாவின் ஒவ்வொரு சுதந்திரப் போராட்டத்தின்போதும் இந்திய மக்களுக்கு ஆதர்ச புருஷனாக விளங்கிய பகவத் சிங் தூக்கு மேடையில் ஏறிய தினத்தன்றும், அதற்கு முதல் நாளும் நடைபெற்ற செய்திகளைக் கூறுகிறது இக் கட்டுரை. கட்டுரையாளர் ஒரு வக்கீல்.

* * * * * * * * * * * * * * * * * * *

பகவத் சிங்கின் அந்தியகாலம்

●

ப்ரான் நாத் மேத்தா

1931-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 23-ம் தேதி!

இந்திய சுதந்திரப் போராட்ட சரித்திரத்திலேயே குறிப்பிடத் தக்க தினம் அது. ஏனெனில் அந்தத் தினத்தில்தான் பாஞ்சால நாட்டுப் புரட்சி வீரர் பகவத் சிங் தம்முடைய வீர சகாக்களாகிய ராஜ குரு, சுகதேவ் ஆகிய இருவருடன் தூக்கு மேடை ஏறினர். தூக்கு மேடையிலும், "புரட்சி ஓங்குக!" "ஏகாதிபத்தியம் அடியோடு ஒழிக!" என்று கடைசிவரை கோஷித்தார்.

அவர்களைத் தூக்கிலிடுவதற்கு இரண்டு மணி நேரத்துக்கு முன் எனக்கு அவர்களைக் காணும் பாக்கியம் கிடைத்தது. அவர்கள் அப்பொழுது லாகூர் 'சென்ட்ரல்' ஜெயிலில் ஒரு பாடாவதி அறையில் அடைபட்டுக் கிடந்தனர். அவர்கள் இறப்பதற்குமுன் சந்தித்துப் பேசியவர்களில் நான்தான் கடைசி ஆள்.

அவர்களுடைய சொந்தக்காரர்களையோ, நண்பர்களையோ, அல்லது பொது ஜனங்களையோ பகவத் சிங்கைச் சந்திக்க அனுமதிப்பதில்லையென்று ஜெயில் அதிகாரிகள் முடிவு செய்திருந்தனர். அவர்களுடைய வக்கீல் என்ற முறையில் அவர்களுடைய உயிலைப் பற்றிய விஷயத்தை அறிய வேண்டுமென்ற சாக்கில் அவர்களைச் சந்திக்க அனுமதி பெற்றேன்.

அவர்கள் அடைபட்டுக்கிடந்த அறையில் சரியாக ஒரு மணி நேரம் இருந்தேன். அந்த ஒரு மணியை என்றென்றும் என்னால் மறக்க முடியாது. அவர்கள் அடைபட்டுக்கிடந்த தனி அறையில் அவர்களைப் பல முறையும் சந்தித்து இருக்கிறேன்.

அவர்களையும் அவர்களுடைய மற்றச் சகாக்களையும் விசாரணையின் போது அடிக்கடி சந்தித்திருக்கிறேன். அவர்கள் உண்ணாவிரதமிருந்த காலங்களிலும், நீதி மன்றத்தில் நீதிபதிகளுடனும், போலீஸ்காரர்களுடனும் வீரத்தோடு போர் புரிந்த சமயங்களிலும் நான் உடனிருந்து கவனித்திருக்கிறேன். ஆனால், இதற்கு முன் அவர்களுடைய உள்ளத் துணிவை இவ்வளவு நன்றாக உணரவில்லை. மரணம் அவர்களை நெருங்கிக் கொண்டிருந்தது. கடிகாரத்தின் முட்கள் இடைவிடாது ஓடிக் கொண்டுதான் இருந்தன. மறு நாள் காலை ஆறு மணிக்குத்தான் அவர்களைத் தூக்கிலிடவேண்டும் என்று அரசாங்க உத்தரவு.

ஆனால் நான் வந்தபிறகு சில மணி நேரங்களில் அவர்கள் தூக்கிலிடப்பட்டார்கள். அவர்களுடைய முடிவு காலம் அருகே இருக்கிறது என்று அவர்களுக்கும் தெரியும். ஆனால், இதனால் ஒன்றும் பாதிக்கப்படாமல் சந்தோஷமாகத்தான் இருந்தார்கள்.

பகவத் சிங் மகிழ்ச்சியோடிருந்தார். கூண்டில் அடைபட்ட சிங்கத்தைப் போல அங்குமிங்கும் உலாவிக்கொண்டிருந்தார். நல்ல உயரமான உருவம். வலிவான உடற்கட்டோடு அழகான தோற்றமுடையவர். நான் சென்றதும் அருள் நிறைந்த முகத்தோடு "அந்தப் புத்தகத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்களா?" என்று கேட்டுக்கொண்டே என்னை வரவேற்றார். அன்று காலை தினசரித் தாளில், 'புரட்சி வீரர் லெனின்' என்ற புத்தகத்தின் மதிப்புரையைப் படித்த பிறகு அந்தப் புத்தகத்தைப் படிக்க மிகவும் விரும்பியதால் அந்தப் புத்தகத்தைக் கொடுத்தனுப்பும்படி ஒரு ஜெயில் வார்டர் மூலம் ரகசியமாக எனக்கு ஒரு தகவல் அனுப்பினார். அந்தப் புத்தகத்தை அவர் கையில் கொடுத்ததும் அவருக்கு ஆனந்தம் பொங்கிற்று.

நாட்டுக்கு ஒரு செய்தி விடுக்கும்படி கேட்டுக்கொண்டேன். அதற்குப் பகவத் சிங், "ஏகாதிபத்தியம் அடியோடு ஒழிக!" "புரட்சி ஓங்குக!" என்று பதிலளித்தார்.

"இன்று உங்கள் மனநிலை எப்படி இருக்கிறது?" என்று கேட்டேன். "எப்பொழுதும் போலச் சந்தோஷமாகத்தான்!" என்றார்.

அந்தப் புரட்சி வீரர்கள், தங்களுடைய விசாரணையில் பரிவு காட்டிய ஜவாஹர்லால் நேரு, சுபாஷ் சந்திரபோஸ் ஆகிய இருவருக்கும் தங்களுடைய மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவிக்கும்படி என்னைக் கேட்டுக்கொண்டார்கள். தங்களுடைய நண்பர்களுக்கு, குறிப்பாக இன்னும் சர்க்கார் கையில் அகப்படாமல் தலைமறைவாக இருக்கும் நண்பர்களுக்கும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பினார்கள். மராத்தி யுவன், ராஜகுரு என்னோடு கை குலுக்கி, "மீண்டும் சந்திக்கிறேன்' என்று சொல்லி எனக்கு ஆறுதல் அளித்தார். அவர்கள் விளையாடுவதற்காக நான் கொடுத்த "கேரம் போர்"டை ஜெயில் அதிகாரிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளும்படி ஞாபகப்படுத்தினார் சுகதேவ். அவர்களுடன் சந்தோஷமாகப் பேசிவிட்டுத் திரும்பினேன்.

மறுநாள் மாலை சட்லெஜ் நதியில் ஐம்பது மைலுக்கப்பால் பாதி வெந்ததும் வேகாததுமாய் அவசர அவசரமாய்ச் சுட்டு ஆற்றில் எறியபட்ட அவர்களுடைய எலும்புக்கூட்டைக் காண நேர்ந்தது என் துர்ப்பாக்கியம்தான்.

நான் வந்த பிறகு, பகவத் சிங்குக்கும் அவருடைய நண்பர்களுக்கும், அவர்களை அன்றைக்கே அப்பொழுதே தூக்கிவிடப் போவதாக அறிவித்தார்கள் என்று ஜெயில் டெபுடி சூப்பரண்டென்டன்ட் என்னிடம் கூறினார். நான் கொடுத்து வந்த அந்தப் புத்தகத்தின் இரண்டு பக்கங்கள்தான் படித்திருந்தார். ஜெயில் அதிகாரியைப் பார்த்து, 'முதல் அத்தியாயத்தை மட்டுமாவது முடிக்க அனு

மதிக்க மாட்டீர்களா?' என்று அவருடைய வனிபாணியில் கேட்டார்.

ஒரு குற்றவாளியை அறையிலிருந்து தூக்கு மேடைக்கு அழைத்துச் செல்லும்பொழுது பலவித சம்பிரதாயச் சடங்குகள் நடக்கும். ஆனால் பகவத் சிங் முதலியோர் கேட்டுக்கொண்டதின் பேரில் இவர்கள் விஷயத்தில் அவற்றை நிராகரித்துவிட்டனர். அவர்கள் கை கோத்துக்கொண்டு பாடிக்கொண்டே சென்றார்கள்.

"புரட்சி ஓங்குக! ஏகாதிபத்தியம் அடியோடு ஒழிக!" என்ற பிரசித்திபெற்ற சுலோகங்களைத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டேயிருந்தனர். தூக்குமேடைச் சேவகன் தூக்குச் சுருக்கை அவர்கள் கழுத்தில் மாட்டுவதை அனுமதிக்கவில்லை. மூன்று சுருக்குக் கயிறுகளும் மேலிருந்து தொங்கிக்கொண்டிருந்தன. மூவரும் மனந் தளராமல் உட்கார்ந்துகொண்டனர். பகவத் சிங் மத்தியிலும் மற்ற இருவரும் இரு பக்கங்களிலும் உட்கார்ந்து கொண்டனர். தூக்குக் கயிற்றை முத்தமிட்ட பின்னர் தாங்களே கழுத்தில் மாட்டிக்கொண்டனர். பிறகு தூக்குமேடைச் சேவகனை அழைத்து முடிச்சுகள் சரியாக இருக்கின்றனவா என்று சோதிக்கச் சொன்னார்கள். அடுத்த கணம் அவர்கள் கோஷித்துக் கொண்டிருந்த "புரட்சி ஓங்குக!" என்ற கோஷம் நின்றுவிட்டது. அவர்களுக்குக் காலடியில் இருந்த பலகைகள் நீக்கப்பட்டன!

பகவத் சிங்கும் அவருடைய சகாக்களும் தூக்கிலிடுவதற்குச் சில நாட்களுக்கு முன்புதான் காந்தி—இர்வின் ஒப்பந்தம் உருவாகிக்கொண்டிருந்தது.

அதில், மரண தண்டனையைத் தவிர்த்துவிட்டு ஜன்ம தண்டனையாக மாற்றவேண்டும் என்பது கூட ஒரு முக்கியமான விஷயமாகக் கவனிக்கப்படவேண்டும் என்று கருதினர். தூக்குத் தண்டனையை மாற்றிவிட்டு சிறைத் தண்டனையாக மாற்றிக் கருணை காட்டும்படி மனுச் செய்துகொண்டால், அவர்கள் மரணத்திலிருந்து தப்பலாம் என்று ஓர் அந்தரங்கத் தகவல் கிடைத்தது. லாகூர் தலைவர்கள் இந்த விஷயத்தை அவர்களுக்குத் தெரிவிக்கும்படி என்னை அனுப்பினர்கள். அவர்களுடைய குண விசேஷங்களை அறிந்திருந்தும், இந்த விஷயத்தைப் பற்றி அவர்களிடம் போய்ச் சொல்ல ஒத்துக்கொண்டது என்னுடைய மனத் துணிவுதான்.

அவர்களைக் கண்டேன். செய்யவேண்டிய காரியம் எவ்வளவுதான் கொள்கைக்குப் புறம்பானதாயிருந்தாலும் நாட்டின் நன்மைக்காக அவர்கள் உயிர் வாழவேண்டியது அவசியம். ஆகவே அவர்கள் கருணை காட்டும்படி எழுதி கையெழுத்திடவேண்டும் என்று நான் அவர்களோடு விவாதித்தேன். இதைக் கேட்டு அவர்கள் சிரித்தார்கள். என்னையும் என்னை அனுப்பிய தலைவர்களையும் பரிகாசம் செய்தார்கள். ஆனால் பகவத் சிங் திடீரென்று 'கருணை மனு'வில் கையெழுத்திட ஒத்துக்கொண்டது எனக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. அவருடைய மற்ற இரு தோழர்களும் என்னைப் போல் ஆச்சரியத்தில் மூழ்கி விட்டார்கள். ஆனால் பகவத் சிங்கின் அறிவுத் திறனை

மறுக்கமாட்டார்கள்! "நாளைக் காலையில் 'கருணை மனு'வோடு வாருங்கள். கையெழுத்திடுகிறோம்'' என்றார் பகவத் சிங். ஒரே குழப்பத்துடன் திரும்பினேன். அன்று இரவோடு இரவாய், லாகூரின் முதல்தர வக்கீல்கள் 'கருணை மனு' ஒன்று தயார் செய்தனர்.

மறுநாள் காலை (மார்ச்சு 20-ம் தேதி என்று நினைக்கிறேன். அதைப்பற்றி நிச்சயமாகச் சொல்ல முடியாது, ஏனெனில் என்னுடைய நாட் குறிப்புப் புத்தகத்தை பாக்கிஸ்தானில் விட்டு விட்டேன்) பகவத் சிங்கைப் பார்த்தபொழுது 'கருணை மனு' அனுப்பியாகிவிட்டது என்று சொன்னார்கள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. 'மனுவின் நகல் எங்கே?' என்று கோபத்தோடு கேட்டேன்.

மன்னிக்க வேண்டும் என்று சொல்லும் தோரணையில் பகவத் சிங் என்னிடம் மனுவின் நகல் ஒன்றைத் தந்தார். அதில் கீழ்க் கண்டவாறு எழுதப்பட்டிருந்தது:

"மேன்மை தங்கிய கவர்னர் ஜெனரல் அவர்கள் சமூகத்துக்கு முறைப்படி அனுப்பப்பெற்றது.

எங்களுடைய நண்பர்கள், உங்களுக்கு ஒரு கருணை மனு அனுப்புமபடி எங்களைத் தொந்தரவு செய்கிறார்கள். நாங்கள் சரித்திர மாணவர்கள். ஆகையினாலே, அரசர்களுக்கு விரோதமாக, அரசர்களை எதிர்த்து போராடியவர்களைத் துப்பாக்கியினால் சுட்டுக் கொன்றிருக்கிறார்களே தவிர, இந்த ஜெயிலில் உள்ளதைப் போன்ற தூக்கு மேடைக்கு அனுப்ப வில்லை என்பதைச் சரித்திரத்தில் படித்திருக்கிறோம். இந்தக் கருணை மனுவின் மூலம் உங்களைக் கேட்டுக்கொள்ளுவது என்னவென்றால், பிரிட்டிஷ் சிப்பாய்களைக் கொண்டு எங்களைச் சுடச்செய்யுங்கள் என்பதுதான். எங்களுடைய இந்தத் தாழ்மையான வேண்டுகோளை அனுமதிக்கும் அளவுக்கு நீங்கள் கருணை உள்ளம் படைத்தவர்களாயிருப்பீர்கள் என்று நம்புகிறோம். இதற்கு நாங்கள் மட்டுமல்ல, எங்கள் நாட்டு மக்கள் அனைவரும் நன்றியுடையவர்களா யிருப்போம்.''

இந்தக் 'கருணை மனு,' இர்வின் பிரபு தண்டனையைக் குறைத்தாலும் அதை எதிர்த்து நிற்கத் தயாராக இருந்த பஞ்சாப் மாகாண 'சிவில்' இலாகா அதிகாரிகளின் எதிர்ப்பைத் தூண்டி விட்டது. இந்த மனு இர்வின் பிரபுவுக்குக் கிடைத்ததும், சிவில் இலாகா அதிகாரிகளுடைய கூட்டு ராஜினமா பயமுறுத்தலுக்கு அஞ்சி, கருணை மனுவை நிராகரித்துவிட்டார்.

"ஏன் அதுமாதிரியான மனு எழுதினீர்கள்?'' என்று கேட்டதற்கு, ''இந்த விஷயத்தைப்பற்றிய சர்ச்சையை முடிக்கத்தான்'' என்று சிரித்துக்கொண்டே பதிலளித்தார் பகவத் சிங்.

✱

தப்பமுடியாது

யுத்தத்துக்கு முன்னுல் நான் லண்டன் ரேடியோவில் வேலைப் பார்த்தேன். ஒரு நாளில்லாவிட்டால் ஒருநாள் ஒவ்வொருவரும் அங்கே வேலை பார்த்தே ஆகவேண்டும்.

—மொரே மக்லாரன்

விஞ்ஞானம் எதற்கு?

பொ. திருகூடசுந்தரம் பிள்ளை

இந்தக் காலத்தில் விஞ்ஞானம்—ஸயன்ஸ்—என்ற சொல் ஒரு நாள் ஒரு பொழுதேனும் நம்முடைய காதில் விழாமல் இருப்பதில்லை. விஞ்ஞானத்தை வளர்த்தாலன்றி விமோசன மில்லை என்று பெரியோர்கள் எல்லோரும் கூறி வருகிறார்கள். நாள் தோறும் புதுப்புது விஞ்ஞான அற்புதங்கள் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன. நாம் காலையில் எழுவது முதல் இரவில் உறங்குவது வரை எத்தனையோ வகையான விஞ்ஞான உற்பத்திப் பொருள்களை உபயோகித்து வருகின்றோம். ஆதலால் இந்தச் சமயத்தில் நான் 'விஞ்ஞானம் எதற்கு?' என்ற கேள்வியை எழுப்புவது அறியாமையையே காட்டும் என்று வாசகர்கள் எண்ணுவார்கள்.

ஆயினும் எல்லோரும் விஞ்ஞானம் அவசியம்என்று ஏற்றுக் கொள்வதாயிருந்தாலும் அதன் காரணத்தை மறுபடியும் ஆராய்ந்து அறிந்துகொள்ளுவதால் கேடொன்றுமில்லை. அதற்குப் பதிலாக நமக்கு விஞ்ஞான வளர்ச்சியில் அதிகமான ஊக்கமும் உற்சாகமுமே உண்டாகும்.

சாதாரணமாக விஞ்ஞானம் என்று கூறும்போது நமமுடைய கண் முன்னர் சினிமா, ரேடியோ, தந்தி, டெலிபோன் போன்ற பொருள்களே வந்து நிற்கும். இன்னும் கொஞ்சம் சிந்தித்தோமானால் இஞ்செக்ஷன், எக்ஸ்ரே போன்ற வைத்திய நுட்ப விஷயங்கள் தோன்றும். சிறுவர்களிடம் கேட்டால் பாடசாலையில் கற்கும் ஆரம்ப விஞ்ஞானச் சுவடிகளிலுள்ள விஷயங்களைக் கூறுவார்கள். இந்த விதமாகச் சிந்தித்துப் பார்த்தால் நாம் அறியக்கூடிய விஞ்ஞான விஷயங்கள் அளவற்றன.

இவைகளை எல்லாம் கற்பது மட்டுமே விஞ்ஞானக் கல்வியாகாது. இவைகள் எல்லாம் தெரிய வேண்டியது அவசியம் தான். இவைகளைத் தெரிவதற்காகத்தான் ஏராளமான அறிஞர்கள் இரவு பகலாக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவைகளைத் தெரிந்தால்தான் நாம் நமக்கு வேண்டிய விஞ்ஞானப் பொருள்களைச் சிருஷ்டித்துக் கொள்ளவும் சிருஷ்டிக்கப்பட்டவைகளைச் சரியான விதத்தில் உபயோகித்துக் கொள்ளவும் முடியும்.

ஆயினும் உண்மையான விஞ்ஞானக் கல்வி இதுவன்று; நம்மிடமுள்ள அறிவுச் சக்தியை உபயோகிக்கக் கற்றுக் கொடுப்பதேயாகும். விஞ்ஞானம் என்றவுடன் ஏதோ ஒரு புதிய விஷயம் என்று அநேகர் எண்ணுகிறார்கள். ஆனால் அப்படிஎண்ணுவது

நாகரிகம் விஞ்ஞானத்துடன் வந்திருக்கிறது. விஞ்ஞானத்தைப் பயன்படுத்தும் முறையைப் பொறுத்திருக்கிறது உலகின் ஆக்கமும் அழிவும். இப்படிப்பட்ட விஞ்ஞானத்தை எப்படி அநுஷ்டானத்துக்குக் கொண்டுவருவது என்ற பிரச்னையை விளக்குகிறார் கட்டுரையாளர்.

தவறு. அறிவுச் சக்தி என்பது மக்கள் அனைவரிடமும் காணப் படுவதே. அதுமட்டுமன்று, சர்வ முட்டாள் என்பவர்கூட அதை உபயோகிக்கவே செய்கிறார். ஆதலால் விஞ்ஞானம் என்பது அறிவாளிகளுடைய விஷயம் என்றோ அதை எல்லோரும் பயன்படுத்த முடியாது என்றோ எண்ணுவது தவறு.

"விஞ்ஞானம்என்பது அறிஞர்களுடைய சொத்தன்று. அனைவர்க்குமுள்ள பிறப்புரிமையே. விஞ்ஞானம் என்பது புத்தகத்திலுள்ள விஷயம் என்று எண்ணற்க. அது எப்பொழுதும் நம்முடைய மனத்திலிருந்து கொண்டு வேலை செய்யும் ஒரு சக்தியே" என்று விஞ்ஞான சிகாமணிகளில் ஒருவராகிய தாம்ஸன் என்பவர் கூறுகிறார்.

அப்படி விஞ்ஞானமானது எல்லோருடைய மனத்திலும் இருக்குமானால் அதை ஏன் விசேஷமாக எடுத்துக் கூற வேண்டும்? அந்தச் சக்தி நம்முடைய மனத்தில் உள்ளது தான். அதை நாம் சதா காலமும் உபயோகிக்கத்தான் செய்கின்றோம். ஆனால் அதை நாம் முறைப்படுத்தாமல் கவனமின்றி அரை குறையாகவே உபயோகிக்கின்றோம்.

அதை என்று முறையாக உபயோகிக்கின்றோமோ அன்றே அதை நாம் விஞ்ஞானம் என்று கூறுவோம், என்று விஞ்ஞானப் பெரும் புலவர் தாமஸ் ஹக்ஸ்லி கூறுகிறார். வாளை உபயோகிக்கத் தெரிந்தவருக்கும் தெரியாதவருக்கும் உள்ள வித்தியாசமே விஞ்ஞான முறை அனுஷ்டிப்பவர்க்கும் விஞ்ஞான முறை அனுஷ்டிக்காதவர்க்கும் உள்ள வித்தியாசம் என்றும் அவர் கூறுகிறார்.

அப்படியானால் நாம் எல்லோரும் சதா காலமும் உபயோகிப்பதாகக் கூறும் அறிவுச் சக்தி யாது? அதை நாம் வளர்க்கும் முறை என்ன? அப்படி வளர்ப்பதால் நாம் அடையக்கூடிய நன்மைகள் யாவை?

நாம் அறிவுச் சக்தியை உபயோகிப்பதற்கு எல்லோர்க்கும் தெரிந்த ஓர் உதாரணம் கூறுகிறேன். நான் தீ எரிவதையும் புகை உண்டாவதையும் பார்க்கிறேன். இப்படிப் பல முறை பார்ப்பதாகவும் அதைத் தனித் தனியாக என் தினசரிப் புத்தகத்தில் குறித்துக் கொள்ளுவதாகவும் வைத்துக் கொள்ளுவோம். இப்படிப் பல முறை பார்த்த பின், நான் இந்த விஷயங்களைத் தனித் தனியாக எண்ணாமல் "தீ உண்டானால் புகை உண்டாகும்" என்று ஒரே விஷயமாக முடிவு செய்து வைத்துக் கொள்ளுகிறேன்.

அதன் பின் ஒரு நாள் புகையைப் பார்க்கிறேன். உடனே அங்கே தீ உண்டு என்று அனுமானிக்கிறேன். அங்கே போய்ப் பார்க்கிறேன். தீ உண்டாயிருக்கிறது. அதைக்கொண்டு நான் முன்னால் செய்த முடிவு சரிதான் என்றுஎண்ணுகிறேன். ஆயினும் அதைகொண்டுமட்டும்சரி என்று சொல்லிவிடக்கூடாது என்று எண்ணி நானகவே தீ உண்டாக்கி புகை உண்டாகிறதா என்று பார்க்கிறேன். அப்படிப் புகை உண்டாகுமானால் என் முடிவு சரிதான் என்று தீர்மானிக்கிறேன். இதுதான் விஞ்ஞான முறையாகும்.

இந்த விதமாகவே நம்முடைய அறிவானது எப்போதும் வேலை

செய்வதாகக் கூறினாலும், நாம் வேறு சில விஷயங்களிலும் நம்முடைய மனத்தைப் பறி கொடுத்து இந்த முடிவைச் சரியாகக் கையாளாமல் இருந்து விடுகிறோம். அப்படி நம்முடைய மனத்தைக் கொள்ளைகொண்டு உண்மையை அறியவொட்டா மல் தடுப்பவை மூன்று.

ஏதேனும் ஒரு விஷயத்தைப் பற்றிச் சிந்திக்கும்போது அதை மேற்கூறிய விஞ்ஞான ரீதியாக, அது சம்பந்தமான பொருள்களைத் தேடிச் சேகரிக்கவோ, சேகரித்து ஒரு முடிவு செய்து, அது சரிதானா என்று சோதனை பார்க்கவோ செய்யாமல், அநேக சமயங்களில் நாம் பெரியோர்கள் இந்த விதம் கூறி யிருப்பதால் அதுதான் உண்மை என்று கண்ணை மூடிக்கொண்டு இருந்து விடுகிறோம்.

சில சமயங்களில் நம்முடைய மனமானது விஞ்ஞான ரீதியாக வேலை செய்து உண்மையைக் கண்டபோதிலும் நாம் அது வரை எண்ணிய கருத்துக்களுக்கு அது முரண்பட்டதாக இருப்ப தால், நாம் அதைப் புறக்கணித்து விடுகிறோம். நம்முடைய கருத் துத் தவறு என்று கூறிவிட்டு விடத் துணிவதில்லை. இவ்வளவு காலமாக எண்ணி வந்த நம் முடைய கருத்து தவறாக இருக்குமா என்று எண்ண ஆரம்பித்து விடுகிறோம்.

இது போலவே சில சமயங் களில் விஞ்ஞான முறைகள் உண்மையாகவும் நம்முடைய பழக்க வழக்கங்களுக்கு மாறு பட்டதாகவும் இருக்கக் கூடும். அப்போதும் நம்முடைய மனம் பழக்க வழக்கங்களை விட்டு உண்மை வழி செல்லப் பின் வாங்குவது வழக்கம்.

அதனால்தான் நாம் நம்மிடம் இயற்கையாக வுள்ள அறிவுச் சக்திக்குப் பயிற்சி அளித்து, பெரியோர் வாக்கு, நம்முடைய கருத்து, நாட்டின் பழக்க வழக்கங்கள் ஆகியவைகளைக் கண்டு மயங்காவண்ணம் உண்மையை நாடவும் நாடிய உண்மைப்படி நடக்கவும் ஆற்ற லும் பழக்கமும் உண்டாகுமாறு செய்தல் வேண்டும். அப்படிச் செய்வதுதான் உண்மையில் நாம் அனைவரும் பெறவேண்டிய விஞ் ஞானக் கல்வி யாகும்.

சிறு குழந்தைகள் பேச ஆரம் பிக்கும் சிசுப் பருவத்திலேயே தாம் காணும் பல பொருள்களைப் பற்றியும் அநேக கேள்விகளைப் பெற்றோரிடம் கேட்க ஆரம்பிக் கின்றன. ஆயினும் அதற்கு முன்னதாகவே அவர்களிடம் நாம் மேலே கூறிய அறி வுச் சக்தி வேலை செய்ய ஆரம் பித்துவிடுகின்றது. ஆனால் நாம் தாம் அவர்களைக் கேள்வி கேட்க வொட்டாமல் செய்து அவர்க ளுடைய அறிவை மழுங்கச் செய்துவிடுகிறோம். ஆதலால் குழந்தைப் பருவத்திலேயே நான் கூறிய விஞ்ஞான முறைப்படி அறியும் சக்தியை வளர்க்க ஆரம்பிக்க வேண்டும். அவர்க ளுக்குப் படிக்கத் தெரியாதே என்று சிலர் கூறுவார்கள். ஆம், படிக்கத் தெரியாது. படிக்கத் தெரிய வேண்டிய அவசியமில்லை. படிக்கத் தெரிந்த பிறகுகூடப் புத்தகங்களை மட்டும் வைத்துக் கொண்டு விஞ்ஞானக் கல்வி புகட்டுவது கொஞ்சமும் பயன் தராத செயலாகும்.

விஞ்ஞானக் கல்வி தரவேண்டு மானால் நாம் எதையும் முன் கூட்டிக் கூறிவிடலாகாது. குழந்

தை தானுவே பார்க்க வேண்டும். தானுகவே மூளையை உபயோகித்து விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டும். அதற்குத் தக்க உதவி செய்வதே ஆசிரியருடைய வேலை. இது இன்ன விஷயம், இதற்குக் காரணம், இது வேறுவிதமாக இருக்க முடியாது என்று குழந்தைதானுகவே அறிந்துகொள்ளும்படி செய்ய வேண்டும். இயற்கையுடன் நேராக உறவுகொண்டு இயற்கையின் உண்மைகளை அறிந்து கொள்ளுவதே விஞ்ஞான முறையின் சாரமாகும்.

ஆதலால் எந்த விஷயமானுலும் ஆசிரியர் புத்தகத்திலுள்ளதை வாசித்தலாகாது. நேரில் பார்க்கவும் பரிசோதிக்கவும் செய்யுமாறு செய்ய வேண்டும். தாவர நூல் கற்பிப்பதனுல் குழந்தை தன்னுடைய கையில் புஷ்பத்தை எடுக்கவும் பிரிக்கவும் அறியவும் செய்யுமாறு உதவி செய்யவேண்டும். நாம் உள்ளே சுவாசிப்பது பிராண வாயு, வெளியே விடுவது கரியமல வாயு என்று கூறி உருப்போடும்படி செய்வதை விஞ்ஞானக் கல்வி என்று கூறலாகாது. சுண்ணாம்புத் தெளி நீரில் குழாய் மூலம் சுவாசிக்கச் செய்து உண்மையை அறிந்து கொள்ளுமாறு செய்ய வேண்டும்.

விஷயங்களைக் கூற ஆத்திரப்படலாகாது. விஷயங்களைத் தானுக அறிந்து கொள்ளும்படி செய்வதிலேயே கருத்தைச் செலுத்த வேண்டும். புஸ்தகத்தில் கூறியிருப்பதை எல்லாம் கண்ணுல் கண்டு கருத்து ஒத்துக் கொண்டால்தான் நம்ப வேண்டும் என்று வற்புறுத்திக் கூற வேண்டும். அந்த மாதிரியான குணம் ஏற்படும்படி செய்வதே விஞ்ஞான ஆசிரியருடைய தனிப் பெருங் கடமையாகும். குழந்தையின் மனத்துக்குள் குறைவாகவே விஷயங்களைப் பெய்தாலும் போதும். இந்த வழக்கத்தை ஏற்படுத்திவிட்டால் குழந்தைக்கு அதைப்போன்ற சிறந்த பொருள் வேறு எதுவும் கிடைக்கப் போவதில்லை.

இவ்விதம் எதையும் நேரில் அறியவும் அறிந்த விஷயங்களைக் கொண்டு தானுகவே தக்க முறையில் முடிவு செய்யவும் கற்றுக் கொடுப்பதற்கு எத்தகைய ஆசிரியர்கள் தேவை? ஏதோ ஓரளவு விஞ்ஞான விஷயங்களை அறிந்தவர்கள் போதும் என்று சாதாரணமாக எண்ணுகிருர்கள். அந்த ஆசிரியர், தாம் நிறைத்துள்ள தம்முடைய சிறு வாளியிலிருந்து குழந்தையிடமுள்ள மிகச் சிறு வாளியில் கொஞ்சம் நிறைந்தால் போதும்; அதுதான் ஆரம்ப விஞ்ஞானக் கல்வி; அந்த அஸ்திவாரத்தின் மீது பிறகு பெரிய பெரிய விஞ்ஞான அரண்மனைகளை எழுப்பிவிடுவான் என்று எண்ணுகிருர்கள். அந்த விதமாகத்தான் அநேகமாக ஆரம்பப் பாடசாலைகளில் காரியங்கள் நடைபெறுகின்றன.

"ஆனுல் இப்படி எண்ணுவதைப் போன்ற பெரும் பிழை கிடையாது" என்று ஹக்ஸ்லி கூறுகிருர். ஒன்றும் தெரியாதவர்க்குக் கற்பிப்பதைப் போன்ற கஷ்டமான வேலை வேறு கிடையாது. அதனுல் குழந்தைக்கு விஞ்ஞானம் போதிக்க வேண்டுமானுல் விஞ்ஞானத்தில் ஊறிப்போயிருக்கும் ஆசிரியரே தேவை. கற்பிக்கும் விஞ்ஞான விஷயங்களை எல்லாம் வாழ்க்கையின், அனுஷ்டானத்தில், பழக்க வழக்கங்களில்

கையாளுகிறவரே குழந்தைக ளுக்கு விஞ்ஞானம் கற்பிக்கக் கூடியவராவார்.

ஆசிரியர் பாடசாலையில் பைய னிடம், சூரிய கிரகணம் என்ருல் என்ன, தெரியுமா? என்று கேட்கி ருர். பையன் பாட்டி சொன்ன தைத்தான் கேட்டிருக்கிருன். சூரியனைக் கரும் பாம்பு ஒன்று அப்புகிறதாம், அதனுல்தான் சூரியன் மறைந்து விடுகிருனும் என்று அவன் பதில் கூறுகிருன். ஆசிரியர் உடனே, "அட முட் டாள். அதுவல்லடா. சூரியனுக் கும் பூமிக்குமிடையில் சந்திரன் வந்து சூரிய ஒளியைத் தடுத்து விடுகிறது. அதனுல்தான் நமக் குச் சூரியன் தெரிவதில்லை. இனி மேல் அத்தைப்பாட்டிக் கதையை எல்லாம் நம்பாதே" என்று ஆசிரியர்க்குரிய அதிகார தோர ணையில் கூறி பசுமரத்தில் ஆணி அடித்துவிட்டதாக ஆனந்தம் அடைகின்ருர். மறுநாள் உண் மையாகவே சூரிய கிரகணம் வந்து விடுகின்றது. அவர் காலை யில் எழுந்து தர்ப்பைப் புல்லும் கையுமாக ஆற்றங்கரைக்குச் செல்லுகிருர். அதற்குக் கார ணம் அத்தைப் பாட்டி கூறும் கதைதான் அல்லவா? இத்தகைய ஆசிரியர்கள் விஞ்ஞானம் போதிக்க முடியுமா? இவர்கள் விஞ்ஞானத்தில் ஊறியவர்கள் ஆவார்களா?

இத்தகைய ஆசிரியர்கள் இருந் தால் மட்டும் போதாது. பாட சாலைகளில் விஞ்ஞானக் கல்வியை நேரில் சோதனை செய்து அறிவதற்கு வேண்டிய தளவாடங்களும் வாங்கி வைக்க வேண்டும். அவற்றை உபயோ கிப்பதற்காக ஆசிரியர்களுக்கு அதிக நேரம் செலவாகும். அதிக சிரமமும் கூட. இதற்கெல்லாம் வேண்டிய வசதிகளைச் செய்து தரவேண்டும். அப்படிச் செய் தால்தான் நாம் விரும்பும் விஞ் ஞானக் கல்வி அபிவிர்த்தி அடையும். நம்முடைய மக்க ளிடையே அறிவு முறை அநுஷ் டானம் வளர்ந்தோங்கும்.

இந்த முறை வளர்ந்தோங்கி ஞல் எதையும் வேதவாக்காக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். காய்தல் உவத்தல் அகற்றி ஆராய்ந்து அறிவதே மக்கள் கடன் என்பதை உணர்ந்து நடப் பார்கள். எதையும் நம்பிவிட மாட்டார்கள். எதைக் கூறி ஞலும் சாதிக்கமாட்டார்கள். எதையும் தெளிவாகவே கூறு வார்கள். பல விஷயங்களுக்கு மிடையே தொடர்புகளை அறி வார்கள். இந்த குணங்கள் எல் லாம் எப்பொழுதும்விட இப் பொழுது சுதந்திரம் அடைந்து நாட்டில் புதிய உலகத்தை உண் டாக்க வேண்டிய இந்தச் சமயத் தில் அதிகத் தேவையாகும். ஆதலால் இத்தகைய விஞ்ஞானக் கல்வியை அனைவரும் அடையு மாறு முயல்வோமாக.

*

நிபந்தனை

இங்கிலாந்தில் ஒரு கிராமத்திலுள்ள வாண்டுப் பயல்களின் பிரதி நிதிகளாக இரண்டு சிறுவர்கள், ஒரு அம்மாளிடம்வந்து, "நீங்கள் உங்கள் தோட்டத்தில் பழம் பழுக்கிற பருவம் வந்ததும் எங்களுக்குப் பழங்கள் கொடுப்பதாக இருந்தால், உங்கள் தோட்டத்தில் களவு நடக்காதபடி பந்தோபஸ்து செய்கிறேம்" என்ருர்களாம்.

பொது உடைமை அரசு வரும் என்றால் பெண்களும்கூட பொதுச் சொத்தாக்கப் படுவார்கள் என்று பலர் வாய் கூசாமல் பேசு கிறார்கள். இதுபோன்ற எண்ணற்ற சந்தேகங்கள் பொது உடைமை சம்பந்தமாக அநேகருக்கு இருந்து வருகின்றன. அந்தச் சந்தேகங்களைப் போக்க உதவுகிறது இக்கட்டுரை.

பொது உடைமை நாட்டில் சொத்துரிமை

கண. முத்தையா

ஏதாவது ஒரு புதிய பொருளை யோ, புதிய நிறத்தையோ கண்டால், அது என்னவென்று கவனியாமலேயே வாலை உயர்த் தித் தலையைத் தாழ்த்திக்கொண்டு சண்டைக்குத் தயாராகி விடுவது காளைமாட்டின் இயற்கை. மனிதர்களிலும் அம்மாதிரிக் குணம் படைத்தவர்கள் அநேகரி ருக்கிறார்கள். புதிய தத்துவங் களையோ, புதுக் கருத்துக் களையோ கேட்கும்போது அதன் தன்மையைப் பற்றி ஆராயாம லேயே அதை எதிர்க்கத்தொடங்கி விடுவது இவர்களின் வழக்கமாகி விட்டது. இவ்விதப் பழக்கத் தால் அறியாமையும் மூட நம்பிக்கையும்தான் வளர்ந்து கொண்டு போகிறது.

காரல் மார்க்ஸின் பேரறிவால் விஞ்ஞான உருவம் கொடுக்கப் பெற்று, லெனினின் ஒப்பற்ற செயல் திறமையால் வெற்றி யடைந்திருக்கும் பொது உடைமைக் கொள்கை இன்று உலகத்தின் கவனத்தைப் பல மாகக் கவர்ந்திருக்கிறது. பழம் பசலிகள் இதைத் திரும்பிப் பார்க்கக் கூட மறுத்தபோதிலும் எதிர்கால சந்ததியாருக்காக இதை ஆராயவேண்டியது அவசியமாயிருக்கிறது. பொது உடைமைக் கொள்கையின் எல்லாப் பகுதிகளையும் ஆராய் வதற்கு இங்கு இடம் போதாது. பொது உடைமைக்கொள்கையில் சொத்துரிமை என்ற பகுதியை மட்டும் இங்கு கவனிப்போம். "பொது உடைமை" என்ற சொல்லைக் கேட்டதும் எல்லாம் எல்லாருக்கும் பொது என்ற ஒரு தவறான கருத்து உண்டாயிருக் கிறது. பொதுஉடைமை நாட்டில் தனி மனிதனுக்கு எவ்வித உரிமையு மிருக்கமாட்டாது என்று இவர்கள் கருதுகிறார்கள். உதாரணமாக சமீபத்தில் பொது உடைமைக் கட்சியைச் சேர்ந்த ஒரு நண்பர் தமது சட்டைப் பையில் ஒரு பார்க்கர் பேனா வைத்திருந்தார். இதைப் பார்த்த ஒரு காங்கிரஸ்காரர், "இவர் தம்மைக் கம்யூனிஸ்ட் என்று சொல்லிக் கொள்கிறாரே, இவ ருக்குப் பார்க்கர் பேனா ஏது?" என்று கேட்டார். ஒரு கம்யூனிஸ்டுக் கட்சிக்காரர் தமக் குச் சொந்தமாக ஒரு நல்ல பேனா எப்படி வைத்துக்கொள்ள முடி யும்; எல்லாம்தான் பொது உடைமையாயிற்றே, என்பது இந்தக் காங்கிரஸ்காரரின் கருத் துப் போலும். இன்னும் கொஞ் சம் துணிவுள்ளவர்கள், 'பொது உடைமை நாட்டில் பெண் கள் யாவரும் பொதுச் சொத்துத் தானாமே?' என்று தைரியமாகக் கேட்டுவிடுகிறார்கள். பெண்களைச்

சொத்து என்று கருதுவதே அக்கிரமம். மனிதர்களை விலைக்கு வாங்கும் சக்தி முதலாளித்துவத்திற்குத்தான் உண்டு. பொது உடைமைக் கொள்கை மனித சமுதாயத்தின் எந்தப் பகுதியையும் சொத்தாகக் கருதுவதில்லை. பொது உடைமைக் கொள்கை சொத்துக்களை இரண்டுவிதமாகப் பிரிக்கிறது: முதலாவது உற்பத்தி சாதனங்கள். இரண்டாவது உபயோகப் பொருள்கள். சாமான்களைத் தயாரிக்கும் பெரிய பெரிய தொழிற்சாலைகள், இயந்திரங்கள், மூலப் பொருள்களை நல்கும் சுரங்கங்கள், பூமி, உணவுப் பொருள்களை விளைவிக்கும் விளைநிலங்கள், இவை யாவும் உற்பத்தி சாதனங்கள். இந்த உற்பத்தி சாதனங்கள் யாவும் நாட்டிற்கு—சமுதாயத்திற்குச் சொந்தமாயிருக்கவேண்டும்; இவைகளின் மீது தனி மனிதனுக்கு எவ்வித அதிகாரமும் இருக்கக் கூடாது என்பது பொது உடைமைக் கொள்கையின் கருத்து. ஆனால் அதே சமயத்தில் உபயோகப் பொருள்களின் மீது தனி மனிதனுக்குள்ள பாத்தியதையைப் பொது உடைமைக் கொள்கை மறுக்கவில்லை. தனி மனிதன் குடியிருக்கும் வீடு, உடுத்தும் உடைகள், வீட்டில் புழங்கும் சாமான்கள், எழுதும் பேனா, சொந்த உபயோகத்திற்காக உள்ள பைசிக்கிள், மோட்டார்கார் போன்ற வாகனங்கள், படிக்கும் புத்தகங்கள் முதலியன தனி மனிதனுக்குச் சொந்தமாயிருப்பதைப் பொது உடைமைக் கொள்கை ஆதரிப்பதோடு மட்டுமல்ல, ஒவ்வொரு மனிதனும் சுகமாயிருப்பதற்கு அவசியமான எல்லா வசதிகளையும் பெற்றிருக்க வேண்டுமென்றும் வற்புறுத்துகிறது. பொது உடைமையிலும் தனிச் சொத்துரிமை இருக்கத்தானே செய்கிறது? உற்பத்தி சாதனம், உபயோகப் பொருள் இவற்றைப் பிரிப்பதில் குழப்பமேற்படக் கூடுமல்லவா? என்ற சந்தேகம் வாசகர்களுக்கு ஏற்படலாம். இங்கு "சொத்துரிமை" என்றால் என்ன,என்பதைச் சரியாகப் புரிந்து கொள்வது நலம். ஜன நாயக நாடுகளில் "சுதந்திரம்" என்ற சொல்லுக்கு என்ன வியாக்கியானம் செய்யப்படுகிறதோ அதே வியாக்கியானம் பொதுஉடைமைக் கொள்கையில் "சொத்துரிமை"க்கும் பொருந்தும். ஜன நாயக நாடுகளில் 'சுதந்திரம்' என்றால் ஒவ்வொரு மனிதனும் தன்னிஷ்டப்படி சிந்திக்கவும், பேசவும், தன் விருப்பப்படி காரியங்கள் செய்யவும் உரிமை யுடையவனாயிருக்க வேண்டும். ஆனால் அதே சமயத்தில் அந்த உரிமை பிறருக்குத் தீங்கு செய்வதாகவோ, பிறருடைய உரிமைகளுக்குப் பாதகம் விளைவிக்கக் கூடியதாகவோ இருக்கக் கூடாது என்று பொருள் கூறப்படுகிறது. அதே போல் பொது உடைமைக் கொள்கையில் "சொத்துரிமை" பற்றி, ஒவ்வொரு மனிதனும் சுகமாகவும் மகிழ்ச்சியுடனும் வாழ்வதற்கான வசதிகளைப் பெற உரிமை யுடையவனாயிருக்கிறான். ஆனால் அந்த உரிமைகளைக்கொண்டு பிறரைச் சுரண்டவோ பிறருடைய உழைப்பைத் திருடவோ உரிமை கிடையாது என்று பொருள் கூறலாம். உதாரணமாக மோட்டார் காரை எடுத்துக் கொள்வோம். ஒரு மனிதன் தன் சொந்த தேவைக்காகவும், தனது பிரயாணத்தைத் துரிதமாக முடிப்பதற்காகவும் அதை உப

யோகிக்கும் வரை அது அவ னுக்கு உபயோகப் பொருளா யிருக்கலாம். ஆனல் அவன் ஒரு மோட்டார் ஓட்டியைச் சம்பளத் திற்குச் சேர்த்து, அவனைக் கொண்டு அந்தக் காரை வாடகைக்கு ஓட்டுகிருனென் றும், அதில் வரும் வருமானத் தில் ஒரு பகுதியை, மோட்டார் கார் உரிமைக்காகத் தான் லாப மாக அடைகிரு னென்றும் வைத்துக்கொள்வோம். அப்படி அவன் செய்யத் தொடங்கும் போது அந்த மோட்டார் கார் உற்பத்தி சாதனம் — அதாவது மூலதனம் என்ற பகுதியில் சேர்ந்துவிடும். இந்த நிலையில் அவ னுடைய சொந்த உபயோகத் திற்குக் கார் அவசியமில்லை யென்ற காரணத்தாலும், அதைக் கொண்டு அவன் பிறருடைய உழைப்பைத் திருடத் தொடங்கி விட்டமையாலும் அந்தக் கார் சமூகச் சொத்தாக ஆக்கப்பட வேண்டும். ஒரு மனிதன் சௌக் கியமாகவும் வசதியுடனும் வசிப்பதற்காக ஒரு வீடு கட்டு கிருனென்று வைத்துக்கொள் வோம். அவன் தன் சொந்த தேவைக்காக உபயோகிக்கும் வரை அது அவனுடைய சொத்தே. ஆனல், அந்த வீட் டில் அவனுடைய தேவைக்கு அதிகமான ஒரு பகுதியை வாட கைக்கு விட்டு லாபம் சம்பா திக்க முயற்சி செய்தாஞகில், அந்த அதிகமான பகுதி பொதுச் சொத்தாக்கப்பட வேண்டும். அதற்கு முதலாவது காரணம் அந்தப் பகுதி அவனுடைய தேவைக்கு அவசியமல்ல வென் பது. இரண்டாவது காரணம் அவன் அந்த அவசியமில்லாத பகுதியைக் கொண்டு பிறருடைய உழைப்பைத் திருட அனுமதிக்க முடியாதென்பது.

"தகுதிக்கேற்ப உழைப்பது, தேவைக்கேற்பபெறுவது" என்ற பொது உடைமைக் கொள்கை யின் எல்லையை அடைவதற்குமுன ஞல் "தகுதிக்கேற்ப உழைப்பது, உழைப்பிற் கேற்ப பெறுவது" என்ற சமுதாயக் கொள்கை (Socialism) அமலிலிருக்கும் காலத்தில் தனி மனிதன், தன் உழைப்பின் பலனைக் கிடைக் கும் பணத்தில் ஒரு பகுதியை பாங்கியில் சேமித்து வைத்துக் கொள்ளக்கூட அனுமதிக்கப் படுகிருன். ஆனல் பிற்காலத் தில் எப்போதாவது உபயோகிப் பதற்காக, செலவழிப்பதற் காகச் சேமித்து வைக்கலாமே தவிர, அதை மூலதனமாக உப யோகிக்கவோ, வார்சுதாரர் களுக்கு விட்டுச் செல்லவோ முடியாது. அவன் அந்தப் பணத்தை உபயோகிக்காம லேயே இறந்துவிடுவாஞ கில், பாங்கியில் சேமிக்கப் பட்டிருக்கும் அந்தப் பணம் முழுவதும் பொதுச் சொத்தாக் கப் பட்டுவிடும். இப்போது ஒரு பிரச்னை எழக்கூடும். ஒரு மனி தன், தன் தேவைக்கதிகமான சாமான்களையோ, அல்லது ஒரு வீட்டில் தன் அவசியத்திற்கதிக மான பகுதிகளையோ தன் சொந்த உபயோகத்திற் கென்று வைத்துக்கொண்டு பிறருக்குச் சிரமங் கொடுக்கக் கூடுமல்லவா? இங்கு நாம் ஒரு முக்கியமான விஷயத்தைக் கவனத்தில் வைத் துக்கொள்ள வேண்டும். ஒரு மனிதனுக்கு, உபயோகப் பொருள்களின் மீது உரிமையை அனுமதிக்கும்போதுமுதலாதாக அந்தப் பொருள் அவன் உபயோ கத்திற்கு அவசியந்தானு என் பதையும், இரண்டாவதாக அத ஞல் மற்றவர்களுக்கு எவ்வித இடைஞ்சலுமில்லையா என்ப

டால்டாவில்

வறுத்த பூரிகள்

எப்பொழுதும் நன்றாக வாய்க்கின்றன

கோதுமை மாவிலோ, மைதாமாவிலோ அல்லது இரண்டையும் கலந்தோ பூரிகள் செய்யலாம். ருசியான பூரிகள் செய்ய, மாவில் சிறிது டால்டாவை கலந்து வேண்டிய ஜலம் சேர்த்துக்கொண்டு பதமாவதுவரை நன்றாக பிசையவும். முட்டியால் மாவை அமுக்கி சிறிது ஜலம் தெளித்து ஒருமணிநேரம் மூடிவைக்கவும். பிறகு சிறிய பந்துகளாக உருட்டி அப்பளக்குழவியால் பரத்தி சூடான டால்டாவில் போடவும். வறுக்கும்பொழுது சட்டுவத்தால் சுற்றிவர பூரிகளை மெதுவாக அமர்த்திக்கொண்டிருக்கவும். உப்பினதும் பூரிகளை மறுபக்கம் திருப்பவும். சுமாராக சிவந்ததும் வாணலியிலிருந்து எடுத்து, காகிதத்தில் எண்ணெயைவடித்து, சூடாக பரிமாறுங்கள். டால்டாவில் வறுத்த பூரிகள் சத்துள்ளவை.

சமையல் சம்பந்தமான பிரச்னைகளைப்பற்றித் தெரிந்து கொள்ளவேண்டுமா? எங்களுக்கு எழுதுங்கள் :

தி டால்டா
அட்வைஸரி ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

HVM. 75-50 TM

வாழ்க்கையில் புதிய ஒளி

பண்டிட் டி. கோபாலாசார்லுவின்

ஜீவாம்ருதம்

சந்தோஷமும் ஆரோக்கியமும்
நிரம்பிய குடும்பத்தின் அழகே அலாதியானதுதான்.
ஜீவாம்ருதம் தேக புஷ்டியையும் வீரிய விருத்தியையும்
அளிப்பது. ஆண், பெண் இருபாலரும் சாப்பிடக்கூடியது. இது
நரம்புகளை வலுப்படுத்தி, வாழ்க்கையில் புதிய இன்பத்தைத் தரவல்லது.

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட் மதராஸ் 17

அரிய நாவல்கள்

		ரூ.	அ.
சிப்பாய் ஹிருதயம்	'சுகி'	1	8
வளர் பிறை	'மாறன்'	3	0
பாச வலை	ய. ல.	1	8
மரகதம்	விக்டர் ஹ்யூகோ	5	0
மிருணளினி	பங்கிம் சந்திரர்	2	8
தபசியும், தாசியும்	அனத்தோல் பிரான்ஸிஸ் (அச்சில்)		

தபால் செலவு தனி

கார்த்திகேயனி பிரசுரம்

இராமச்சந்திரபுரம், திருச்சிறாப்பள்ளி ஜில்லா

தையும் கவனித்தே பொது உடைமைக் கொள்கை அனுமதிக்கிறது. இந்த இரண்டில் ஒன்று குறைந்தாலும் அந்த உரிமை மறுக்கப்பட்டுவிடும். இதை ஓர் உதாரணத்தின் மூலம் விளக்குவோம்:

நாம் ஒரு லோகல் ரயிலில் பிரயாணம் செய்வதாயும், நாமிருக்கும் வண்டியில் நான்கைந்து பிரயாணிகளே இருப்பதாயும் வைத்துக்கொள்வோம். அதில் ஒரு பிரயாணி ஒரு பெஞ்சு முழுவதையும் கைப்பற்றிக்கொண்டு நிம்மதியாகக் காலை நீட்டிப் படுத்துத் தூங்குவாரானல் அவரை யாரும் தடுக்கமாட்டார்கள். அங்கு உரிமைப் பிரச்னையும் எழமாட்டாது. ஆனல் அந்த ரயில் அடுத்த ஸ்டேஷனை அடைந்ததும் அங்கு பல பிரயாணிகள் நம் வண்டியில் ஏறுகிறார்களென்றும், அதில் சிலர் உட்காரக்கூட இடமின்றி நின்றுகொண்டிருக்கிறார்களென்றும் வைத்துக் கொள்வோம். அப்போது அந்த முதலாவது பிரயாணி, முன்னதாகவே இடத்தைக் கைப்பற்றிக் கொண்ட உரிமையைக் கொண்டோ, அல்லது அவர் தூங்க வேண்டியதின் அவசியத்தைக் கருதியோ அவரை அப்படியே தூங்கிக்கொண்டிருக்க அனுமதிக்கமுடியுமா? முடியாது. அவர் எழுந்திருந்து, மற்றவர்கள் உட்கார இடம் கொடுக்கத்தான் வேண்டும். இதே போலத்தான் மக்களின் தேவைக்கதிகமாகப் பொருள்களும், இடமும் இருக்குமாயின் பிரச்னை எழவேமாட்டாது. மக்களில் பலர் பொருளும் இடமும் இல்லாமல் கஷ்டப்படும் போது, ஒருவன் தேவைக்கதிகமாக வைத்திருப்பதை மட்டுமல்ல, அவன் தேவையை அதிகப்படுத்திக் கொள்வதைக்கூடப் பொது உடைமைக் கொள்கை தடுக்கவே செய்யும்.

பொது உடைமை நாட்டில் பிறரைச் சுரண்டுவதற்கும், மற்றவர்களின் உழைப்பைத் திருடுவதற்கும் துணை செய்யக் கூடியதானமூலதனங்களின்மீது, உற்பத்தி சாதனங்களின்மீது, எந்தத் தனி மனிதனுக்கும் எவ்வித உரிமையுமிருக்காது. ஆனல் மனிதனின் வாழ்க்கைக்கு அவசியமான உபயோகப் பொருள்களின் மீது அவனுடைய உரிமை அங்கீகரிக்கப்படுமாயினும் அதனல் பிறருக்கு இடைஞ்சலோ, மற்றவர்களின் உரிமைக்கு ஆபத்தோ ஏற்படக் கூடாது.

✲

புதுமாதிரிக் கடன் வசூல்

திருநெல்வேலியில் ஒரு ஷாப்புக்கடையின்முன் பின்கண்டபடி எழுதப்பட்ட ஒரு போர்டு தொங்குகிறது:

" திருநெல்வேலி கஸ்பா......தெரு ......ம் நம்பர் வீட்டில் குடியிருக்கும்......என்பவர் தம் வீட்டுக்காரிக்கு வாசனைத் தைலமும் சோப்பும் வாங்கிய வகையில் 12 அணா பாக்கியிருக்கிறது. அந்தப் பாக்கியைக் கேட்டால் அவர் தரமுடியாது என்றும், உம்மால் ஏண்டதைப் பார்த்துக் கொள்ளும் என்றும் சொல்லுகிறார். இதை நீங்களே அறியவும் "

—தொ. மு. சி.

குழந்தையின் வீட்டு வாழ்க்கை

மு. அருணாசலம்

'குழந்தையின் அன்பிற்கும் மரியாதைக்கும் பாத்திரமாக வீட்டு வாழ்க்கையில் யார் யார் அமைகிறார்களோ அவர்கள் அனைவருக்கும் இந்தப் பொறுப்பு உண்டு.' எந்தப் பொறுப்பு, என்பது கட்டுரையில் கூறப்பட்டிருக்கிறது.

குழந்தை வளர்ப்பில், அதன் வீட்டு வாழ்க்கைபற்றி முக்கியமான இரண்டு அம்சங்களை இங்கு நாம் கவனிக்க வேண்டும்.

முதலாவதாக, பெற்றோர் முதலிய பெரியவர்கள் குழந்தையின் எதிரில் தங்களுக்குள் பழகும் முறை. நவீன நாகரிகம் இன்று வளர்ந்து வரும் முறையில், எல்லாக் குடும்பங்களிலும் அன்பும் அமைதியும் நிலவிவிடவில்லை. தாய் தந்தையரிடையே பலவகையான மனக் கசப்புகளும் அபிப்பிராய பேதங்களும் இருந்து வருகின்றன. குடும்பத்திலே சில்லறைச் சச்சரவுகளும் பெரிய போராட்டங்களும் மலிந்து வருகின்றன. இவற்றுக் கிடையே குழந்தை தனக்கு இயற்கையான அழகிய முறையில் வளர வேண்டுமானால், இச் சச்சரவுகள் நிற்பது சிறப்பு. இது முடியாத விடத்து, பெரியவர்களான பெற்றோர், தங்களிடையுள்ள அற்பச் சச்சரவுகளைக் குழந்தை சிறிதும் அறியாதவாறு ஒழுகுவது அவசியமாகும்.

தாயும் தந்தையும் அடிக்கடி சண்டை போட்டுக் கொள்ளுவதைப் பார்த்தும் கேட்டும் வருகிற குழந்தை, நல்ல பழக்கமுடையதாக வளராது. அடிக்கடி சச்சரவிடும் பழக்கம் அதனிடம் பெருகும். மற்றவர்களோடு சண்டை இடுவது முற்றி, நாளடைவில் பெற்றோரிடம் சச்சரவிடவும் நேரும். சாதாரணமாக எந்தக் குழந்தையும், உரத்துப் பேசுதல், கோபமாய்ப் பேசுதல், திட்டுதல் முதலிய கேடான தன்மைகளைப் பெற்றோரைப் பின்பற்றியே கற்கிறது. ஆதலால், பெற்றோர் குழந்தையின் நற்பழக்கங்களை வளர்க்க எண்ணினால், இது பற்றி மிக்க எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்.

அதாவது, பெற்றோர் தங்கள் குறைபாடுகளைக் குழந்தையினிடம் காட்டவோ, அதன் முன்னிலையில் வெளிப்படுத்தவோ கூடாதென்ற திட சித்தம் வேண்டும். இதையே மற்றொருவிதமாயும் சொல்லலாம்: எல்லோருக்கும் குழந்தையிடம் அன்பு இருக்கிறது. அதற்கு மேலாக, மரியாதையும் இருக்கவேண்டும். நாம் பெரியோர்களிடம் அன்பு காட்டுகிறோம்; மரியாதையும் காட்டுகிறோம். குழந்தையிடமும் அப்படியே இரண்டும் வேண்டும்; குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தே என்ற பழமொழி இதையே குறிப்பிடு

கிறது. பெரியோர் முன்னிலையில் எப்படி நாம் நம் குறைபாடுகளைக் காட்ட விரும்பமாட்டோமோ, அதைப்போல, குழந்தையின் முன்னிலையிலும் காட்டலாகாது. இதைத்தான் குழந்தைக்குரிய மரியாதை என்று குறிப்பிடுகிறோம்.

பெற்றோரிடம் பரஸ்பர நம்பிக்கையும் அன்பும் மரியாதையுமே இருக்கக்காண்கிற குழந்தைதான் அவர்களிடம் நம்பிக்கையும் அன்பும் மரியாதையும்கொண்டு, நடக்கும். இதனோடுகூட, தன் பெற்றோர் முதலியவர்கள் இப்படியே தன்னிடத்தில் நம்பிக்கையும் அன்பும் மரியாதையும் காட்டுமாறு ஒழுகத் தலைப்படும்; சார்ந்த தன் வண்ணமாதல் குழந்தையின் முக்கிய இயல்பல்லவா?

இனி இரண்டாவது அம்சம்.

குழந்தையின் வாழ்க்கையில் எப்போதும் இன்பமும் ஆர்வமும் நிறைந்திருக்கும். பெற்றோர் தங்களுடைய கோபதாபம் முதலியவற்றால் இந்தப் பண்புகளைப் போக்கிவிடலாகாது. பெரியவர்களின் மனம் ஒரு சமயம் இருப்பதைப்போல் மற்றொருசமயம் இருப்பது இல்லை. அவர்களுடைய மனப்போக்கு, சித்தவிருத்தி, அடிக்கடி மாறுபடுகிறது. இந்த மாற்றத்தை அப்படி யப்படியே குழந்தையிடம் காட்டுவது, குழந்தையுள்ளத்துக்குக் கேடு செய்யும்.

ஒரு குழந்தை எப்போதுமே உற்சாகத்தோடு இருக்கிறான். உற்சாகத்தோடு ஒன்றைச்சொல்லவோ கேட்கவோ தந்தையைத் தேடி வருகிறான். அவர் ஒரு சமயம் அவனிடம் அன்பாய்ப் பேசி அவன் கேட்பவற்றைச் சொல்கிறார்; அல்லது கொடுக்கிறார். அதேபோன்று மற்றொரு சமயம் குழந்தை மீது எரிந்து விழுகிறார். அவர் நடத்தையில் உள்ள இந்த வேறுபாடு குழந்தைக்கு எப்படி விளங்கும்? அவருடைய எரிச்சலுக்குப் பல காரணங்கள் இருத்தல் கூடும். அந்தக் காரணங்கள், நியாயமாகவும் தோன்றலாம். உதாரணமாக, வேலையில் ஏற்பட்ட தொந்திரவு, அன்றைய உணவில் உண்டான அதிருப்தி, செலவுக்குப் பணம் இல்லாமை, வண்ணான் துணி கொண்டு வாராமை முதலான காரணங்கள் நமக்கு ஞாபகம் வரும். ஆனால், இக் காரணங்களால் குழந்தையிடம் அன்பு குறைவதற்கும் எரிச்சலைக் காட்டுவதற்கும் நியாயமே இல்லை.

பள்ளிக்கூடத்திலிருந்து வீடு நோக்கி வருகிற பையன் வழியில் ஒரு வேலியில் அழகான பூ ஒன்றைப் பார்த்திருக்கிறான். முன்னமே அதைப் பார்த்த பழக்கமில்லை. அதைக் கையில் எடுத்துக்கொண்டு அப்பாவிடம் வருகிறான். அதன் பெயர் முதலான விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்பது அவன் ஆசை. தகப்பனார் அன்போடு அவனிடம் பேசி, விருப்பத்தோடு அப் பூவைப் பார்த்து, அவன் கேட்பவற்றைத் தாம் அறிந்த வரையில் விளக்கிச் சொன்னாரானால், பையனுக்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டாகிறது. இந்தப் பூவை அறிய ஆசை கொண்டதைப் போலவே, மேலும் மேலும் புதுப்புது விஷயங்களைத் தெரிந்துகொள்ளுவதில் அவனுடைய ஆர்வம் வளர்கிறது, அறிவும் அனுபவமும் வளர்கின்றன.

அப்பாவுக்குப் பூவின் விவரம் தெரியாமல் இருக்கலாம்; தெரியா விட்டாலும் மற்ருெரு நாளாவது அவர் அதைத் தாம் விசாரித்து அறிந்து அவனுக்குச் சொல்வாராஞல், அவன் மிக்க மகிழ்ச்சி அடைகிருன். இதுவே அப்பாவிடம் அவனுக்கு அன்பும் நன்மதிப்பும் பிறக்க ஏதுவாய் இருக்கிறது.

அல்லது, தகப்பஞர், 'எனக்குத் தெரியாது' என்று மாத்திரம் சொல்லி நிறுத்திவிட்டாலுங் கூட, விசேஷக் கெடுதல் இல்லை.

ஆஞல், 'வேறு வேலை இல்லை, போடா,' என்று அப்பா எரிந்து விழுந்தார் என்று வைத்துக் கொள்வோம். குழந்தையுடைய உற்சாகமெல்லாம் பறந்துபோய், அவன் உள்ளம், நன்ருய் மலர்ந்து பொலியத் தயாராய் இருந்த உள்ளம், அப்படியே சுருங்கிக் குன்றி மடிந்துவிடுகிறது. மற்ருெரு சமயம் இதே போல ஒரு புதிய பொருளைக் காணும் போது, முதலில் அதை அறிய வேண்டும் என்கிற ஆசை முன் போல இயல்பாக உண்டாகும். அதே கணத்தில் அப்பா திட்டுவார் என்ற அச்சம் ஏற்படுகிறது. தன் ஆசையை அடக்க முயல்கிருன். மேலும், எரிந்து விழுகிற தகப்பஞர், 'வேலிப் பூவை நீ யேண்டா போய்ப் பறித்தாய்?' என்று ஒரு சமயம் கேட்டாலும் கேட்கலாம் அல்லவா? இப்படியாக இயல்பாகத் தன் மனத்தில் எழுந்த குற்றமில்லாத ஆவலைப் பூர்த்தி செய்யவும் அடக்கவும் முடியாமல், குறித்த பொருளைப் பிறர் கண்ணில் படாமல் தானே மறைத்து வைத்திருந்து தானே மறைவாகப் பார்த்துப் பார்த்து மகிழ்கிருன்.

இந்தத் தத்துவத்தை ரவீந்திரநாத தாகூர் தாம் எழுதிய "தங்கத் தோணி" என்ற சிறு புத்தகத்தில் "பறவையின் இறகு" என்ற சிறு கதையின் மூலம் மிகவும் அழகாக விளக்கி இருக்கிருர்.

இந்த நிலையில்தான் குழந்தையிடம் மறைக்கும் சுபாவம் பிறக்கிறது.

பெற்ருேர் இந்த விதம் நடப்பது காரணமாக பையனுக்கு அறிவதில் ஆசை குறைவது ஒருபுறம். மற்ருெருபுறம் மிகவும் கேடான உள் நடுக்கம் (ஆங்கிலத்தில் நெர்வஸ்நெஸ்) உண்டாகிறது. அப்பா குறித்த சந்தர்ப்பத்தில் அன்பாகப் பேசுவாரா, அல்லது என்னதான் சொல்வார், என்பது பற்றி நிச்சயமான எண்ணம் இல்லாத படியால், கோபிப்பாரோ என்ற அச்சந்தான் எப்போதும் முதலாவதாக வருகிறது. இதஞல் அப்பாவிடம் வரும்போது அவனுக்குச் சிறு நடுக்கம் ஏற்படுகிறது.

இதுவே பிறகு நிலைத்த உள் நடுக்கமாக வளர்கிறது. இது அக் குழந்தையிடம் நடைச் சிறப்பு அல்லது குண விசேஷம் அடைவதைப் பாதிக்கிறது. ஆகலால், குழந்தையிடம் எக்காரணம் பற்றியும் இவ்வித உள் நடுக்கம் வராதபடி நடந்து கொள்ளுவதில் பெற்ருேருக்குள்ள பொறுப்பு மிகவும் பெரியது.

பெற்ருேர் மாத்திரமல்ல, பிற உறவினர்களான பெரியவர்கள் சகோதர சகோதரிகள் முதலாக, குழந்தையின் அன்பிற்கும் மரியாதைக்கும் பாத்திரமாக வீட்டு வாழ்க்கையில் யார் யார் அமைகிருர்களோ அவர்கள் அனைவருக்கும் இந்தப் பொறுப்பு உண்டு.

அந்தச் சிறுவன்

மாக்ஸிம் கார்க்கி

சின்னக் கதைதான். சொல்லுவதென்பது கஷ்டமான காரியம்; ஏனென்றால் அத்தனை சாதாரணமானது. எல்லா ஓய்வு நாட்களிலும்—கோடையாயினும், வசந்தமாயினும் — எங்கள் தெருப் பிள்ளைகளையெல்லாம் ஒன்றுதிரட்டி, வயல் வெளிகளுக்கும் காட்டுப் புறங்களுக்கும் விளையாட அழைத்துச் செல்வேன். அந்தப் பாலியத்தில், சிறுவரோடு சிறுவனாய் ஒன்றிப் பழகி, பறவையினம்போலக் களித்து விளையாடியது எனக்குப் பிடித்துப் போயிற்று.

தங்கள் தாய்மார்கள் கொடுத்த ரொட்டித் துண்டுகளை இடுக்கிக் கொண்டு நெருக்கமும் புழுதியும் நிறைந்த தெருக்களைவிட்டு விலகி விளையாட வருவதில் குழந்தைகளுக்கு ஒரே குஷி. நானும் கொஞ்சம் சர்க்கரை மிட்டாய் வாங்கிக் கொள்வேன்; மேலும் பாட்டில் நிறைய பீர் அடைத்துக் கொள்வேன். பின் கவலையற்ற ஆட்டு மந்தையைத் தொடர்ந்து செல்லும் இடையனைப் போல, ஊரைக் கடந்து, வயல்களைக் கடந்து, வசந்தத்தின் மரகதப் போர்வை போர்த்த அழகிய பச்சைப் பசுந்தழைக் காடு நோக்கிச் செல்லுவேன்.

வழக்கம்போல் அன்றும் காலையிலேயே புறப்பட்டுச் சென்றோம்; செல்லும்போது தேவாலயத்தில் காலைஜெபத்து மணியோசை கேட்டது; மணியின் கலகலப்புக்கும், புழுதிப் படலத்துக்கும் இடையில், சிறுவர்களின் மெல்லிய காலடி யோசைகளும் கேட்டன. மத்தியான வேளையில், வெயில் ஏறியபின், விளையாடிக் களைத்த நண்பர்களெல்லாம் காட்டுப் புறத்தின் கோடியில் கூடினர்கள்; உணவருந்தியபின் சின்னஞ் சிறுவர்கள் புல்லாந் தரிசில் தூங்கப் போனர்கள்; வயது வந்த சிறுவர்கள் என்னைச் சுற்றி வளைந்து கொண்டு, கதை சொல்லச் சொல்லி அங்காந்திருந்தனர்; நானும் அவர்களுடைய கலகலப்பில் கலந்துகொண்டேன். வாலிபத்தின் அகந்தை நிறைந்த தன்னம்பிக்கையும், வாழ்க்கையைப் பற்றிய அரைகுறை ஞானத்தின் கெந்தளிப்பும் என்னுள் இருப்பினுங்கூட, அறிவாளிகளின் நடுவே அமர்ந்த இருபது வயதுக் குழந்தையைப் போலவே என்னைக் கருதினேன்.

எங்கள் தலைக்குமேல், நித்யமான வான மண்டலம் நீண்டு கிடந்தது; முன்னல் ஆழ்ந்த அமைதியிலே புதைந்து கிடக்கும்

இந்த ருஷ்யக் கதையை ஸ்ரீ ரகுநாதன் மொழிபெயர்த்துத் தருகிருர். "இந்தக் கதை முழுவதுமே தெளிவற்றும் சர்வ சாதாரணமாகவும் இருக்கிறது அல்லவா? ஆனல்......"

வனந்திரச் செழுமை; இளங் காற்று சரசரக்கிறது; மெல்லிய முணுமுணுப்பு ஊடுபாய்கிறது; வாசனை நிறைந்த செடி கொடிகள் சிலிர்க்கின்றன; மீண்டும் அமைதி இதயத்தை நிறைக்கிறது.

அகண்ட நீல வானத்தில், வெண் மேகங்கள் மெதுவாக நீந்திச் செல்லுகின்றன; சூரிய ஒளியால் சூடேறிய பூதலத்திலிருந்து அண்ணாந்து பார்த்தால் வான மண்டலம் குளுமையானதாகத் தோன்றுகிறது; எனினும் அந்தக் குளுமையில் மேகங்கள் கரைந்துருகிப் போவதைக் காணப் புதிராக இருந்தது.

என்னைச் சுற்றியோ, வாழ்க்கையின் சகல இன்ப துன்பங்களையும் அறிந்துகொள்ள விழைந்த இந்தச் சின்னஞ் சிறுர்கள்!......

அந்த நாட்கள் என் வாழ்வின் நன்னாட்கள்; இனிய விருந்துகள். வாழ்க்கையின் இருட் கோட்டங்களின் மூலம் பாசி பற்றிய என் இதயம் குழந்தை உணர்ச்சிகளிலும், நினைவுகளிலுமுள்ள தெள்ளிய ஞானத்திலே மூங்கி மூழ்கி புத்துயிர் பெற்றது.

ஒருநாள், சிறுவர் கூட்டத்தோடு ஊரைவிட்டு வயல் வெளிகளுக்குச் செல்லும் வழியில் ஒரு அன்னியனைச் சந்தித்தோம். அவன் ஒரு பூதச் சிறுவன்—வெற்றுக் கால்கள்; கிழிந்த சட்டை; கரிய புருவம்; ஆட்டுக் குட்டியைப் போல, மெல்லிய ரோமச் சுருளைகள். ஏதனாலோ அவன் மனம் குழம்பியிருந்தான்; அவன் அழுதுகொண்டிருந்தான் என்பதுகூடத் தெரிந்தது; ஒளியிழந்த கரிய கண்களின் இமைகள் சிவந்து வீங்கியிருந்தன; பசி முகத்தின் பூப்படர்ந்த நீலமும் புலப்பட்டது.

குழந்தைகள் கூட்டத்தின் ஊடு பாய்ந்து, தெருவின் மத்தியில் வந்து புழுதியில் கால் புதைய நின்றான். அவனுடைய வடிவமைந்த வாயின் கரிய இதழ்கள் பயத்தினால் திறந்தன. மறுகணம் ஒரே பாய்ச்சலில் அவன் தெருவோர மேடைக்குச் சென்றுவிட்டான்.

"பிடி அவனை! அந்த பூதச் சிறுவனைப் பிடி!" என்று குழந்தைகளெல்லாம் உற்சாகத்தோடு கூவினர்.

அவன் ஓடி விடுவான் என்று நான் எதிர்பார்த்தேன்; ஆனால் அவனோ தன் பரந்த கண்களில் பயம் தெறிக்க, உதடுகள் நடுங்க, கூச்சலிடும் விளையாட்டுச் சிறுவர்களின் மத்தியிலே வந்து நின்று, திடீரென வளர்வது போல் உடம்பைக் குலுக்கிக் கொண்டு, கைகளைப் பின்னால் கோர்த்து, புதரின்மேல் சாய்ந்து நின்றான்.

உடனே அவன் மிகவும் அமைதியாக,தெளிவாக, அருமையாகக் கேட்டான்: "நான் உங்களுக்கு ஒரு வேடிக்கை செய்து காட்டட்டுமா?"

இந்த வேண்டுகோள் தன்னைத் தற்காத்துக் கொள்வதற்குத் தான் என்றுநான் முதலில் நினைத்தேன். குழந்தைகள் உற்சாகத்தோடு பின்வாங்கி நின்றனர்; முரட்டுத்தனமுள்ள பெரிய சிறுவர்கள் சமுசயத்தோடும் அவநம்பிக்கையோடும் அவனைக் கூர்ந்து பார்த்தனர். எங்கள் தெருப் பிள்ளைகள் மற்ற தெருப் பிள்ளைகளிடம் சுமுகமாகப் பழகுவதில்லை; தங்களுடைய பெருமையைப் பற்றி அவர்களுக்குப் பரிபூரணமான, திடமான நம்பிக்கை. எனவே மற்ற சிறுவர்களின் கெட்டிக்

காரத்தனத்தைப்பற்றித் தெரிந்து கொள்வது கிடையாது ; தெரிந்து கொள்ள விருப்பமும் கிடையாது.

சின்னஞ் சிறுவர்கள் இந்த விஷயத்தைச் சுலபமாகத் தீர்த்து வைத்தார்கள். "எங்கே? இப்படி வந்து காட்டு,பார்க்கலாம்!" என்றனர்.

அந்த அழகிய சின்னஞ் சிறு பையன் புதர்ப்புறமிருந்து விலகி வந்தான் ; தனது உடம்பைப் பின்புறமாக வளைத்து, தனது கை விரல்களால் தரையைத் தொட்டான் ; பிறகு தனது கால்களை மேலே வீசி நிறுத்தி, கை பலத்தில் நின்று கொண்டு சொன்னான் : "ம்....மேலே!"

உடனே தீச்சுடர் பட்டுக் கருகுவதுபோல் தனது கால்களையும் கைகளையும் லாகவமாகச் சுற்றிச் சுழற்றினான். அவனது உடைகளிலிருந்த துவாரங்கள் மூலம், அவனுடைய மெல்லிய உடம்பும் தோள்ப்பட்டையும், முழங்காலும், முழங்கையும் துருத்தி நிற்பதெல்லாம் தெரிந்தன. அவனது கழுத்தெலும்பு உருக்குபோலிருந்தது. ஒரு தடவைக்குமேல் அவன் அவற்றை வளைத்தால் அவை நொறுங்கி முறிந்து விடும்போல் தோன்றின. அவனுடைய வித்தை வேகத்தில் வியர்வை பொழிந்தது; சட்டை முழுவதும் வியர்வையால் நனைந்தது. ஒவ்வொரு வித்தைக்குப் பிறகும் அவன் எழுந்து அந்தச் சிறுவர்களைக் கூர்ந்து நோக்கி, உயிரற்ற புன்னகை யொன்றையும் புரிவான். ஒளியிழந்த அவனது கரிய கண்கள் மட்டும் வேதனையால் வாடுவதுபோல நடுங்கும் ; சுழிக்கும். குழந்தைகள் ஒரே கூச்சலிட்டு, அவனுக்கு உற்சாக மூட்டினர் ; பலர் அவனைப் போலவே செய்ய நினைத்து புழுதியிலே குட்டிக் கரணங்கள் போட்டு, உருண்டு விழுந்த வெற்றியிலும், சுகத்திலும், வேதனையிலும் கீச்சிட்டனர்.

அந்தப் பையன் வித்தைகளை முடித்துக்கொண்டு எழுந்தான் ; எழுந்து தனது மெலிந்த கரங்களை நீட்டிக்கொண்டு, அனுபவம் வாய்ந்த கலைஞனைப் போல் அமைதியாகப் பார்த்தவாறே கேட்டான் :

"இப்போ எனக்கு ஏதாவது கொடுங்கள்."

உடனேயே சிறுவர்களின் குதியாட்டம் திடீரென நின்றது; எல்லோரும் மௌனமாயிருந்தனர் ; யாரோ கேட்டனர் :

"என்னது, பணமா?"

"ஆம்" என்றான் பையன்.

"அடே. இது நல்லாத்தாண்டா இருக்கு!"

"பணத்துக் கின்னுத்தான் நாங்கூட இப்பிடிச் செய்து காட்டியிருப்பமே!......"

அவனுடைய வேண்டுகோள் சிறுவர்களுக்கு அவன்மீது அனுதாபமும் அருவருப்பும் நிறைந்த குணத்தை உண்டுபண்ணியது. சிறுவர்கள் ஒன்றும் சொல்லாமல், சிரித்துக்கொண்டும், வாய்க்குள் திட்டிக்கொண்டும் வயல் வெளிக்குச் சென்றனர். அவர்களில் ஒருவரிடத்திலேனும் பணம் கிடையாது; என்னிடமும் ஏழே ஏழு காபெக்குகள் தான் இருந்தன. நான் அவ்விரு காசுகளையும் அவனது புழுதி படிந்த கரத்தில் போட்டேன்; அவனும் அவற்றைத் தடவிப் பார்த்தவாறே,சிரித்துக்கொண்டு நன்றி கூறினான்.

அவன் அவ்விடம்விட்டு அகலும்போது, அவனுடைய சட்டையின் பின் புறத்தில் கரிய கறைகள் தென்பட்டன; அந்தச் சட்டை தோள்ப் பட்டையோடு ஒட்டிக் கிடந்ததையும் கண்டேன்.

"ஏய், நில்லு. இது என்ன?"

அவன் நின்றான், திரும்பினான்; என்னை நோக்கி புன்னகை பூத்தவாறே அமைதியுடன் சொன்னான்:

"முதுகுலே இருக்கே, அதுவா? ஈஸ்டர் விழாக் கொண்டாட்டத்தின்போது நடந்த தொங்கூஞ்சல் விளையாட்டில் நாங்கள் கீழே தவறி விழுந்துவிட்டோம். அப்பா இன்னும் படுக்கையிலேதான் கிடக்கிறார்; நான் குணமடைந்து விட்டேன்."

நான் அவனுடைய சட்டையைத் தூக்கினேன்—அவனுடைய முதுகுத் தோலில், இடது புஜத்திலிருந்து தொடை வரையிலும் கன்னங் கரிய பெரும் காய வடு தென்பட்டது. அதன் மேல் பாகம் காய்ந்து கறுத்து பொருக்காடிப் போனதும் தென்பட்டது. அவன் வித்தை காட்டியபோது, அந்தப் பொருக்குகள் மூட்டுவிட்டு வெடித்திருந்தன. வெடித்த இடங்களிலிருந்து ரத்தம் பொங்கி வழிந்து கறைப்படுத்தியிருந்தது.

"இப்போது எனக்கு வேதனை ஒன்றும் இல்லை. தினவுதான் எடுக்கிறது..." என்று சிரித்துக் கொண்டே சொன்னான்.

பிறகு வீரனைப்போன்ற தைரியத்துடன் பெரிய மனுஷனைப் போல் என்னைப் பார்த்துச் சொன்னான்:

"என்னவோ எனக்காகத்தான் நான் உழைப்பதாக நீங்கள் நினைக்கிறீர்கள் அல்லவா? மன்னிக்கவேண்டும் — உண்மையில் அப்படியல்ல. என் அப்பா—எங்கள் கையில் ஒரு பார்த்திங் கூடக்கிடையாது—என் அப்பா படுகாயமுற்றிருக்கிறார். ஆகவே, ஒருவராவது வேலைக்குப் போய்த்தான் ஆகவேண்டும். தெரிகிறதா? மேலும், நாங்கள் யூதர்கள்; எல்லோரும் எங்களை ஏளனம் செய்கிறார்கள்...ம்...வரட்டுமா?"

புன்னகையோடு உற்சாகம் ததும்ப அவன் பேசிவிட்டு, மயிர்ச்சுருள் நிறைந்த தலையை அசைத்துக்கொண்டு விரைவாக நடந்தான்; பிரேதப் பார்வையோடு வெறித்து நின்ற வீடுகளைக்கடந்துசென்றான்.

இந்தக்கதை முழுவதுமே தெளிவற்றும் சர்வ சாதாரணமாகவும் இருக்கிறது அல்லவா? ஆனால், என்னுடைய வாழ்க்கையின் கஷ்டகாலங்களில் அந்தச் சிறுவனின் தைரியத்தை அடிக்கடி எண்ணிப் பார்த்துக் கொள்ளுவேன்—ஆம், அனுதாபத்தோடுதான்.

✲

என்ன அர்த்தம்?

மயிலாப்பூரில் ஒரு சுவரில் கீழ்க்கண்டவாறு கரியினால் எழுதப்பட்டிருந்தது:

திராவிடநாடு அல்லது சுடுகாடு.

—ஆர். ஆர்.

படம் : பி. ரங்கநாதன், சென்னை

பேதையும் தையலும்

படம் : கே. முத்துராமலிங்கம், கரூர்

இன்பமுறின் ஆங்கே
என்னைக் கலந்திடவோ ?



படம் : ஆர். கிருஷ்ணன், கும்பகோணம்

துன்பமுறின் யாரும்
துணைவந் துதவிடவோ ?



படம் : வரதராஜுலு, மாயவரம்

சந்தித் தெருப் பெருக்கும்
சாத்திரம் கற்போம்

படம்; எம். வி. வி.

சேதுவை மேடுறுத்தி
வீதி சமைப்போம்



கவியரங்கம்

தமிழ் வருஷப் பிறப்பன்று சென்னை ரேடியோவில் மகாத்மா காந்தியைப் பாராட்டி, படத்தில் காண்பவர்கள் பாமாலை புனைந்து சூட்டினார்கள்.

இடமிருந்து வலம்: சுரபி, ராஜ சூடாமணி, பெ. தூரன், கொத்தமங்கலம் சுப்பு, தி. சு. அவினாசிலிங்கம் (கவியரங்கத் தலைவர்), கம்பதாசன், "நாணல்".

17-வது அகில இந்திய கவின்கலைக் கண்காட்சி (4-5- 48)

கண்காட்சியைத் திறந்துவைத்த ஸ்ரீமதி மவுண்ட்பேட்டனையும்,
யு. என். ஸென், பமேலா மவுண்பேட்டன் முதலியவர்களையும் படத்தில் காணலாம்.

எமிலைன் பாங்கர்ஸ்ட்

இருபது வருஷங்களுக்கு முன் காலமான, ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த ஆங்கிலப் பெண்மணியின் வாழ்க்கைக் குறிப்பு இது. எண்ணற்ற தன் குடும்பக் கவலைகளினூடே பெண்களின் உரிமைகளுக்காகப் போராடிய இந்தத் தியாகியின் வாழ்க்கை நம் பெண்களுக்கு ஒரு வழிகாட்டி. இது ஒரு பிரத்தியேகக் கட்டுரை.

எமிலைன் பாங்கர்ஸ்ட்

பார்பாரா கான்வே

மான்செஸ்டர் நகரம் கலாசார, சமூக முன்னேற்ற இயக்கங்களுக்குத் தாயகமாக விளங்கி வந்திருக்கிறது. அந்த நகரில் 1866-ம் ஆண்டு, கரிய கூந்தலும், நீல விழிகளும் உடைய ஒரு சிறுமி கையில்ஒரு பையுடன் நிதி வசூலித்துக் கொண்டிருந்தாள். அமெரிக்காவிலுள்ள அடிமைகளின் துயரத்தைத் துடைக்க அவள் நிதி சேர்த்தாள். நேரடியாக விஷயத்தை விளக்கிக் கூறியதால் நிதி வசூலிப்பதில் வெற்றி கண்டாள்.

ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு எமிலைன் கோல்டன் என்ற அதே பெண் பள்ளிக்கூடம் விட்டதும் தோளில் புத்தகப் பை தொங்க அவளுடைய தாயைப் பார்க்க மாதர் ஓட்டுரிமை இயக்கக் கூட்டத்துக்கு ஓடுவாள். மாதர் ஓட்டுரிமை இயக்கம் லிடியா பெக்கர் என்பவரால் தொடங்கி நடத்தப்பெற்று வந்தது. அந்தக் காலத்தில்தான் ஜான் ஸ்டுவர்ட் மில் என்ற ஆங்கிலப் பேராசிரியர் பெண்களுக்கும் பிரஜா உரிமை வேண்டும் என்று மனுச் செய்திருந்தார். மான்செஸ்டர் நகரிலிருந்த பெண்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றிரண்டு பேர் பெண்களுக்கும் ஓட்டுரிமை வேண்டும் என்று கிளர்ச்சி செய்தனர். அந்தக் காலத்தில் பாராளுமன்றத் தேர்தல்களில் ஆண் மகனுக்கு மட்டும்தான் ஓட்டுரிமை இருந்தது. இந்த உரிமை தங்களுக்கும் வேண்டும் என்று பெண்பாலரும் கருதத் தொடங்கிவிட்டனர். இந்த மாதிரியான சூழ்நிலையினாலும், நீக்ரோக்களின் அடிமைத்தனையைத் தகர்த்தெறியப் பாடுபட்ட ஹென்றி வார்டு பீச்சர் என்ற பெருந்தகையாரை வரவேற்கக் கூடிய கமிட்டியில் பெரும் பங்கு கொண்ட இவரது தந்தையார், தம்முடைய அபிப்பிராய சுதந்திரத்துக்குப் போராடிய இவரது பாட்டனார் முதலியோருடைய கூட்டுறவினாலும் இவர் புரட்சிகரமான காரியங்களில் ஈடுபட்டது ஒன்றும் ஆச்சரியமாகத் தோன்றாது.

பத்துக்குழந்தைகள் கொண்ட பெரிய குடும்பத்தில் பிறந்த

எமிலேன் தம் சகோதரியுடன் ஒரு சிறிய பள்ளிக்கூடத்தில் வாசித்தார். பிறகு வேறு ஒரு பள்ளியில் பயின்றார். இவருக்கு வயது பதினறு ஆன பொழுது, இவரது தாய் தந்தையர், அப்பொழுது இங்கிலாந்திலிருந்த பிற தாய் தந்தையர்களைக் காட்டிலும்பெண் கல்விபோன்ற முன்னேற்றங்களில் பெரிதும் கருத்து செலுத்தினர். இவரை பாரிஸிலுள்ள ஒரு பள்ளிக்கு அனுப்பினர்.

எமிலேன் கண்ணுங் கருத்துமாகக் கல்வி கற்றாள். அவளுக்கு மற்ற மாணவிகளுக்கு இல்லாத சலுகைகள் எல்லாம் கொடுத்தார்கள். சாதாரணமாகப் புத்தகப் படிப்போடு மட்டுமல்லாமல், விஷயங்களை நேரில் கண்டு தன் அறிவைப் பெருக்கிக் கொள்ளவும் வாய்ப்புக் கிடைத்தது. சரித்திர உண்மைகளை நேரில் கண்டவற்றைக் கொண்டே விளக்கிக் கொள்ள முடிந்ததால் சரித்திரத்தில் நல்ல தேர்ச்சி பெற்றார்.

அவரது 18-வது வயதில் மீண்டும் இங்கிலாந்துக்குவந்தார். அப்பொழுது அவருக்குப் பிரெஞ்சு பாஷையில் பேசும் திறமை இருந்தது. பிரெஞ்சுப் பழக்க வழக்கங்களும் படிந்திருந்தன. வீடு திரும்பியதும் அவருக்குக் கஷ்டங்கள் பல நேர்ந்தன. அவருடைய தாய் தந்தையர் பெண்களுக்கு ஓட்டுரிமை வேண்டும் என்று கிளர்ச்சி செய்தனரே ழிய பெண்கள் சம்பாதிப்பதை விரும்பவில்லை.

எமிலேனைக் கல்யாணம்செய்து கொள்ள பலர் முன்வந்தனர். ஆனல் அவர் தாம் காதலித்த ஒருவரைக் கல்யாணம் செய்து கொண்டார். அவர் எமிலேனைக் காட்டிலும் இருபது வயது மூத்தவர். டாக்டர் பாங்கர்ஸ்ட் முற்போக்குக் கருத்துக்களைக் கொண்டவர். அவர் இலவசக் கல்வி, பாராளுமன்ற அங்கத்தினருக்குச் சம்பளத் தேவை போன்ற சீர்திருத்தக் கொள்கைகளைக் கொண்ட மிதவாதக் கட்சியின் அபேட்சகராகப் பாராளுமன்றத் தேர்தலுக்கு நின்றார்.

எமிலேனுக்கு நான்கு குழந்தைகள் இருந்தும் பாதுகாப்புச் சங்கத்தில் அங்கத்தினராகி ஏழைகளுக்குப் பல வழிகளிலும் உதவி புரிந்து வந்தார். தொழிற்சாலைகளில் சிறு குழந்தைகள் தங்கள் நேரத்தைக் கழிக்காமல், சிற்றில்கள் கட்டி அதில் குழந்தைகள் தங்கள் பொழுதைக் கழிக்கும் படி செய்தது எமிலேன்தான். அவரது கணவருக்கு வருமானம் குறையவே அதை ஈடு செய்ய எமிலேன் கைத்தொழில் சாமான்கள் விற்க ஒரு கடை திறந்தாள். சமூகத் தொண்டில் ஈடுபட்டு உழைக்கும் அவருக்கு வீட்டு வேலையைக் கவனிக்க முடியாமல் போனது ஆச்சரியமில்லை அல்லவா? நல்ல வேளையாக அவருடைய வீட்டில், சிறுவயது முதற்கொண்டே பணிபுரிந்து வந்த ஒரு தாதி வீட்டைக் கவனித்து வந்தாள். 1895-ம் வருஷம் கிராமத்தில் வாழ்க்கை நடத்த விரும்பி கிராமத்தில் குடியேறினர். அவருடைய உடல் நலம் கிராமிய வாழ்க்கையினல் பெரிதும் அபிவிருத்தி யடைந்தது. ஆனல், மான்செஸ்டர்நகரில்வாழ வேண்டும் என்ற ஆசையினல் மீண்டும் தம் சொந்த ஊராகிய மான்செஸ்டருக்கே வந்துவிட்டார். அவருடைய கணவர் இறந்ததும், ஜனன மரண ரிஜிஸ்ட்ராராக வேலை ஒப்புக் கொண்டதால்,

அவருடைய குடும்பத்தைக் காப்பாற்ற முடிந்தது.

ஆனால், எமிலேன் வேறு பெரிய காரியத்தைச் சாதிக்கவன்றோ பிறந்தார்? நாளடைவில் மாதருக்கு ஓட்டுரிமை வேண்டும் என்று தொடங்கிய கிளர்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டார், அதுவும் காலப் போக்கோடு வலுப்பெற்றது. தங்களுடைய நோக்கம் நிறைவேற வேண்டும் என்று பல்வேறு வழிகளிலும் பாடுபட்ட பெண்களுக்குத் தலைமை வகித்தார் எமிலேன். பல நிறக் கொடிகள் பிடித்துக் கொண்டு ஊர்வலம் சென்றார்கள். 'பெண்களுக்கு ஓட்டுரிமை வேண்டும்' என்ற சுலோகம் வானைப் பிளந்தது.

முதல் உலக மகாயுத்தத்திற்கு முன்பே இந்த இயக்கம் பலம் பெற்றது. பெண்ணுரிமைக்குப் பாடுபட்ட பெண்ணரசிகள் யுத்தத்துக்குமுன் அரும் பாடுபட்டார்கள். இயக்கத்தில் ஈடுபட்ட பெண்கள் தங்களுடைய கொள்கை நிறைவேறுவதற்காகப் பல போராட்டங்களில் ஈடுபட்டு சிறைத் தண்டனையையும் ஏற்றார்கள். சிலர் தங்கள் உயிரையும் தியாகம் செய்தனர். அவர்களுடைய இயக்கம் பலனளிக்கும் தருணத்தில் முதல் உலக மகாயுத்தம் தொடங்கிவிட்டது. யுத்தகாலத்தில் இதே பெண்மணிகள் இங்கிலாந்து போரில் வெற்றிபெற உழைத்தனர். உலக மகாயுத்தம் முடிந்தவுடன் பெண்களுக்கும் ஓட்டுரிமை உண்டு என்று பாராளுமன்றம் ஒரு சட்டம் இயற்றியது.

எமிலேன் 1928-ம் ஆண்டு காலமானார். பாராளுமன்றத்தின் அருகில் நிற்கும் அவருடைய உருவச் சிலைக்கு இன்றைக்கும் அவருடைய தொண்டர்கள் புஷ்பாஞ்சலி செய்து தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றனர்.

*

கல்யாணமானவன்

ஒரு பிரசங்கி ஒருமுக்கியமான விஷயத்தைச் சொல்லிக் கொண்டிருந்தார் "தான் தவறு என்று உணர்ந்த பொழுது விட்டுக் கொடுப்பவன் அறிவாளி; ஆனால், தான் நியாயம் என்று தெரிந்த பிறகும் விட்டுக் கொடுப்பவன்......" என்று சொல்லிக்கொண் டிருக்கும்போதே "கல்யாணமானவன்" என்று கூட்டத்தி லிருந்து ஒரு குரல் கேட்டது!

டாக்டருக்குச் செய்த உதவி

ஒரு தாயார் தம் குடும்ப வைத்தியரிடம் 'பில்' தொகை அதிகம் என்று புகார் செய்துகொண் டிருந்தார்.

"உங்களுடைய குழந்தைக்கு அம்மை போட்டிருந்த பொழுது 11 முறை உங்கள் வீட்டுக்கு வந்திருக்கிறேன் என்பதை மறந்துவிடாதீர்கள்" என்றார் டாக்டர். "என் மகன் அவனுடைய பள்ளிக்கூடப் பையன்களுக்கெல்லாம் அதைப் பரப்பிவிட்டான் என்பதை நீங்கள் மறந்துவிடாதீர்கள்" என்று சட்டென்று பதிலளித்தாள்.

—காமெர்ஸ் மாகசின்

33883

இரண்டு விளக்குகள்

ல. ச.

திருநெல்வேலி நவபாரதி பிரசுராலயத்தார் வெளியிட்டுள்ள "இலக்கியச் சிந்தனைகள்" (ரூ. 3-0-0) "தமிழின் மறு மலர்ச்சி" (ரூ. 2-0-0) என்ற இரண்டு நூல்களைப்பற்றிய விமரிசனமே இக்கட்டுரை. 1947-ல் வெளிவந்த மிகச்சிறந்த நூல்களுள் இரண்டாகக்கருதப் படும் இந்த நூல்களைப்பற்றி ஒரு தமிழறிஞர் விரிவாக எழுதுகிறார்.

* * * * * * * * * *

திருவாளர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் இயற்றி வெளியிட்டுள்ள இலக்கியச் சிந்தனைகள், தமிழின் மறுமலர்ச்சி என்ற இரண்டு நூல்களைத்தான் இங்கு இரண்டு விளக்குகள் என்று குறிப்பிட்டது. இந்த இரண்டு நூல்களும் தமிழிலக்கிய உலகத்தில் கவிதையைப் பற்றியும், இலக்கியத்தைப் பற்றியும், அவைகளின் காலமுறைமைகளைப்பற்றியும் மிக விளக்கமாக விமரிசனம்பண்ணி இருள் மண்டிக் கிடக்கும் தமிழிலக்கியங்களை ஒரு முறைப்படுத்தியும், மேலும் மேலும ஆராய்ந்து அனுபவிக்க வழி செய்தும் கொடுப்பதால் தான் இந்த இரண்டு நூல்களையும் இரண்டு விளக்குகள் என்று குறிப்பிட முடிந்தது. ஏராளமான இலக்கியங்களையும், கவிதைகளையும் தமிழ்மொழி பெற்றிருக்கத்தான் செய்கிறது. ஆனால், இலக்கியத்தின், கவிதையின், உண்மையான லட்சணங்களையும், அவற்றின் தோற்றம், வளர்ச்சி, மரபு ஆகிய இவற்றின் சரித்திர உண்மைகளையும் எடுத்துக் கூறி விளக்கம் செய்கின்ற விமரிசன நூல்கள் தமிழில் இதுவரை வெளி வந்ததில்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு மிகச் சொற்பமாக இருக்கின்றன.

இந்தச் சமயத்தில் ஸ்ரீ வையாபுரிப் பிள்ளை அவர்கள் முப்பது முப்பத்தைந்து வருடங்களாகத் தமிழிலக்கியங்களின் ஆதியந்தங்களை எல்லாம் ஆராய்ந்து, அந்த ஆராய்ச்சியின் உண்மைகளைப் பல கட்டுரைகளாக வெளியிட்டுள்ளார்கள். அக் கட்டுரைகளின் தொகுப்பே "இலக்கியச் சிந்தனைகள்," "தமிழின் மறுமலர்ச்சி" என்னும் இரண்டு புத்தகங்களும்.

தமிழிலக்கியத்தைப் பற்றிக் கூறும் புத்தகங்களில் இந்த இரண்டு புத்தகங்களும் தலைசிறந்தவையாகவிளங்குகின்றன.

தமிழிலக்கியங்களின் உண்மைத் தன்மைகளையும், அவற்றின் உண்மையான காலக் கிரமங்களையும், கால கதியில் மாறி மாறி வந்துள்ள இலக்கியத்தின் பரிணாம வளர்ச்சிகளையும், அவற்றின் புறத்தோற்றங்களில் சிறிது சிறிதாக வேறுபட்டு வந்த மாறுபாடுகளையும் ஸ்ரீ பிள்ளையவர்கள் இப் புத்தகங்களில் மிக நுணுக்கமாகவும், நடு நிலைமையாகவும் ஆராய்ந்து முடிவுகட்டி இருக்கிறார்கள்.

தமிழ் மொழியிலுள்ள இலக்கியக் குவியலைப் பகுதி பகுதி

யாகப் பிரிவினை செய்து, அவை ஒவ்வொன்றையும் சரித்திர சம்பந்தமான வரலாற்று முறைமையோடும், விஞ்ஞான ரீதியோடும் ஆராய்ந்து முடிவு கட்டி இருக்கிறார்கள். மறுக்க முடியாத, உண்மையான தத்துவக் கருத்துக்களை எல்லாம் அவற்றோடு பொருத்திக் காட்டி இருக்கிறார்கள்.

அந்த இலக்கியங்கள் ஒன்றன் பின் ஒன்றாகவும், கூட்டங் கூட்டமாகவும் தோன்றி வந்த காரண காரியங்களையும், அவை தோன்றுவதற்கு அவ்வப் பொழுது தவிர்க்க முடியாதிருந்த அடிப்படை நிலைமைகளையும் இப் புத்தகங்களில் விளக்கி யிருக்கிறார்கள்.

இவ்விரண்டு புத்தகங்களிலு முள்ள ஒவ்வொரு பக்கமும் ஒவ்வொரு வரியும் மாறி மாறிப் படிக்கவேண்டியவை.

இவ்விரண்டு புத்தகங்களில் முதலாவதாக இலக்கியச் சிந்தனையை எடுத்துக்கொள்ளுவோம். இதில் மொத்தம் பதினேழு கட்டுரைகள் இருக்கின்றன.

இலக்கியத்தின் பொதுவான அடிப்படைத் தருமங்களையும், அந்தரங்கமான உண்மை ரகசியங்களையும் முதலில் உள்ள மூன்று கட்டுரைகளும் தெளிவு படுத்துகின்றன.

இலக்கியத்தின் பொதுவான முழு நியதியைக் கீழ்க்கண்டவாறு ஸ்ரீ பிள்ளையவர்கள் விளக்கி உள்ளார்கள்:

"......இலக்கியம் உண்மையும் அழகும் நிரம்பிய சொற்களால் வாழ்க்கையை புலப்படுத்துகிறது. அது மனிதனது ஆன்மாவையும், அவன் கருத்துக்கள், உணர்ச்சிகள், தலை நோக்கங்கள் முதலியவற்றையும் சொல் வடிவிலே காட்டும் குறிப்பாகும். ஆன்மாவின் உண்மைச் சரிதமாக உள்ளது அதுவே......"

கலை அழகு, குறிப்பாற்றல், நிலை பேறுடைமை என்கின்ற இந்த மூன்று உயிர்த் தாதுக்களுமே இலக்கியத்தின் மர்மமான ஜீவ நாடிகள் என்றும், தன்னால் சிருஷ்டிக்கப்பட்ட இலக்கியத்தின் புறச் சூழ்நிலைகளைத் துளைத்துக்கொண்டு தன்னுடைய இலக்கியத்தில் தன்னை அறியாமல் வந்து விழுகின்ற ஆசிரியனுடைய ஆன்ம குணமே, அவனுடைய தனிப் பண்பே, இலக்கிய நடை என்று சொல்லப்படும் என்றும் குறிப்பிட்டிருப்பது படித்து இன்புறத்தக்கது. இதைப் போலவே "சங்கத் தமிழ் மூன்றும் தா" என்ற பழைய அடியை வைத்துக்கொண்டு தமிழ் நாட்டில் பழைய காலத்திலேயே நாடக நூல்கள் இருந்தன என்று யாதொரு சான்று மில்லாமல் ஓங்கி அறைந்துகொண்டிருந்தவர்களுக்கு, நாடகம் என்ற சொல் பழைய இலக்கியங்களில் கூத்து என்று சொல்லப்படும் நடனத்தையே குறித்து வந்துள்ளது என்று ஆராய்ந்து விளக்கி உள்ளார்கள்.

கவிதைகள் எல்லாம் ஆதியில் ஒத்திசை மூலமாகச் சமுதாயத்தில் தோன்றி வளர்ச்சி யடைந்துள்ளன என்றும், அக் கவிதைகள் எல்லாம் தன் பொருட்டுக் கவிதை, பிறர் பொருட்டுக் கவிதை, உளப்பாட்டுக் கவிதை என்று மூன்று வகைப்படும்

என்றும், இக் கவிதைகளும், இலக்கியங்களும் வாசகனுடைய மனத்தில் முதலில் தன் மறதியை உண்டாக்கிவிடுவதே, அவனை வசப்படுத்தி இன்பமடையச் செய்யும் ரகசிய சக்தி என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். இவை களை அடுத்து வருகின்ற மூன்று கட்டுரைகளிலும், தமிழ்மொழியி லுள்ள நூல்களை எல்லாம் பரி சிலனை செய்து, தமிழ்க் கவிதை யின் ஆதி உற்பத்தியே கி. பி. முதல் நூற்றுண்டில்தான் என் றும், அவற்றின் முன்னும் சில பல செய்யுள்கள் தோன்றி இருக்கலாம், எப்படி இருந் தாலும் தமிழில் கவிதைப் பிறப்பே கி.மு. 5 அல்லது 6-ம் நூற்றுண்டிற்குப் பின்புதான் என்றும் முடிவுகட்டி இருக் கிருர்கள்.

இந்தக் கால முடிவுகளை எல் லோரும் நடுநிலைமையோடு பல தடவைகள்படித்தறியவேண்டும். இப்படி எல்லாம் உண்மையான ஆராய்ச்சிகள் இதற்கு முன்பு வாராத காரணத்தால்தான், தமி ழின் பழமையை அளந்தறியவே முடியாதென்றும் இருபதினுயிரம், முப்பதினுயிரம் வருடங்களுக்கு முன்பே இங்கு கவிதைகள் தோன்றிவிட்டன என்றும் பல புரளிகளைப் பலபேரும் கட்டிவிட ஏதுவாக இருந்தது. அந்தப் புரளிகளெல்லாம் இந்த ஆராய்ச் சியின் மூலமாகத் தவிடு பொடி யாகிவிடும். இப்படி எல்லாம் மூட நம்பிக்கைகளையும், பழ மைப் பித்துகளையும் ஸ்ரீ பிள்ளை அவர்கள் உடைத்தெறிவது கண்டு மறைமுகமாகப் பலபேர் முணுமுணுக்கலாம். ஆனல் இந்த முடிவுகள் தப்பென்று கூறி ஒருவரேனும் நாலுபேரறிய அம்பலத்தில் வந்து தக்க காரணங்களுடன் வாதாடுவ தாகத் தெரியவில்லை.

இது தவிர இன்னும் பதின் மூன்று கட்டுரைகள் இந்நூலில் உள்ளன. அவை ஒவ்வொன்றும் நமக்கும் இலக்கியத்திற்கும் உள்ள தொடர்புகளை எல்லாம் விளக்கி எந்தெந்தக் காலத்தில் எந்தெந்த விதமான இலக்கியங் கள் உண்டாயின என்ற உண்மைகளை வெளியிடுகின்றன.

இனி இரண்டாவது புத்தக மாகிய தமிழின் மறுமலர்ச்சி யைப் பார்ப்போம்; இதில் மொத் தம் பதின்மூன்று கட்டுரைகள் உள்ளன. ஒவ்வொரு கட்டுரை யும் சில நூற்றுண்டுகளாக இருந்து வருகின்ற தனித் தமிழ் வாதம், வடமொழி வாதம் என் கிற இரண்டு வாதங்களைக் களைய வேண்டும் என்று முழக்குகிறது; பாரதியின் பெயரால் அவன்மீது ஆணை இட்டு முழக்குகிறது ; தமி ழில் எள்ளளவேனும் பயிற்சி இல்லாமல் மடப்பள்ளித் தமிழால் எழுதி பாஷையை மிக மட்ட மான முறையில் மலினப் படுத்தி வரும் கும்பல்களையும் கண்டிக் கிறது.

ஸ்ரீ பிள்ளையவர்கள் சில உதார ணங்கள் கொடுத்து இதுவும் தமிழா, என்று கேட்டிருக்கிருர் கள்.

"வீரன் வெளியே சென்றி ருந்த வேளை பார்த்து, பர்ண சாலையிற் புகுந்து பதறி நின்ற சீதையைப் பற்றி எடுத்துப் பறக்கலுற்ருன்" என்று ஒருவர் எழுதியுள்ளாராம்.

"மஹா ராஜாவே நின்னுடைய ஆஜ்ஞாலங்கன பயத்தால் அவர் களைக் கொண்டு வனம்புக்கு, கிரிதுர்க்கா த்வாரத்துள் உறை

யும் முகிவரன் என நிர்ப்பய விவித்த விஹாரியாகி நிர்மல மாகிய லேச்யையுடைய தொரு பல மஹா, கேஸரி சங்கிஹித மாயினவாறே அதன் முன் அவரை உய்த்தேன்."

இப்படியும் ஒருவர் எழுதி யுள்ளாராம். இந்த ஆபத்துககளை எல்லாம் நீக்க வேண்டியதன் அவசியத்தை இப் புத்தகம் வற் புறுத்துகிறது. தமிழ் எழுத்துக் களின் வளர்ச்சி, தமிழில் சொல் வளர்ச்சி, தமிழில் வசன நடை, தமிழ்ப் பாட்டும் இசையும் முதலிய கட்டுரைகளை ஒவ்வொரு வரும் படித்தனுபவிக்க வேண் டும்.

ஸ்ரீ பிள்ளை அவர்களுடைய தமிழ் நடை படிக்கப் படிக்க இன்பக் களிப்பூட்டுகின்றது; சிறு குழந்தைகளிலிருந்து பெரிய வர்கள் வரைக்கும் உள்ள எல் லோருமே படித்துப் படித்து ஆனந்திக்கலாம்; அவ்வளவு எளிமையாகவும், தெளிவாகவும் ஒவ்வொரு கட்டுரையும், ஒவ் வொரு வரியும் அமைந்திருக்கின் றன.

இவ்விரண்டு புத்தகங்களையும் தனித்தமிழ் படிக்கும் மாணவர் களுக்கும், ஆங்கிலக் கலாசாலை களில் கல்வி பயலும் மாணவர் களுக்கும் பாடமாக வைக்கலா மென்று யோசனை கூறுகிறோம்.

✱

மீண்ட வாலிபம்

கிளாஸ்டர் ஷயர் என்னுமிடத்தில் ஒரு கிழவி தன்னுடைய நூறுவது பிறந்த தினத்தைக் கொண்டாடினாள். அந்தச் சமயத்தில் அங்கே அமெரிக்க சோல்ஜர்கள் முகாம் போட்டிருந்தார்கள். அவர்கள் நடந்து கொண்ட மாதிரியினால், கிழவிக்கு அசாதாரணமான கர்வம் உண்டாகி விட்டது. ஆகவே, தன்னைப் பார்ப்பதற்கு தடவைக்கு ஆறு பென்ஸ் வீதம் வசூல் செய்தாளாம்.

—ரேமாண்டு புஷ்

ஒரு சொல் வாசகன்!

பிலடெல்பியா காங்கிரஸ்காரர் ஒருவர் யுத்தத்துக்குச் சில வருஷங் களுக்கு முன்பு அயர்லாந்துக்குப் போயிருந்தார். அங்கே கில்லர்னே ஏரிக் கரையில் நின்ற ஒரு ஓடக்காரக் கிழவனிடம், "உங்களுக்கு என்ன வயது இருக்கும்?" என்று கேட்டார்.

"75 ஆகிறது" என்றான் கிழவன்.

மேற்படி பிலடெல்பியாக்காரர் சமீபத்தில் ஒருதடவை அயர்லாந்துக் துக்குப் போயிருந்தார். அதே கிழவனையும் சந்தித்தார். மறுபடியும் அவ னிடம், "உங்கள் வயது என்ன?" என்று கேட்டார்

உடனே கிழவன் "75" என்றான்!

"என்ன? நான் எட்டு வருஷங்களுக்கு முன்னால் உங்களிடம் கேட்ட போதும் '75' என்று சொன்னீர்கள்! இப்போதும் அப்படியே சொல் கிறீர்களே!"

"என்னை என்ன 'அல்கா'ப் பயல் என்று நினைத்துக்கொண்டீரா, ஒவ்வொரு நாளைக்கும் ஒவ்வொரு தினுசாகப் பேசுவதற்கு?" என்று கேட்டானும் கிழவன்.

—வில்லியம் ஏ மக்காரி

பத்திரிகை-ரேடியோ

விஞ்ஞானி

ரேடியோ, செய்திகளை ஒலி பரப்பி வந்தது. இனி ரேடியோ, ஒலி பரப்பும் செய்திகளை அச்சடித்துப் பத்திரிகையாக நமக்குக் கொடுப்பதற்குரிய உபாயத்தைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்! இந்த அதிசயம் எப்படி நடக்கிறது?

ரேடியோவின் உதவியால் வீட்டுக்கு வீடு தினசரிப் பத்திரிகைகள் வழங்கலாம் என்று கானடா நாட்டுப் பத்திரிகைக்காரர்கள் சங்கம் தெரிவிக்கிறது.

தினமும் காலையில் படுக்கையை விட்டு எழுந்தவுடன் காப்பியும் பத்திரிகையும் இல்லாவிட்டால் நமக்குப் பொழுதே போகாது. காலையில் பத்திரிகை படிக்காவிட்டால் அந்த நாள் முழுவதும் ஏதோ அத்தியாவசியமான ஒன்றைச் செய்யாததுபோன்ற ஒரு குறை தோன்றும். காலையில் 'பேப்பர் பையன்' வரத் தவறினால், சிரமத்தைப் பார்க்காமல் அவனைத் தேடிக்கொண்டு கடைவீதிக்கே சென்றுவிடுவோம். ரேடியோ மூலம் தினசரித்தாள் வீட்டுக்கு வருவதென்றால், இந்தச் சில்லறைத் தொந்தரவுகளெல்லாம் இருக்காது. இல்லையா? காலையில் படுக்கைக்குப் பக்கத்தில் தினசரித்தாள் நமக்காகக் காத்திருக்கும்!

இவ்வளவு நாட்களாகப் புகைப் படம், அச்சடித்த விஷயங்கள் முதலியவற்றை ரேடியோ மூலம் அனுப்பி வந்தார்கள். இம்மாதிரி புகைப் படம் அனுப்பத் தேவையான ரேடியோ நிலையம் நிர்மாணிக்க அதிகச் செலவு ஆயிற்று. ஆனால், இன்று அம்மாதிரி நிலையங்களைக் குறைந்த செலவிலேயே கட்டலாம் என்றும், ஒலி பரப்பப் பெறும் விஷயங்களை அப்படியே அச்சடிக்கும் பத்திரிகை—ரேடியோப் பெட்டியையும் குறைந்த செலவில் தயாரிக்கலாம் என்றும் கண்டுபிடித்துள்ளார்கள்.

ஒலி பரப்பப்பட வேண்டிய விஷயங்களை முதலில் அச்சடித்து வைத்துக் கொள்ளுகிறார்கள். அந்த அச்சடித்த கடுதாசியை ஒலி பரப்பும் கருவியிலுள்ள சுழலும் உருளை ஒன்றில் பொருத்துகிறார்கள். உருளையோடு அச்சுப் பிரதியும் சுழல்கிறது. அந்த இயந்திரத்திலுள்ள 'மின்சாரக் கண்'ணிலிருந்து வெளிவருகிற ஒளிக்கதிர் அந்த எழுத்துக்களில் படுகிறது. எழுத்துக்களின் வரி வடிவத்தை ஒலி வடிவமாக்கும் சக்தி அந்த ஒளிக்கதிருக்கு உண்டு. ஒலி வடிவமாக்கப்பட்ட எழுத்துக்கள், சாதாரணமாக வானொலி நிலையத்தில் 'மைக்ரோபோன்' முன் பாடப்பெறுகிற பாட்டைப்போல வான வெளியில் பிரயாணம் செய்கின்றன.

“இதோ இவர் தான் ஆனந்த் மிஸ்ரா...

இப்போதுதான் ஆபீசிலிருந்து வீடு திரும்புகிறார். நல்ல டீ ஒரு கோப்பை சாப்பிட விழைகிறார். ஆனால் பாவம், அது கிடைக்காது. ஏனெனில் கெட்டிலில் காய்ந்து கொண்டிருக்கும் வெந்நீர் நாள் பூராவும் காய்ந்து கொண்டேயிருந்தது. நல்ல தேயிலை பானத்துக்கு புதிதாகக்கொதித்த நீரே தேவை.

ஐந்து சுலபமான விதிகள்!

1. எப்போதும் புதிதாக எடுத்த தண்ணீரை புதிதாக கொதிக்கவைத்தே உபயோகிக்கவும். 2. பானையை உபயோகிக்குமுன்பாக கொஞ்சம் சூடாக்கவும். 3. நல்ல தேயிலையை நபர் ஒன்றுக்கு ஒரு தேக்கரண்டி வீதமும் பானைக்கு ஒரு கரண்டியுமாகப் போடவும். 4. கொதி நீரில் தேயிலை சுமார் 3 முதல் 5 நிமிஷங்களுக்கு ஊறட்டும். 5. கோப்பையில் கஷாயம் எடுத்துக்கொண்டு பால் சேர்த்துக் கொள்க. பானையில் அல்ல.

“தேயிலைப்பானம் - சில யோசனைகள்” எனும் இலவச புத்தகம் ஆங்கிலம், வங்காளி, ஹிந்தி உருது, தமிழ்பாஷைகளில் கிடைக்கும். விண்ணப்பிக்குமிடம்: கமிஷனர், இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு, 101, நேதாஜி சுபாஷ் ரோட், த. பெ. நெ. 2172, கல்கத்தா.

கோடிக்கணக்கான மக்கள் சோர்வை யகற்றி புத்துணர்ச்சிபெற தேயிலை பானம் அருந்துகின்றனர். ஆனால் தேயிலை பானம் அருந்தும் பலருக்கு நல்ல டீ எப்படி செய்வதென்பது தெரியாதது வருந்தத்தக்கது. நல்ல டீ தயாரிக்க செலவு ஏதும் அதிகமில்லை. ஐந்து சுலபமான முறைகளைக் கடைப்பிடிப்பதே போதுமானது. உங்கள் பணத்திற்கு முழு மதிப்பு பெறவும் உங்கள் டீ நறுமணம் மிகுந்ததாயிருக்கவும் இம்முறைகளை உங்கள் மனதில் பதியவைத்து வீட்டிலும் சரிவர அனுசரிப்பது நலம்.

நன்கு தயாரித்த

யைப்போன்றது வேறெதுவுமல்லை.

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

லிப்டன்ஸ்

என்றால்

முதல்தரமான டீ

LTX-151-TM

பத்திரிகை—ரேடியோ, சுருதி பேதம்கொண்ட ஒலிவடி வெழுத்துக்களை மீண்டும் வரிவடிவம் பெறும்படி செய்கிறது. குறிப்பிட்ட ஓர் ஒலி அலையில் பரப்பப்படுகிற சுருதிபேதங் கொண்ட ஒலிக் குறிகளை ரேடியோ கிரகித்து மின்சார சக்தி வாய்ந்தவைகளாகச் செய்துவிடுகிறது. இவை மின்சாரத்தால் எளிதில் பாதிக்கப்படுகிற தாள்களில் தாக்குகின்றன. இந்தத் தாக்குதல்கள் அந்தக் காகிதத்தில் மெல்லிய எழுத்துக்களை எழுதுகின்றன.

இம்மாதிரியான பத்திரிகைப் பிரதி எடுக்கும் ரேடியோவைச் சாதாரண ரேடியோவிலேயே பொருத்தி வைத்துக்கொள்ளலாம். இதுவரையில் பிரதியெடுக்கும் ரேடியோவின்மூலம் எடுக்கும் பிரதியின் நீளமும், அகலமும் முறையே 12, 9 அங்குலங்கள் தான். தினசரிப் பத்திரிகைகள் அளவுக்குக்கூட இந்தப் பிரதிகளின் அளவைப் பெரிதாக்கலாம் என்று விஞ்ஞானிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். இந்த ரேடியோ பெட்டிகள் ஒரு நிமிஷத்துக்கு 500 வார்த்தைகள் வீதம் அச்சடிக்கின்றன.

பத்திரிகை—ரேடியோ பிரதிகளில் சாதாரண தினசரிகளில் உள்ள அச்சுச் சுத்தமும் அழகும் எதிர்பார்க்க முடியாது. இந்த முறையில் எழுத்துக்களைக் காட்டிலும், படங்கள் நன்றாக விழுகின்றன. இந்த முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்களின் இடையருத உழைப்பினால், இந்தத் துறையில் மேன்மேலும் விருத்தியடைந்து வெற்றி பெறுவார்கள் என்பது நிச்சயம்.

பெரும்படியான அளவில் பத்திரிகை—ரேடியோவை உற்பத்தி செய்தால், சாதாரண ரேடியோவின் விலைக்கே விற்கலாம். நாட்கள் செல்லச் செல்ல உற்பத்தியாளர்களிடையே போட்டி ஏற்பட்டு பத்திரிகை ரேடியோவின் விலையும் குறைந்துவிடும்.

இந்த ரேடியோப் பத்திரிகை முறையை அமெரிக்கப் பத்திரிகைகள் சில கையாளுகின்றன. 'சிகாகோ டிரிபியூன்' 'எர்பிரஸ்' முதலியன குறிப்பிடத்தக்கவை. பத்திரிகை ரேடியோவைக் கண்டுபிடித்த ஜான் வி. எல். ஹோகன், இன்னும் சில வருஷங்களில் நியூயார்க்கைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் மட்டுமே இந்த ரேடியோக்களின் எண்ணிக்கை ஐந்து லட்சத்துக்கு மேற்படும் என்று கருதுகிறார்.

பத்திரிகை ரேடியோ முறையில் ஒரே ஒரு தொல்லைதான். ஓர் ஒலிபரப்பு நிலையத்தி லிருந்து 30 மைல்களுக்கு அப்பால் உள்ள பத்திரிகை ரேடியோ சரியாக வேலை செய்யாது. வருங்காலத்தில் இக்குறையையும் நிவர்த்தி செய்து விடுவார்கள் என்றே நம்புகிறோம்.

★

காந்திஜிக்கு ஓட்டு!

சமீபத்தில் திருவாங்கூர் அரசியல் நிர்ணயசபைத் தேர்தல் நடைபெற்றது அல்லவா? அப்போது ஒரு அறுபது வயதுக்கிழவி ஓட்டுப் போடும் இடத்திற்குப்போய் ஓட்டளித்துவிட்டுத் திரும்பினாள். அந்தக் கிழவி படிக்காதவள். ஆகவே, அங்கிருந்த போலீஸ் ஆபீஸர், "நீ யாருக்கு ஓட்டுப்போட்டாய்?" என்று கிழவியைப்பார்த்துக் கேட்டார். அதற்குக் கிழவி, "அந்தப் பெரியவர் காந்திக்குத்தான்" என்று சொன்னாள்.

—குளோப் நிருபர்

ஒரு மொழியைப் பரம்பரை பரம்பரையாகச் சாகாமல் காப்பாற்றி வருகிறவர்கள் சின்னஞ் சிறு குழந்தைகள்தான் என்கிறார் கட்டுரையாளர். இந்தப் புதிய ஆராய்ச்சியைக் கட்டுரையில் விவரிக்கிறார்.

தாய் மொழிக்கொடி

சி. ந. வைத்தீஸ்வரன்

O

மக்களில் ஒருவர் கருத்தை மற்றொருவருக்குத் தெரிவித்துக் கொள்ளும் முயற்சியில் மொழி தோனறலாயிற்று. மொழி ஆராய்ச்சி வல்ல அறிஞர் உலகத்தில் தற்போது வழங்கி வரும் மொழிகள் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது என்று எடுத்துக்காட்டுகின்றனர். இவற்றில் சிலவே பேசவும் எழுதவும் படுவன. பெரும்பாலான மொழிகள் பேசப்படுவன. இந்த மொழிகள் தொன்று தொட்டு உச்சரிப்புகளில் அதிகம் மாறுதல் அடையாமல் தலைமுறை தலைமுறையாக வந்துகொண்டே இருக்கின்றன. நம் தமிழ் மொழியை ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்து மக்கள் எழுதியும் பேசியும் வந்திருக்கின்றனர். சமஸ்கிருதமும் தமிழைப் போல் பண்டை மொழியாயினும் தற்போது பல மக்களால் அது சாதாரண வழக்கில் பேசப்படாது ஒருவாறு மறைந்து எழுத்தளவில் மட்டும் நின்றுவிட்டது. சமஸ்கிருதம் மட்டும் வரி வடிவத்துடன் நின்றுகொண்டு ஏதோ சில பண்டிதர் பேச்சில் மட்டும் காணப்படுவானேன்? தமிழ் மொழி மட்டும் பல்லாயிரம் ஆண்டுகளாக ஒலி வடிவத்திலும், வரி வடிவத்திலும் குறைவுபடாமல் மக்கள் வழக்கில் நிலைத்திருப்பானேன்?

மொழியின் வரிவடிவங்கள் காலத்துக்குத் தகுந்த மாதிரியாகவும், எழுது கருவி, எழுதப்படும் கருவி முதலியவைகளுக்குத் தக்கபடியும் மாறிக்கொண்டே வந்திருக்கின்றன. எனினும் ஒலி வடிவம் மட்டும் மாறுமல் தலைமுறை தலைமுறையாக இருந்து வந்திருக்கிறது. இவ்வாறு நம் மொழியை நமக்கு அழியாவண்ணம் காப்பாற்றியவர் யார்?

யாரா? அவர்கள் சிறு குழந்தைகள். சிறு குழந்தைகள் நம் சமூகத்தில் இல்லையேல் நம் மொழி பூண்டோடு அற்றுப் போய்விடும் என்பதற்கு ஐயமில்லை. இது எங்ஙனம் என்று சற்று ஆராய்வோம்.

நம்மில் எத்தனையோ பேர் எத்தனையோ முறை ஹிந்தி போன்ற பிற மொழிகளைப் பேசக் கற்றுக்கொள்ள முயற்சி செய்ததுண்டு. சிலர் மட்டும் முன்னேறியிருக்கின்றனர். அநேகர் சிரமத்துடன் ஏதோ சிறிதளவு கற்றுக்கொண்ட போதிலும் அதுவும் பல நாள் நீடித்திராமல் மறைந்துவிட்டது. அவ்வாறு மறக்காமல் இருக்க வேண்டிய சிரமம் என்ன என்பதும் நாம் நன்கு அறிவோம். ஆனல் சிறு குழந்தைகள் பிற பாஷையை எவ்வளவு எளிதில் கற்றுக்

கொள்ளுகின்றனர்! எவ்வளவு ஸ்பஷ்டமாக உச்சரிக்கின்றனர்! பெரியவர்களைவிட அறிவிலும், அனுபவத்திலும் குறைந்த குழந்தைகள் மட்டும் பிற பாஷையை நன்கு கற்பானேன்?

குழந்தை உள்ளத்தை நன்கு ஆராய்ந்த நிபுணர்கள் குழந்தைக்கு மொழி பழகும் உணர்ச்சிப் பருவம் ஒன்று உண்டு என்றும், அப் பருவம் சுமார் மூன்று மாதத்திலிருந்து ஐந்தாண்டு வரை நன்கு நீடிக்கிறதென்றும் எடுத்துக்காட்டுகின்றனர். இந்தப் பருவத்தில் குழந்தையின் சூழ்நிலையில் எந்தெந்த மொழிகள் பேசப்படுகின்றனவோ அவைகளைச் சிரமமில்லாமல் குழந்தை நன்கு பேசப் பழகும் என்றும் கூறுகின்றார்கள். இப் பருவம் தாண்டிவிட்டால் பிறகு பிற பாஷை கற்பது சிரமமே.

இலையுண்ணும் புழுக்களுக்குப் பிறந்தவுடன் சூரிய வெளிச்சத்தைக் கண்டால் ஒரு தனி உணர்ச்சி உண்டு. நன்றாக வளர்ந்த பிறகு இவ்வுணர்ச்சி அடியோடு மறைந்துவிடுகிறது. இதன் காரணம் என்ன? சிறு புழுக்கள் சூரிய கிரணங்களால் கவரப் படும்பொழுது கிரணங்களின் திக்கையே நோக்கி ஊர்ந்துகொண்டு போகும். அப்பொழுது செடியின் உச்சிக் கிளைக்குப் போகும். உச்சிக் கிளையில் தளிர் இருக்குமேயல்லாது முதிர்ந்த இலை இருக்காது. அந்தத் தளிரையே சிறு புழு தின்னும். சிறு புழு தளிரையே தின்ன வேண்டும் என்று இயற்கை அன்னை புழுவுக்குள் இந்தச் சூரிய கிரண உணர்ச்சியை மறைமுகமாகப் பிறப்பித்திருக்கிறாள். புழு வளர்ந்த பிறகு இந்த உணர்ச்சி அவசியமில்லை. ஏனெனில் எந்த இலையை வேண்டுமானாலும் தின்னும் சக்தி கிடைத்துவிடுகிறது. ஓயாது தின்ன வேண்டும் என்ற உணர்ச்சியுடைய புழு சில தினங்களில் இலையை அடியோடு வெறுத்துப் பட்டினி கிடந்து தூங்கி சில நாட்களில் வண்ணாத்திப் பூச்சியாக உருமாறி வெளியேறுகிறது.

குழந்தைகளிலும் இதேபோல் பல உணர்ச்சிப் பருவங்கள் தோன்றி மறைகின்றன. பிறந்த குழந்தை தாய் மொழியையே கற்றுக்கொள்ளும் என்பது ஒருவாறு உண்மை எனினும் தமிழ்த் தாயின் குழந்தை நாடு கடத்தப் பட்டு துருக்க ராஜ்யத்தில் உள்ளவர்களால் வளர்க்கப்பட்டு வந்தால் அக் குழந்தை வெகு அழகான துருக்கு மொழி பேசுமே ஒழிய தூய தமிழ் அறியாது. குழந்தை பிறக்கும் பொழுது சூழ்நிலையில் உள்ள மொழியைக் கிரஹித்துக்கொள்ளக் கூடிய சக்தி ஒன்றுதான் இருக்கிறது.

எழுத்துக்களின் பிறப்பைப்பற்றிக் கூறுகிற ஆசிரியர்கள், பேச வேண்டும் என்கிற முயற்சியால் காற்றை எழுப்பி மார்பு, கழுத்து, தலை, மூக்கு ஆகிய நான்கினிடத்தும் பொருந்தி பிறகு உதடு, நாக்கு, பல், வாய் ஆகிய நான்கின் முயற்சி வேறுபாட்டினால் வெவ்வேறு ஓசைகள் பிறக்கின்றன என்கின்றனர். இந்த நூல் முறையெல்லாம் தெரியாத ஈராண்டுக் குழந்தை எவ்வளவு நேர்த்தியாகப் பேசுகிறான். இதற்குக் காரணம் இந்த மொழி உணர்ச்சியேதான்.

தமிழ் மக்கள் அல்லாதார் 'ழ' கரத்தை உச்சரிப்பதில் எவ்வளவு

சிரமப்படுகின்றனர். அவ்வாறே சில உருது ஒலிகளைத் தமிழ் மக்கள் சிரமப்பட்டு உச்சரிப்பதையும் அறிவோம். நாக்கு, உதடு முதலியவைகளைச் சுழித்துச் சுழித்து வேண்டியபடி பயன்படுத்தி ஒலி பிறப்பிக்கக் குழந்தை எவ்வாறு கற்றுக் கொள்ளுகிறது? இதற்கு ஆசிரியன் யார்? தானேதான் ஆசிரியன்.

முதல் மூன்று மாதங்களில் குழந்தையின் கன்னம், உதடு, நாக்கு முதலியன நன்ருக உரம் பெறுகின்றன. எங்ஙனம்? தாய்ப்பால் குடிக்கும் குழந்தையின் கன்னம், உதடு, நாக்கு முதலியவற்றின் அசைவை உணர்ந்த தாய்மார் இதை நன்கு அறிவார்கள். மறைமுகமாக இவை மொழிப்பயிற்சிக்கு இவ்வாறு தயாராகிவருகின்றன. தாய்மார் பேசும் பொழுதும் கொஞ்சும் பொழுதும் குழந்தை பெரியவர்களின் உதட்டசைவுகளைக் கூர்ந்து கவனித்துவருகிறது. நிசப்தமாக உள்ளுக்குள் உச்சரித்துப் பார்த்துக்கொள்ளுகிறது. தயாரானவுடன் ஆரும் மாதம் "மா மா" "தா தா" என்றெல்லாம் பேத்த ஆரம்பிக்கிறது. பத்தாம் மாதத்தில் மாடு என்பதற்கு "மா" என்று ஓரெழுத்துப் பேரையே உச்சரிக்கும். ஒரு வயதில் இரு பதங்களுள்ள வார்த்தைகளைப் பேசும். ஒன்றரை ஆண்டில் சுமார் இரு நூறுவார்த்தைகளைத்தெளிவாகப் பேசுகின்றது. இவற்றில் பெரும்பாலும் பெயர்ச் சொற்களே. ஈராண்டில் மூந்நூறு வார்த்தைகளுக்குமேல்பேசும், இரண்டரை ஆண்டில் பிழையில்லாமல் பேசும் பண்டிதன் ஆகி விடுகிருன் என்றே சொல்லலாம். இந்த வயதில் புதிய இடத்துக்குப் போய் அவ்வூர் பாஷையைத் தன்னைச் சுற்றிலும் உள்ளவர்கள் பேசக் கேட்ட பதினைந்து நாட்களில் தானும் பேசத்தெரிந்து கொள்ளும் என்று சில அறிஞர் எடுத்துக்காட்டுகின்றனர். ஐந்து ஆண்டுவரையும் இந்த மொழியுணர்ச்சி உயர்நிலையில் இருக்கிறது. இது வயதாக ஆகக் குறைந்துகொண்டே வருகிறது.

சுதந்திர தாகம் தணிந்த பிறகு ஆங்கிலமொழியில் வெறுப்புத் தட்ட ஆரம்பித்திருக்கிறது. ஹிந்தி மொழியில் மோகம் பிறந்திருக்கிறது. சிலர் இரு மொழிகளும் அவசியம் என்கின்றனர். மொழிஉணர்ச்சிப் பருவம் தாண்டின பிறகு குழந்தைகளைக் கட்டாயப் படுத்துவது அறிவுடைமையா என ஆராய்தல் அவசியம். ஆனல் தாய் மொழியுடன் பிற மொழிகளையும் இளம் பிராயத்தில் கலந்தால் தாய் மொழி ஒரு அவியல் மொழி ஆகிவிடுமே என்று கருதுவோரும் உளர். இவ்வாறு ஆகாது என்று பெட்ராட்ன்ட் ரசல் போன்ற அறிஞர் தம் குழந்தையின் உதாரணத்தையே எடுத்துக் காட்டுகின்றனர். குழந்தைகளுக்கு மொழிவாரியாகப் பிரித்து அறியவும் பேசவும் சக்தியுண்டு என்றும் கூறுகின்றனர்.

சாம்ராஜ்யங்களுக்குக் கொடிகள் இருப்பதுபோல தாய் மொழிக் கொடியும் இருக்க வேண்டும். இந்தக் கொடியை ஏந்தும் பாக்கியம் சிறு குழந்தைகளுக்குத்தான் உண்டு.

*

நாரை விடு தூது

நா. கி. நாகராசன்

நாஜி ஜெர்மனியின் சிறைகளில் ஒன்றான பெல்சன் என்னுமிடத்தில் அடைபட்டு உள்ளமும் உடலும் ஒருங்கே வாடி நின்ற யூதப் புலவரொருவர் ஒரு நாள் மாலையில் சில நாரைகள் சுயேச்சையாய்ப் பறந்து செல்வதைக் கண்டார். சிறை வாழ்க்கையால் மனம் புழுங்கிய அவர் பறவைகளின் இன்ப வாழ்வு கண்டு பொறாமைகொண்டார். அவற்றிற்குத் தமது இன்னலை எடுத்துக் கூறித் தம் நாட்டு மக்களின் விடுதலைக்காக ருஷ்யா உதவி செய்ய வேண்டுமென அவற்றைத் தூது விடுத்தார். அங்கிருந்து சென்ற நாரைகள் 'ஏழையென்றும், அடிமையென்றும் எவனு' மில்லா மத்திய ஆசியக் குடியரசை யடைந்து, புலவரது செய்தியைத் தம்மொழியில் கூறிக் கொக்கரித்தன. நாரைகளின் சொல்விளங்காத மக்களோ அதைக் கேட்டு நகைத்துத் தம் வேலைகளில் ஈடுபட்டனர். தம் கடமையைச் செய்த நாரைகள் தெற்கு நோக்கிப் பறந்து தென்னாப்பிரிக்காவை யடைந்தன. அங்கு நிறத் திமிர் கொண்ட வெள்ளையர் இந்தியரைக் கொடுமைப் படுத்துவது கண்டு மனம் பதைத்து நின்றன.

ஆம், கற்பனைக் காட்சிதான். ஆனால் இயற்கை நூலறிஞரின் ஆராய்ச்சிகளின் பயனாய், இளவேனிற் பருவத்தில் ஜெர்மனியில் எல்பே நதிக்கரையை யடையும் நாரைகள் குளிர்காலம் வந்துற்றதும் அவ்விடத்தை விட்டு நீங்கி மத்திய ஆசிய நாடுகளின் வழியே தென்னாப்பிரிக்காவை அடைகின்றன என நாம் அறிவோம். பல்லாயிரம் மைல் பறந்து செல்லும் பறவைகளின் போக்கையறிய விஞ்ஞானிகள் மிக எளிய ஒரு முறையைக் கையாளுகின்றனர். பறவைகளின் காலில் அலுமினிய வளையங்களைப் பொருத்திப் பறக்க விடுகின்றனர். இவ்வாறு குறியிடப்பட்ட பறவைகள் எங்கு சென்றாலும் அவற்றை அறிதல் எளிதாகிறது. ஆகையால் அவைகள் இயங்கும் திசையையறியலாம்.

ஆனால் தற்கால விஞ்ஞானிகள் நாரைகளுக்குக் குறியிடுவதுடன் நிற்கவில்லை. கண்ணுக்குப் புலப்படாத சிறு தூள்களான அணுக்களுக்கும் குறியிட்டு அவற்றை இடைவிடாது கவனித்து அவற்றைப் பற்றிய உண்மையை அறியவும் அவர்கள் துணிந்துவிட்டனர். ரேடியம் என்னும் பொருளைப் பற்றி அனைவரும் அறிவர். அது எப்போதும் எக்ஸ்-கதிர்களையொத்த சில கதிர்களை வெளிவிட்ட வண்ணம் உள்ளது. இவை நம் கண்ணுக்குப்

பல்லாயிரக்கணக்கான மைல்கள் பறந்து செல்லும் நாரைகள் எங்கெங்கே போகின்றன என்பதை அறிய ஒரு உபாயத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதேபோல நம் உடம்பில் நோய் எங்கெங்கே உண்டாகிறது என்பதையும், அந்த நோயை மருந்து எப்படிக் குணப்படுகிறது என்பதையும் நிதரிசனமாகக் காண வழி கண்டு பிடித்திருக்கிறார்கள் விஞ்ஞானிகள். கட்டுரையைப் படியுங்கள்.

புலப்படா. ஆனால் ஆய்வு களங்களிலுள்ள சில கருவிகளில் அவற்றைக் கண்டறியலாம். ஆகையால் ஒரு பொருளில் ரேடியம் இருந்தால் அது தன் இருப்பிடத்தை இடைவிடாது அறிவித்துக் கொண்டேயிருக்கும். ஆகையால் அவ்வணுக்களின் போக்கை நாம் தேர்ந்தறியலாம். இவ்வகையில் அலுமினிய வளையங்களைக் கொண்ட நாரைகளைப் போல் ரேடிய அணுக்களும் குறி கொண்டவை.

அண்மைவரை கதிர்களை வெளிவிடும் பொருள்கள் இயற்கையில் கிடைக்கும் ரேடியம், உரேனியம் முதலிய பொருள்களே என நம்பப்பட்டது. ஆனால் உலகத்தின் முதற்பகைவனாகக் கருதப்படும் அணுக்குண்டை ஆக்கும் செயலில், பல பொருள்களைக் கதிர்களை வெளியிடும் தன்மை கொண்டனவாகச் செய்யலாம் என்பது வெளியாயிற்று. அணுக் குண்டுக்குத் தேவையான கேதுவியம் என்னும் உலோகத்தைச் செய்யும் யந்திரத்தில் எப்பொருளை வைத்தாலும் அது கதிர்களை வெளியிடும் பண்பு கொண்டதாகிறது. ஆகையால் நாம் ஒரு பொருளின் போக்கை அறிய, அப் பொருளைக் கேதுவிய யந்திரத்தில் வைத்து அதை செயற்கையில் கதிர்களை வெளியிடும் தன்மை கொண்டதாகச் செய்து அதைப் பயன்படுத்தினால், கதிர்கள் என்னும் குறியைப் பெற்ற அணுக்கள் தம் இருப்பிடத்தை நமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டலாமல்லவா? இத்தகைய அணுக்கள் குறியிட்ட அணுக்கள் எனப்படும். இவை இப்போதே பல துறைகளில் வழங்கிவருகின்றன. வருங் காலத்திலும் இவை விஞ்ஞான வளர்ச்சியில் பெரும் பங்கெடுத்துக் கொள்ளும் என்பதற்கு ஐயமில்லை.

உயிர்களை அழிக்க வந்த அணுக்குண்டின் ஆக்கத்தைப் பற்றிய ஆராய்ச்சிகளினால் பெரிதும் பயனடைந்திருக்கும் துறை உயிர்காக்கும் மருத்துவமே என்பதுவியப்பைத்தரும் உண்மையாகும். அணுவாராய்ச்சியினால் இதுவரை அது ஏராளமான பயன் பெற்றுள்ளது. இனியும் பயனடையப் போகிறது. ஆனால் மருத்துவம் எய்திய பயன்களுள், குறியிட்ட அணுக்கள் எவ்வாறு இத்துறையில் பயன்படுகின்றன என்று மட்டுமே நாம் ஆராய்வோம்.

நமது உடல் நலங் கெடாது பாதுகாக்க இயற்கை நமக்குச் சில பாதுகாப்புகளையளித்துள்ளது. அவற்றுள் சுரப்பிகள் என்னும் உறுப்புக்கள் மிக முதன்மையானவை. இச் சுரப்பிகள் ஒவ்வொன்றும் ஒருவகை நீரைச் சுரந்து அதை உடலின் பலபகுதிகளுக்கும் அனுப்புகிறது. மிகச் சிறிய அளவிலுள்ள இந்நீர் முதன்மையானதொரு பணியைச் செய்யும் திறமை வாய்ந்ததாயிருக்கும். இதன் அளவில் ஒருவித மாற்றமும் ஏற்படக்கூடாது. இல்லையேல் உடல் நலங் கெட்டுச் சில சமயங்களில் சாவும் விளையலாம். நமது கழுத்தில் இத்தகைய சுரப்பியொன்றுளது. இது புரசைச் சுரப்பி எனப்படும். இது இன்றிமையாதவொரு பணியைச் செய்கிறது. நம்முடலிலுள்ள தசைகள் பிராணவாயுவுடன் சேர்ந்து எரிந்து நமக்குத் தேவையான ஆற்றலையளிக்கின்றன. இவ்வாறு அவை எரிவதை இச் சுரப்பி கட்டுப்படுத்துகிறது.

தசைகள் எரிவது குறைந்தால் உடலில் நோய் தோன்றும். அது கட்டுக்கடங்காது அதிகமானாலோ, பல்வகை நச்சுக்கள் தோன்றிச் சாவு விளையும். இவ்வாறு நோமற் பாதுகாக்கும் புரசைச் சுரப்பி ஒரு விதமான சீர்கேடு மின்றி இயங்குதல் அவசியமாகும். ஆனால் அது சில சமயங்களில் கட்டுக்கடங்காது இயங்கத் தொடங்கிவிடுகிறது. அதைக் கட்டுப்படுத்தும் முறைகள் இதுவரை முற்றிலும் பயன்படவில்லை. ஆகையால் மருத்துவத் துறையின் பெருந்தொல்லையாக இக் கோளாறு இதுவரை இருந்துவந்தது. ஆனால் அணுவாராய்ச்சியின் பயனாய் புரசைச் சுரப்பிக் கோளாற்றைக் கட்டுப்படுத்தும் வகையறிய வழியுண்டு என இப்போது நம்ப இடமிருக்கிறது.

புரசைச் சுரப்பி வெளிவிடும் நீரில் மிக அதிகமாக உள்ள பொருள் ஊதிதம் (Iodins) எனப்படும். காயமானால் அதன்மேல் மஞ்சள் நிறமான ஒரு கரைவு தடவப் படுகிறதல்லவா? அது ஊதிதக் கரைவு (Tincture of Iodine) எனப்படும். இதில் இப்பொருள் சாராயத்தில் கரைந்துள்ளது. ஆனால் புரசை நீரிலுள்ள ஊதிதத்தின் அளவு மிகக் குறைவாகும். ஆகையால் அதன் இருப்பிடத்தை அறிய இயலாது. ஆனால் ஊதித அணுக்களைக் கதிர்களை வெளிவிடுமாறு செய்தால் அது உடலின் எப்பகுதியில் மறைந்திருப்பினும் தன் இருப்பிடத்தையும், போக்கையும் விளம்பரப்படுத்துகிறது. ஆகையால் ஒருவனுக்கு இத்தகைய ஊதிதத்தை ஊட்டினால், அது புரசை நீரை யடைந்து அத்துடன் உடலின் பல பகுதிகளைச் சேருகிறது. அது செல்லும் திசையை நாம் உணர்ந்து, அதன் பணியையும், அது அளவற்றுப் பெருகும் காரணத்தையும் அறியலாம். இவ் வகையில் புரசைக் கோளாற்றைக் கட்டுப்படுத்த வழி தேடலாம். மருத்துவத் துறையில் இம் முறை இப்போதே பயன்பட்டுப் பல உண்மைகளை வெளிப்படுத்தி யுள்ளது.

குறியிட்ட அணுக்கள் வேறு வகைகளிலும் மருத்துவத்தில் பயன்படுகின்றன. நமது உடலில் ஓடும் குருதியில் இருவகை உயிரணுக்கள் உள்ளன. அவற்றுள் முதலாவது செவ்வுடலி (Red Corpuscle) எனப்படும். பெருக்காடியில் (Microscope) இது சின்னஞ் சிறு தட்டுப் போற் காணப்படும். இது நமது நுரையீரலை யடைந்து அங்குள்ள பிராண வாயுவை யேற்று அதை உடலின் பல உறுப்புகளுக்குங் கொண்டு செல்கிறது. அவற்றில் கழிவுப் பொருளாகத் தோன்றும் கரியமில வாயுவையும் இது நுரையீரலுக்குத் திருப்பிக் கொணர்ந்து, அதை வெளியேற்ற உதவுகிறது. இதைத் தவிர வெண்மையான துகள்களான வெண்ணுடலிகளும் (White Corpuscles) குருதியில் உண்டு. இவை உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் நோய் நுண்ணங்கள் புகாது பாதுகாக்கின்றன. ஒரு வகைச் சோகை நோயில் இவ் வெண்ணுடலிகள் அளவுக்கு மீறிப் பெருகிவிடுகின்றன. அப்போது உடல் நலங்கெட்டு நோய் விளைகிறது. இந் நோயை இதுவரை எவ்வகையிலும் குணப்படுத்த இயலவில்லை. ஆனால் குறியிட்ட அணுக்களால் இதை இப்போது ஓரளவு கட்டுப்படுத்த முடிகிறது. வெண்ணுடலிகளில்

மிக அதிகமாகவுள்ள பொருள் எரியம் (Phosphorus) எனப் படும். தீக்குச்சி எரிய உதவு கிறது இதுவே. இதையும் செயற்கை முறை ஊகிதத்தைப் போலவே கதிர்களை வெளியிடும் பண்புள்ளதாகச் செய்யலாம். இவ்வாறு குறியிடப்பட்ட எரிய அணுக்களை உடலில் ஊட்டினல், இவற்றிலிருந்து வெளிவரும் கதிர் கள் வெண்ணுடலிகளின் பெருக் கத்தைத் தடை செய்வதோடு, அவைகள் செல்லும் போக்கை யறிவித்து இந் நோயின் கார ணத்தையும் ஒருவாறு விளக்கு கின்றன.

இவற்றைத் தவிர வேருெரு வகையிலும் அணுக்களுக்குக் குறியிடும் முறை மருத்துவத்தில் பயன்படுகிறது. நமது உடலில் நிகழும் பலவினைவுகள் இரசாயன மாறுபாடுகளைச் சேர்ந்தன. எடுத் துக்காட்டாக, நாம் வேலை செய் யும்போது நம் தசைகள் இயங்கு கின்றன. அப்போது ஒரு இர சாயன மாறுபாடு நிகழ்ந்து பால கக்காடி என்னும் நச்சுப் பொரு ளொன்று வெளி வருகிறது. இதுவே நம் கைகால்களில் வலியை உண்டாக்குகிறது. நாம் ஓய் வெடுக்கும்போது இது உடலி லுள்ள பிராண வாயுவுடன் கலந்து வேருெரு பொருளாக மாறிவிடுகிறது. இதனல் நாம் களைப்பு நீங்கி மீண்டும் உற்சாக மடைகிறேம். இவ் வினைவில் நிக ழும் இரசாயன மாறுபாடுகள் இதுவரையில் தெளிவாய் அறி யப்படாமலே இருந்து வந்தன. ஆனல் உடலின் உயிரணுக்களில் மிக அதிகமாகவுள்ள கரிமத்தைக் குறியிட்ட பொருளாகச் செய்து ஆராய்வதால் இதில் நிகழும் மாறுபாடுகளின் தன்மை வெளி யாகும். அப்போது கடினமான வேலை செய்தாலும் களைப்புத் தோன்றுமல் செய்யும் முறைகள் வகுக்கப்படலாம். ஆகையால் வருங் காலத்தில் மனிதன் களைப்பென்பதையே அறியாது வேலை செய்யும் திறன் பெறலாம்.

இதைப்போல் வேறு இரசா யன மாறுபாடுகளும் உடலில் நிகழ்கின்றன. அவற்றின் தன் மையை யறியவும் கதிர்களை வெளியிடும் குறியிட்ட கரிம அணுக்கள் பயன்படலாம். ஏனெனில் உயிரணுக்கள் அனைத் திலும் இப் பொருளே அதிகமாக உள்ளது. ஆகையால் உடலியல் நூலில் இது வருங் காலத்தில் மிக அதிகமாக வழங்கும் என எதிர் பார்க்கலாம். ஆகையால் இத்துறை யில் குறியிட்டகரிமம் மிகப் பய னுள்ள தனிமமாக விளங்கும் என்பது திண்ணம்.

அணுக்களுக்குக் குறியிட்டு அவற்றின் போக்கை அறிவ தோடு தற்கால விஞ்ஞானி மன நிறைவடையவில்லை. நமது உட லில் பல்வகை நோய்களை விளைவிக் கும் நுண்ணங்களுக்கே குறியிடு வதில் அவன் வெற்றியடைந்து விட்டான்! உலகத்திலேயே மிகக் கொடிய அரக்கனெனக் கருதப் படுவது என்புருக்கி நோய் (Tuberculosis). இதுவரை இதைக் குணப்படுத்த இயலவே இல்லை. இது பெருக்காடியிலும் சரிவரத்தெரியாத ஒருவகை நுண் ணத்தால் விளைகிறது. இதைப் பற்றி விஞ்ஞானி எதுவும் அறிய இடலவில்லை. ஆனல் இப்போது இரு அமெரிக்க அறிஞர்கள் குறி யிட்ட எரிய அணுக்களை இந்நுண் ணங்களின் மேல் ஏற்றி ஆராய்ந்து வருகின்றனர். இவர் களது சோதனை வெற்றிபெற்ருல், கோடிக்கணக்கான உயிர்களைக் கொள்ளைகொள்ளும் இந் நோய்

விஞ்ஞான அறிவுக்கு அடிபணியும். மனிதன் நோயுடன் இடும் போரில் முழு வெற்றியடைவான்.

நோயைக் குணப்படுத்த நாம் மருத்துவர் கொடுக்கும் மருந்துகளை உட்கொள்ளுகிறோம். இதனால் நோய் சிலசமயங்களில் குணமாகிறது! ஆனால் இது எவ்வாறு நோயைக் குணப்படுத்துகிறது என்பதை மருத்துவரே அறியார்! ஆனால் மருந்துகளில் குறியிட்ட அணுக்கள் இருந்தால் அவை உடலிற்பரவி இயங்குவதை நாம் அறிந்து மருந்தின் பணியை ஊகிக்கலாம். ஆகையால் குறியிட்ட அணுக்களால் நோய் தவிர்க்கும் பணி பெரிதும் முன்னேறலாம். பென்சற்பூஞ்சை (Penicillin) என்னும் தலைசிறந்த மருந்தைப்பற்றி அனைவரும் கேள்விப்பட்டிருப்பர். இது குணப்படுத்தாத நோய்கள் மிகக் குறைவு. இது நோய் நுண்ணங்களை அழித்து நோயைக் குணப்படுத்துகிறது. ஆனால் இது நுண்ணங்களுக்கு எவ்வாறு நமனாக அமைகிறது என நாம் அறியோம். ஆனால் பென்சற் பூஞ்சைக்குக் குறியிட்டு அதைக் கொண்டு ஆராய்ச்சி நடந்துவருகிறது. இதன் விளைவாய் அதன் வேலை தெளிவாகும். அப்போது இதைவிடச் சிறந்தவேறு மருந்துகள் கண்டுபிடிக்கப்படலாம்.

அணு வாராய்ச்சிக்கும், மருத்துவத்திற்கும் ஒருவகைத் தொடர்பும் இல்லை. ஆனால் முதல்துறையில் நடந்த முன்னேற்றத்தின் விளைவாய், இரண்டாவது துறை வியக்கத்தக்க பயன்பெற்றுள்ளது. குறியிட்ட அணுக்களால் நோயின் காரணத்தையும், போக்கையும் அறியமுடியும் எனவிளக்கினோம். ஆனால் இவை வெளியிடும் கதிர்களால் நோயைக் குணப்படுத்தவும் முடியும் என்பது வெகுவாக அறியப்பட்ட உண்மையாகும். அதை இங்கே விரிப்பிற் பெருகும்.

✱

அவளுக்கு நேரமில்லை

ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையில் நான் பரீக்ஷை எழுதப் போனேன். ஒவ்வொரு நாள் பரீக்ஷைக்கும் எங்களுக்கு மூன்று மணி நேரம் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அதே சமயத்தில் இரண்டு மணி நேரம் ஆனலொழிய யாரும் பரீக்ஷை மண்டபத்தைவிட்டு வெளியே போகக்கூடாது என்றும் நிபந்தனை. பரீக்ஷை எழுதிக்கொண்டிருந்தவர்களில் ஒரு பெண் தினந்தோறும் இரண்டுமணி நேரம் கழிந்ததும், விடைத்தாள்களை மடித்துக் கொடுத்துவிட்டு வெளியே போய்க்கொண்டிருந்தாள்.

கடைசி நாளன்று அந்தப்பெண் அவ்விதமே இரண்டு மணி நேரம் ஆனதும் எழுந்து போனாள்; அவள் போகும்போது அங்கே இருந்த பரீக்ஷாதிகாரி சிரித்துவிட்டார். அவர் சிரித்ததின் காரணம் என்ன என்று கேட்டோம். அதற்கு அவர் சொன்ன பதில்:

"தினந்தோறும் அந்தப் பெண் இரண்டாவது மணி கழிந்ததும், தன் விடைத்தாளில் கடைசியாக ஒரு முற்றுப்பெறாத வாக்கியத்தை எழுதி நிறுத்திவிட்டு, அதன்பிறகு 'இந்த வாக்கியத்தை முடிக்க நேரம் இல்லை' என்று எழுதி வைத்துவிட்டுப் போகிறாள்!"

—ஸிலுப்ஸின் பத்திரிகையில் ஒருவர்

இந்தக் கதையை ஹிந்தியிலிருந்து மொழிபெயர்த்தவர் ஸ்ரீ கே. எம். 'அவள் கொடியை வணங்கினாள். கொடி அவளை வணங்கவில்லை!'

ஆகஸ்டு 15

ராமசரண் சர்மா

கமலா தன் சிறிய வீட்டின் முகட்டிலே ஒரு சிறு கொடியைப் பறக்கவிட்டு கை கூப்பி வணங்கினாள். அவள் கண்களில் நீர் பொங்கி வழிந்தது.

அன்று சுதந்திர தினம். இந்தியாவின் ஒவ்வொரு நகரிலும், ஒவ்வொரு கிராமத்திலும் மக்கள் கூட்டங் கூட்டமாக சுதந்திர சூரியனைத் தரிசித்தார்கள். அந்த உதய காலத்திலே கமலாவின் சிறிய மூவர்ணக் கொடியும் காற்றிலே கம்பீரமாகப் பறந்தது. அவள் அதையே கூர்ந்து பார்த்துக்கொண்டு நின்றாள். ஒரு வருடத்திற்கு முன் நடந்த சம்பவங்கள் சலனப் படக் காட்சிபோல் அவள் மனக்கண்ணில் தோற்றமளித்தன.

சரியாக ஒரு வருடமாகி விட்டது. அன்றும் ஆகஸ்ட் 15-ம் தேதி. கமலா கல்கத்தாவில் இருந்தாள். அப்போது அவளுக்குத் தாய் தந்தையரிருந்தனர். தம்பி ஒருவனும் இருந்தான். மானிக்தல்லாவில் ஒரு சிறிய வீடு. தந்தைக்கு ஒரு சர்க்கார் காரியாலயத்தில் வேலை. கமலா காலேஜ் மாணவி, தம்பி விளையாட்டுப் பிள்ளை. அவளுக்கு வீட்டிலே ஆதரவிருந்தது; சுகம் இருந்தது.

கமலாவின் தந்தைக்குப் பகல் முழுவதும் ஆபீஸிலே ஓயாத வேலை. மாலையில் வீடு வந்ததும் குழந்தைகளோடு குழந்தையாக ஆகிவிடுவார். அரசியல் விவகாரங்களிலே அவருக்கு அதிக சிரத்தை கிடையாது. சராசரி வங்காளிக் குமாஸ்தாவைப் போல் பத்திரிகைச் செய்திகளைப் படித்துவிட்டு நண்பர்களுடன் தர்க்கம் செய்வதோடு அவருடைய அரசியல் கடமைகள் தீர்ந்துவிடும். கல்கத்தாவை ஜப்பானிய விமானங்கள் தாக்கியதைப் பார்த்திருக்கிறார். அமெரிக்க ராணுவத்தின் கெடுபிடியையும் கண்டிருக்கிறார். பஞ்சத்தின் கொடுமையால் கல்கத்தாத் தெருக்களில் மக்கள் மாண்டு கிடந்ததைக் கண்டு கண்ணீர் விட்டிருக்கிறார். நேதாஜியையும் அவருடைய ராணுவத்தின் வருகையையும் அவர் எதிர்பார்த்த நாட்களுமுண்டு. இவையெல்லாம் அந்தக் குடும்பத்தின் வாழ்க்கையில் எவ்வித மாற்றத்தையும் கொண்டு வந்துவிட வில்லை.

யுத்தம் முடிந்தது. தேசத்தின் அரசியல் நிலைமையிலே மாறுதல் ஏற்பட்டது. 'பாகிஸ்தான்" கோஷம் தேசமெங்கும் ஒரு பயங்கர கர்ஜனையாகக் கிளம்பிற்று. வங்காளத்திலே முஸ்லிம் லீக் அரசாங்கம், ஆகஸ்ட் 16-ம் தேதி 'நேரடி நடவடிக்கை தினம்' கொண்டாட நிச்சயித்தது.

முதல் நாளே வீட்டுக்குத் தேவையான பொருளையெல்லாம் கொண்டுவந்து சேர்த்துவிட்டார் பட்டாச்சார்யா, கமலா

லேயும் ரமேஷையும் வெளியே எங்கும் போகக்கூடாதென்று கண்டிப்பாக உத்திரவிட்டார்.

"அப்பா நாளை என்ன நடக்கக் கூடும்?" என்று ஆவலோடு கேட்டாள் கமலா.

"ஒன்றும் பிரமாதமில்லையம்மா. ஏதாவது சில்லரைக் கலகங்கள் நடக்கலாம்" என்று அலட்சியமாகப் பதில் சொன்னார் தந்தை.

1946 ஆகஸ்ட் 15-ம் தேதி அமைதியாகவே கழிந்தது. என்றுலும் எல்லோருடையமனத்திலும் ஏதோ ஒரு பரபரப்பு; நாளை என்ன நடக்குமோ என்ற பயமும் கவலையும் கலந்த கேள்விக் குறி. கலகங்கள் தோன்றினலும் அரசாங்கமும், போலீசும் சிறிது நேரத்திலேயே அமைதியை ஏற்படுத்திவிடுவார்கள் என்றே கல்கத்தா வாசிகளில் பெரும்பாலோர் நம்பினர்.

16-ம் தேதி அன்று சர்க்கார் விடுமுறை நாள். பயத்தினலும் சந்தேகத்தினலும் வியாபார ஸ்தலங்கள் யாவும் மூடிக் கிடந்தன. ஆயினும் அன்று நடந்த பயங்கரக் காண்டத்தை மக்கள் கனவில்கூடக் கற்பனை செய்திருக்க முடியாது. முன்னேற்பாடுகளுடன் தயாராயிருந்தவர்களுக்குத் தவிர வேறு யாருக்கும் எதுவும் தெரியாது.

காலையிலே லீகர்களின் ஊர்வலம் ஆரம்பமாயிற்று. லீக் கொடிகள் பறக்க லாரிகள் நகரெங்கும் சுற்றி வந்தன, 'பாகிஸ்தானுக்காகக் கடைசி வரை போராடுவோம்' என்ற கோஷம் வானைப் பிளந்தது. சிறிது நேரத்தில் கோஷம் கூச்சலாகவும் கூக்குரலாகவும் மாறிவிட்டது. பயத்தால் நடுங்கிக் கொண்டே தெருக்கதவைச் சாத்தினள் கமலா.

"பாபு வந்துவிட்டாரா?" சமையல்கட்டிலிருந்த தாய் கேட்டாள்.

"இல்லையம்மா" என்று நடுங்கிய குரலிலே சொன்னள் கமலா. மார்க்கெட்டிற்குப் போயிருந்த பட்டாச்சார்யாவைப் பற்றிய கவலை தாயையும் மகளையும் பிடித்துக்கொண்டது. அவர்களுக்குக் கவலைப்படக் கூடச் சமயம் கிடைக்கவில்லை. கூச்சலும் கோலாகலமும் அவர்கள் வீட்டை நெருங்கியது. பல மற்ற தெருக் கதவு குண்டர்களின் தாக்குதலை எத்தனை நேரம் தாங்கமுடியும்? "வெட்டு! குத்து! போராடிப் பெறுவோம் பாகிஸ்தான்!" என்ற கூச்சல்களோடு கதவு பிளந்து விழுந்த சப்தமும் சேர்ந்துகொண்டது. அந்த ஒரு நிமிட நேரத்தில் நடந்த சம்பவங்கள் கமலாவின் கை கால்களைச் செயலற்ற தாக்கிவிட்டன. அவள் கண் முன்னலேயே தாயார் குத்துண்டு விழுவதைப் பார்த்தாள். "அக்கா" என்ற ரமேஷின் பரிதாபகரமான அலறல் அவளை மயக்கமடையச் செய்துவிட்டது.

அவள் கண் விழித்துப் பார்த்த போது தான் முன்பின் பார்த்திராத ஒரு வீட்டின் அறையிலே தரையில் கிடத்தப்பட்டிருப்பதைக் கண்டாள். அவள் உடலின் ஒவ்வொரு அங்கத்திலும் வலியும் எரிச்சலுமெடுத்தது. எழுந்து அறைக் கதவைக் திறக்க முயன்றாள். கதவு வெளியே பூட்டப் பெற்றிருந்தது. கதவைப் பலங்கொண்ட மட்டும் தட்டி ஓசை உண்டாக்கினள். கதவு

திறந்துகொண்டது. எதிரே மூன்று தடியர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

"ரமேஷ் எங்கே?"

அவர்கள் சிரித்தார்கள்.

"ரமேஷ் எங்கே?" மறுபடியும் அவள் கூச்சலிட்டுக் கேட்டாள்.

"அவன் மாண்டுபோனான்." அவர்கள் சிரித்துக்கொண்டே சொன்னார்கள். "அடபாவிகளா! குழந்தையைக் கொன்று விட்டீர்களா?" என்று அவள் அலறினாள். பலன்?

அவர்கள் சிரித்தார்கள்.

கமலாவின் ரத்தம் கொதித்தது. தன் முழுப் பலத்தையும்கொண்டு அவர்களைத் தாக்க முயன்றாள். மறு விநாடி ஒரு முரடனின் பலத்த பிடியிலே அகப்பட்டுக் கொண்டாள்.

அவளை அவர்கள் எங்கெங்கோ கொண்டு சென்றார்கள். பலவந்தமாக அவளுடைய கற்பைப் பிடுங்கிக்கொண்ட அந்த முரடன் அவளைத் திருப்திப்படுத்தவும், அவள் மனசைத் தன்வசப் படுத்தவும்கூட முயன்றான். அவள் உணர்ச்சியற்ற சடமாகவே இருந்தாள். அவளுடைய வெறுப்பும் உதாசீனமும் அந்த முரடனைக்கூடச் சிலசமயம் திடுக்கிடவைத்தன.

ஒரு நாள் பலாத்காரமாக அவளுக்குப் படுதா போடப்பட்டது. இப்போது முற்றிலும் அவள் அவர்கள் வசமாகிவிட்டாள். கொஞ்ச நஞ்சமிருந்த நம்பிக்கையும் போய்விட்டது. ஆயினும் அவர்கள் நிம்மதியாக ஓர் இடத்தில் தங்கமுடியவில்லை. அவளையும் இழுத்துக்கொண்டு அலைந்தார்கள். வண்டி மாறுவதற்காக ஒரு ஸ்டேஷனில் அவர்கள் காத்திருக்க நேர்ந்தபொழுது, கமலா அணிவோடு ஒரு ஹிந்துவின் காலடியிலேபோய் விழுந்தாள். கூட்டம் கூடிவிட்டது. ஒரு சீக்கிய வாலிபன் தைரியமாக அவள் முகமூடியைக் கழற்றினான். அங்கேயே முரடன் கைது செய்யப்பட்டான். கமலா அகதிகள் விடுதியில் சேர்க்கப் பெற்றாள்.

அகதிகள் விடுதியிலே அவளுக்கு இரண்டு நாள் உணவு கிடைத்தது. ஆறுதலான வார்த்தைகள் கிடைத்தன.

பிறகு? வயிற்றுப் பிரச்னை.

ஆரிய சமாஜத்திற்குச் சென்றாள். சுத்திச்சடங்குகள் செய்து அவளைச் 'சுத்த ஹிந்து' வாக்கத் தடபுடல்கள் செய்தார்கள். அவளுடைய வயிற்றுப் பசியைப் போக்கவில்லை.

உள்ளூர் காங்கிரஸ் தலைவர்களிடம் முறையிட்டாள். அவர்கள் அனுதாப வார்த்தை சொன்னார்கள். காரசாரமான பிரசங்கங்களைத் தவிர வேறு அவர்களிடம் என்ன இருக்கிறது அவளுக்குக் கொடுக்க?

எந்த வாலிபனும் அவளை மணந்துகொள்ள விரும்பவில்லை. "குடும்பத் தேவி"மார் எவரும் அவளைத் தங்கள் வீட்டில் வைத்துக்கொள்ள இஷ்டப்படவில்லை. தலைவர்களும் 'மதகாவலர்க'ளும் சேர்ந்து அந்தப் படித்த பெண்ணுக்கு ஒரு வேலைகூடத் தேடித் தர முடியவில்லை.

அவள் எப்படியோ கஷ்டப்பட்டு ஒரு மில்கூலி வேலையைத்

தேடிக்கொண்டாள். காலேஜ் மாணவிதான்; அழகிதான்; அவள் உடலை ருசிபார்க்காமல் அவளுக்கு யார் வேலை கொடுக்கத் தயாராயிருக்கிருர்கள்? உடலை விற்காமல் கிடைக்ககூடியது மில்கூலி வேலை ஒன்றுதான்.

* * *

இன்று அவள் பறக்கவிட்ட கொடியைப் பெறுவதற்காக அவள் இரண்டுநாள் பட்டினி. இரண்டுநாள் கூலியைப்பெற்றுக் கொள்ளாமல் எந்தத் தேசபக்தனும் அந்தத் துன்பப்பட்ட யுவதிக்கு ஒரு தேசியக்கொடி கொடுக்க இஷ்டப்படவில்லை.

கலங்கிய கண்களுடன் அவள் அந்தக் கொடியையே பார்த்துக்கொண்டு நின்ருள். ஒரு வருடத்திற்குமுன் அவளிருந்த நிலையும் இன்றைய அவள் நிலையும்?

அவள் முஸ்லிம் மதத்தைத் தழுவிக்கொண்டிருக்கலாம். அல்லது வேசையர் கூட்டத்தில் கலந்து போயிருக்கலாம். அந்த இரண்டு இடத்திலும் அவளுடைய வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகி யிருக்கும். அவள் ஓரளவு சுகம்பெற்றிருக்கவும் கூடும். ஆனல்,ஹிந்து சமுதாயத்திலே, பிறருடைய கொடுமைக்குப் பலியான அந்த யுவதியின் கதி......?

இரண்டு நாள் பட்டினி கிடந்தும் தனது தாய்நாட்டின் விடுதலையைக் கொண்டாடுகிருள். ஆனல் சுதந்திர இந்தியாவிலே அந்த அனதையின் வயிற்றுப் பசி......?

அவள் கொடியை வணங்கினள். கொடி அவளை வணங்கவில்லை.

*

வேலை உயர்வு!

இன்று பத்திரிகை ஆசிரியராயிருக்கும் ஓர் ஆங்கிலப் பேராசிரியர் முன்னெரு தடவை ஒரு சாமியார் கல்லூரியில் வேலைபார்த்து வந்தார். ஒரு நாள் அவர் பாடம் சொல்லிக் கொடுக்கும் போது பையன்கள் காட்டுக் கூச்சல் போட்டார்கள், அந்த வேளையில் பிரின்ஸிபால் சாமியார் வகுப்புக்குள் வந்தார்.

வந்தவர் ஆசிரியரைப் பார்த்து "ஏன் இந்தச் சத்தம்?" என்ருர்.

அதே வேளை வெளியில் ஒரு கழுதை கனைத்தது.

பேராசிரியர் "இவர்கள் பாடத்தில் கவனம் செலுத்துவதில்லை, இவர்கள் பரீட்சை எழுத உட்காரும் போது அதோ அந்தக் கழுதையைக் கனைக்கவிட்டு, நல்ல சகுனத்தை நாமாக உண்டாக்க வேண்டியது தான்" என்ருர்.

சாமியாருக்குப் பேராசிரியரின் கிண்டல் பிடிக்கவில்லை. தமது மாணவர்களை அவ்வளவு இழிவாகப் பேச விரும்பாத அவர் பேராசிரியரைப் பார்த்து, "அப்படியானல், அந்தக் கழுதையைக் கத்தச் செய்யும் பொறுப்பை நீங்களே ஏற்றுக் கொள்ளுங்கள்!" என்ருர்.

பையன்கள் உபாத்தியாயரைப் பார்த்துச் சிரித்தனர்.

பேராசிரியர் இதற்குச் சளைக்க வில்லை; "அப்படிச் செய்தால் எனக்கு வேலை உயர்வுக்கு சிபார்சு செய்வீர்கள், ஐயா!" என்ருர்.

—ஸியார்

எதிர்காலத்தில் எப்படி இருக்கும்?

○

பிரான்சிஸ் ராட்மன்

மனிதன் :

கி. பி 4000-ம் வருஷத்திற்குள் இனப்பிரிவினைப் பிரச்னையே தீர்ந்து போய்விடும். அப்போது உலகில் ஒரே ஒரு இனந்தான் இருக்கும். வெளிறிப்போன காப்பிக்கலர் வர்ணத்தில், மஞ்சள் பூத்த கண்களும், இன்றைக்குள்ள சராசரி ஆங்கிலேயனை விடக் குள்ளமான உருவமும் உள்ள மனிதர்களே இருப்பார்கள்.

—ஜான் லாங்டன் டேவிஸ்

கல்யாணம் :

கலியாணம் தன்னிச்சையாய்த் தானே நடக்கும். உலகெங்கும் கம்பியில்லாத் தந்தியும், டெலிவிஷனும் வருங்காலத்தில், பற்பல விதமான குருமார்களும், பதிவு உத்தியோகஸ்தர்களும் சொன்ன சொல்லையும் கேட்ட கேள்விகளையுமே திருப்பித் திருப்பிக் கேட்பதென்பது அர்த்தமற்றுப் போய்விடும். கல்யாணத்துக்கும், காதேடற்றுக்கும், கருமாதிக்கும், கர்ணபூஷணத்துக்கும் ஒரே ஒரு குருக்கள்தான் இருப்பார். தமது ஒலிபரப்பு நிலையத்திலிருந்துகொண்டு, குறிப்பிட்ட முகூர்த்த காலங்களில், தமது பேச்சைப் பேசுவார். ஒரே நேரத்தில் ஐந்நூறு ஜோடிகளைக் கல்யாணம் பண்ணி வைப்பார்.

—ஏ. எம். லோ

நகரம் :

உணவு செயற்கை முறையில் தயாரிக்கப் படப்போகிறது. அப்போது பூந்தோட்டங்கள் இராது. ஆடு மாடுகளைக் கொல்லும் கசாப்புக் கிடங்குகளோ, சாணிக் குவியல்களோ இருக்கப் போவதில்லை. ஏனென்றால் யந்திரசாலைகள் இருக்கப்போகின்றன அல்லவா? இப்படிப்பட்ட சந்தர்ப்பம் வரும்போது; நகரமானது பிறர் கையை எதிர்பாராது சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்ளும் நிலையை எய்திவிடும்.

—ஜே. பி. எஸ். ஹால்டேன்

சமூகப் பிரச்னை :

என்றோ ஒருநாள் நாமெல்லாம் தனிமனிதத் தவறுகளையும் சமூகத்தின் வீழ்ச்சிகளையும், டாக்டர்கள் உடல் நோயையும் மன நோயையும் குணப்படுத்தும் முறையிலே குணப்படுத்த முயலுவோம். மனோதத்துவவாதி சரியான வாழ்க்கையைக் காட்டும் ஆலோசகராகவும், ஆராய்ச்சியாளராகவும் இருப்பார். அப்போது சிறையென்பது ஒரு விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடமாகிவிடும்; அங்கு தவறிழைத்த ஜீவன்களை மாசுமறுவற்ற சூழ்நிலை சுற்றிவளைந்து அந்த ஜீவன்களைப் புனருத்தாரணம் பண்ணி, புதுப்பல மேற்றும்.

—ஆல்பிரட். எல். ஹால்கொஸ்ட்

இங்கே சிலர் எதிர்காலத்தைப்பற்றி ஜோஸ்யம் கூறுகிறார்கள். இவர்களில் தலைசிறந்த இலக்கியகர்த்தாவும், விஞ்ஞானியும், மற்றும் பல துறைகளில் உலகப் பிரபல்யம் பெற்றவர்களும் இருக்கிறார்கள்.

கலாசாரம் :

இன்னும் நூறு வருஷங்களில் இலக்கிய ரசனையோ, ருசியோ, இலக்கியமோ இருக்காது. யந்திரம் ஓட்டும் ஒரு ஜனக்கூட்டமே உலகை ஆளும். ஒவ்வொரு நிமிஷத்தையும் மனிதவர்க்கம் பேச்சொன்றிலேயே கழிக்கும். கிராமவாழ்க்கை, கிடையாது; ஓய்வு கிடையாது; மௌனமும் இருக்காது; வடிகட்டின முட்டாள்களே எங்கும் நிறைந்திருப்பார்கள். நல்ல சாதனைகள், அழகிய இரவுகள், திருப்தியான நாட்கள், அமைதி —எதுவுமே இருக்காது. எல்லாம் ஒன்றுபோலிருக்கும்; எல்லாம் சர்வ சாதாரணமா யிருக்கும். எண்ணமும், சிந்தனை எழுச்சியும் செத்துப்போயிருக்கும்.

—டி. எப். போவில்

சினிமாக்கள் :

ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு வீட்டுக்கு ஒரு சினிமாக் கொட்டகைத் திரை இருக்கும். அதில் ஒரு பொத்தான். அதை அழுத்தினால், வேண்டும் விதமெல்லாம் பேசும்; ஆடும். தாயும் தந்தையும் இதைக் கண்டுகொண் டிருப்பர். இளைஞர்களுக்கு வீடு பிடிக்காது. வெளியில் சென்று வெளியிலுள்ள கொட்டகைகளில் அமர்ந்திருப்பார்கள். அங்கு மிகவும் சௌகரியமாயிருக்கும்

—ஐவர் டிரௌன்

ஆண்களின் உடை :

2030-ம் வருஷத்தில், மனிதர்களுக்கு ஒன்றிரண்டு உடைகள் தான் இருக்கும். ஒன்று வேலைகளுக்கு, மற்றது பிற சந்தர்ப்பங்களுக்கு. ஒவ்வொன்றும் அதனதன் வழியில், சிறந்தும் உபயோகமுள்ளதும், இன்று பெண்கள் அணிவதைப்போலவே; சுகாதார நன்மை தருவதுமாக இருக்கும்.

—பெர்க்மன் ஹெட் பிரபு

நாரியர் உடை :

துணியின் அழுத்தமும், பட்டின் மென்மையும், கம்பளியின் கதகதப்பும் கொண்ட துணிவகைகள் கண்டுபிடிக்கப்படும். உடைகள் கனமற்றதா[illegible], கைப்பைக்குள்ளேயே அரை டஜன் மாற்று உடைகள் வைக்கக்கூடிய அளவான தாயிருக்கும். மேலும் துணியை மாற்றிக் கொள்வதிலும் இத்தனை சங்கடமிருக்காது! மிஞ்சினால் ஒரு மழைக்கோட்டைக் கழற்றும் சிரமம்கூட இருக்காது.

—போர்னி டி' ஆல்போ

தூக்கம் :

எதிர்காலத்தில் கைக்குழந்தைகள் தூக்கங்கலைந்து எழுவதென்பதே நினைக்கமுடியாதது. சொந்தச் சுகாதாரத்தை உத்தேசித்து, தூக்கமின்மை ஆஸ்துமாவைப் போல், அதி அக்கரையுடன் கவனிக்கப்படும். * * * உயிர்வாழ உரிமை இருப்பது போலவே, ஒரு நாளைக்கு எட்டு மணி நேரம் பேய்த் தூக்கம் தூங்குவதற்கும் உரிமை உண்டு.

—பிரேசர் ஹாரிஸ்

சோம்பேறி

ஒரு வேலையும் செய்யாத சோம்பேறி எப்படி இருப்பான் தெரியுமா? தான் வேலை செய்வதாகப் பாசாங்குகூடச் செய்யமாட்டான்

—க்ரிஸ்டீன் பெர்னூர்டீ

இந்த அருமையான மராத்திக் கதையைத் தமிழ்ப்படுத்தியவர் கா. ஸ்ரீ.ஸ்ரீ. கிழவி அந்த வீட்டில் ஒரு பழைய பந்தலைப்போல இருக்கிறாள். ஆனால், மல்லிகைக் கொடி படருவதென்றால் பழைய பந்தலில்தானே படரமுடியும், என்று ஒரு நாள் திடீரென்று கிழவிக்கு ஞானோதயம் பிறந்துவிடுகிறது. எப்படி?

பழைய பந்தல்

வி. ஸ. காண்டேகர்

பள்ளிக்கூடத்தி லிருந்து வந்ததும், குஸுமா ஹார்மோனியப் பெட்டியை எடுத்து வைத்துக்கொண்டு பாடலானாள்.

"யமுனை நதிக்கரையில்
கண்ணன் குழலூதுகிறான்"

பாட்டைக் கேட்டால் அலுப்புத் தீரும் என்பார்கள். ஆனால் பின்கட்டில் பழைய வெள்ளைப் புடைவையைப் போர்த்துக் கொண்டு படுத்திருந்தபாட்டிக்கு இது வேதனையாக இருந்தது. "இந்தப் பெண் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தாலே, சனியன், இந்த லொட லொடப்புத்தான்! இதைக் கேட்பதைவிடப் புராணம் கேட்கப் போகலாமே!" என்று முணுமுணுத்த வண்ணம் அவள் எழுந்து முன்கட்டுக்கு வந்தாள். அப்பொழுது கோபு, கையிலே வர்ணக் காகிதத்தில் அச்சிட்ட ஒரு விளம்பரத்தோடு, குதித்துக்கொண்டே வீட்டுக்குள் வந்தான். பாட்டியைப் பார்த்தவுடனே, "பாட்டி, பாட்டி! இன்றைக்கு ஜோரான சினிமா வந்திருக்கிறது!" என்று கூவினான். அவன் அப்படியே ஓடிப்போய்ப் பாட்டியின் காலைக் கட்டிக் கொள்வதாக இருந்தான்; ஆனால் அவளுடைய முகத்தைப் பார்த்ததும் அவனுடைய குழந்தையுள்ளம் திடுக்கிட்டது. "அக்கா, அக்கா!" என்று கூவிக் கொண்டே அவன் குஸுமாவிடம் ஓடினான்.

கோயிலுக்கு வெறுங் கையுடனா போவது? கோயிலில் வைத்திருக்ரும் பானையில் போடக் கொஞ்சம் அரிசியாவது எடுத்துப் போகலாம் என்ற எண்ணத்தோடு பாட்டி சமையலறைக்குள் போனாள். ஒரு கிண்ணத்தில் அரிசியை எடுத்துக்கொண்டாள். "நான் கோயிலுக்குப் போய் வருகிறேன்" என்று அவள் மருமகளிடம் சொல்லத் திரும்புவதற்குள்ளே, "சற்று இந்தக் குழந்தையை வைத்துக் கொள்ளுங்கள். ஓயாமல் சிணுங்கியபடியே இருக்கிறது. இன்றைக்குச் சமையலும் சீக்கிரம் ஆகவேண்டும். சினிமாவுக்கு—" என்ற வார்த்தை அவள் காதில் விழுந்தது.

மாமியாரின் முகத்தைப் பார்த்ததுமே மருமகள் சட்டென்று வாயை மூடிக்கொண்டாள். "நான் புராணம் கேட்பது நின்றுவிடுமே என்ற கவலைப் இந்த வீட்டில் யாருக்காவது இருக்கிறதா?" என்று பாட்டி நினைத்தாள். குழந்தை பலமாக அழுததையும் சட்டை செய்யாமலே வீட்டைவிட்டு வெளியே வந்தாள். முதல் நாள் காலட்சேபத்திலே கேட்ட ஒரு பாடலை அவள் வாய் முணுமுணுத்தது.

தி டாடா அயர்ன் & ஸ்டீல் கோ., லிட்.

ஹெட் ஸேயில்ஸ் ஆபீஸ்:

102-A, நேதாஜி ஸுபாஷ் ரோட், கல்கத்தா.

இலக்கிய விமர்சனம்

சிதம்பர ரகுநாதன்

' இன்று தமிழில் வெளிவரும் புத்தக விமர்சனங்கள் பாரபட்சமானவை. காரணம், அநேக விமர்சகர்கள் சொந்த விருப்பு வெறுப்புக்கு அடிமையானவர்கள். நூலை விமர்சனம் செய்வதை விட்டு விட்டு நூலாசிரியனைப் பற்றி எழுதுகிறார்கள்'' (பக். 19.) என்று குறை கூறுகிறார் இந்நூலாசிரியர்.

அவர் இலக்கியத்தைப் பற்றியும் இலக்கிய விமர்சனத்தைப் பற்றியும் தெளிவாக விளக்குவதைப் படித்துப் பாருங்கள்.

விலை ரூ. 2/-

தமிழ் புத்தகாலயம்

மயிலாப்பூர் :: சென்னை 4.

"கொண்ட பெண்டிர் மக்களுற்றார்
சுற்றத்தவர் பிறரும்
கண்டதோடு பட்டதல்லால்
காதல்மற்று யாதுமில்லை"

தெருவிலே குஸுமாவின் பாட்டு விளக்கமாகக் கேட்டது.

"யமுனை நதிக்கரையில்
கண்ணன் குழலூதுகிறான்"

பாட்டி கழுத்தை வளைத்துத் தன் மங்கிய பார்வையால் அந்த வீட்டைப் பார்த்தாள். தான் ஒரு கரையிலும் வீட்டிலுள்ள மற்றவர்கள் யாவரும் மறு கரையிலும் இருப்பதாக அவளுக்குத் தோன்றிற்று. இந்த இரு கரைக்கும் நடுவே 'அகாதமான' ஆற்றின் நீல வெள்ளம் ஓடுகிறது. அவள் திரும்ப அக்கரைக்கு எப்படிப் போக முடியும்? மற்ற ஆறுகளுக்கு வாராவதி உண்டு; ஆனால் வாழ்க்கை யாற்றுக்குப் பாலம் போடக் கடவுளால் கூட முடியாது.

* * *

பாட்டிக்குக் கிட்டத்தட்ட எழுபது வயது ஆகிவிட்டது. தன் வாழ்க்கையில் அவள் பட்ட துன்பங்கள் யாவும் அவளுடைய சூன்ய மனத்தில் சுழன்று படிந்தன. உடல் தளர்ந்து விட்டது. வீட்டு வேலை செய்ய முடிவதில்லை. மனமும் சோர்ந்துவிட்டது. ஒரு நாள் போவது ஒரு யுகம்போல இருந்தது. இரவிலே ஒருதரம் தூக்கம் கலைந்தால் மறுபடி வருவதில்லை; ஆனால் இரவுப் பொழுதோ விரைவில் கழிவதில்லை. மகன், மருமகள், பேரன், பேத்திகள் ஆகியவர்களின் உலகம் தன் உலகத்தினின்றும் முற்றும் வேறுபட்டது என்று அவளுக்குச் சில நாளாகத் தோன்ற ஆரம்பித்திருக்கிறது. அவள் கண்ணைத் திறந்தபடியே இருட்டைப் பார்த்துக்கொண்டு படுக்கையில் உட்கார்ந்திருப்பாள்; அந்தச் சமயத்தில் வீட்டிலே மீதிப்பேர் எல்லோரும் இனிய தூக்கத்திலே ஆழ்ந்திருப்பார்கள். சாப்பாடு, துணி மணிகள், வேடிக்கை முதலிய எல்லா விஷயங்களிலும் வீட்டிலே ஓர் ஆச்சரியகரமான மாறுதல் அவளுக்குத் தென்பட்டது.

அவள் புராணம் கேட்க வந்து உட்கார்ந்தாள். சாஸ்திரிகளின் வாக்குப்பிரவாகம் படையெடுத்து ஓடியது. "இந்த உலகத்திலே யாரும் யாருக்கும் சொந்தமில்லை. ஆகையால் நாம் பிறந்த நிமிஷம் முதல் நம்மால் கூடியவரையில் ஆண்டவனைச் சிந்திப்பது நம்முடைய கடமை. ஈசுவரனுடைய நாமத்துக்கு உள்ள மகிமையை அளவிட்டுச் சொல்ல யாராலும் முடியாது..." வீட்டில் யாரோ நோயாளியாக இருந்ததனால் அவர் அன்று சற்றுச் சீக்கிரமே புராணத்தை முடித்துவிட்டார்.

பாட்டி மிகுந்த பக்தியோடு அவருடைய பிரவசனத்தைக் கேட்டாள். எதிரே கர்ப்பக்கிரகத்துள் இருந்த சங்கரலிங்கம் அவள் கண்ணுக்குத் தெரியவில்லை. ஆயினும் நடு நடுவே அவள் அந்தப் பக்கம் பார்த்துக் கை கூப்பினாள். ஆண்டவனுடைய தரிசனம் கிடைத்தால் தான் தன் மனத்துக்கு இனி அமைதி உண்டாகும் என்று அவளுக்குத் தோன்றிற்று. ஆனால் ஆண்டவனுடைய தரிசனம் சொர்க்கத்திலேதானே கிடைக்கும்! சொர்க்கத்துக்குப் போவதென்றால்—சாவைப்பற்றி எண்ணியதுமே அவளுக்குத் தூக்கி வாரிப்போட்டது. தன்

மகள் சிறு வயதில் நோய்வாய்ப் பட்டிருந்தபோது, "கடவுளே, என்னைக் கொண்டுபோ; இந்தக் குழந்தைக்கு உயிர்ப் பிச்சை கொடு!" என்று அவள் மிகவும் மகிழ்ச்சியோடு வேண்டிக் கொண்டது உண்டு. அதற்குப் பிறகு எத்தனையோ ஆண்டுகள் கடந்துபோயின என்பது உண்மை! ஆனால் சாவைப்பற்றி நினைத்ததும், முன்னைக் காட்டிலும் இப்பொழுது உயிர் விடுவது அவளுக்குக் கஷ்டமாகத் தோன்றிற்று. "நமக்குச் சாவே வேண்டாமே! ஆனால் உயிரோடு இருந்துமட்டும நாம் என்ன செய்துவிடப் போகிறோம்! நமக்கு இந்த உலகத்திலே என்ன வேலை இருக்கிறது?" இப்படி அவள் எண்ணினாள்.

புராணம் நடந்து கொண்டிருந்தபோதே அவள் ஒருதரம் வெளிப்புறம் பார்த்தாள். மாலைக் கரு நிழல் உலகத்தை இருட்டாக்கியது. மரத்திலிருந்து சருகுகள் உதிரும் ஓசை கேட்டது. கூட்டுக்குத் திரும்பும் காக்கைகளின் கூச்சல் ஓயாமல் காதில் விழுந்தது. பாட்டியின் மனத்தில் விசித்திரமான கருத்து உதித்தது. "மற்றப் பறவைகள் மட்டும் அமைதியாகக் கூட்டுக்குத் திரும்புகின்றன. ஆனால் இந்தக் காக்கைகள் கூச்சல் போடாமல் போவதில்லை."

புராணம் முடிவதற்கு முன்பே இருள் கவிந்து கொண்டது. பாட்டி மெதுவாக எழுந்தாள். வழியில் அவள் கண்ணுக்கு ஒன்றுமே புலப்படவில்லை. ஆயினும் சோர்ந்த மன நிலையிலே அந்த இருட்டில் நடந்துபோவது அவளுக்கு ஓரளவு ஆறுதலாக இருந்தது.

வாசலில் அவளுடைய புதல்வர் நின்றிருந்தார். "என்னம்மா இவ்வளவு நேரம்! அதுவும் இந்த இருட்டிலே!" என்றார்.

பாட்டி ஏதும் பேசாமலே உள்ளே போனாள். 'கோயிலுக்கு ராந்தலை எடுத்துக்கொண்டு இவன் வந்திருந்தால், இவனுடைய அன்பை உண்மையென்று சொல்லலாம்' என்றது அவள் மனம். அவள் உள்ளே போய்ப் பார்த்தபோது சமையலறையில் கடை கட்டியாகி விட்டது. குஸுமாவும் கோபுவும் சினிமாவுக்குப் போகும் ஆனந்தத்தில் மூழ்கி யிருந்தார்கள். பிள்ளை தன்னையும் வாவென்று கூப்பிட வேண்டும்; அப்பொழுது "எனக்கோ கண் தெரிவதில்லை. எதுக்கடா பணத்தைக் கரியாக்குகிறாய்? நான் குழந்தையை வைத்துக்கொண்டு வீட்டைப் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் போய்ப் பார்த்து வந்தால் நான் பார்த்த மாதிரிதான்!" என்று பதில் சொல்ல வேண்டுமென்று பாட்டி நினைத்தாள்.

ஆனால் இதே விஷயத்தை மருமகள் சொன்னபோது அவளுக்குப் பிரமாதமான கோபம் வந்து விட்டது. கைக்குழந்தையை வீட்டிலே விட்டுச் சினிமாப் பார்க்கப் போகும் மருமகளுக்குச் சரியான புத்தி புகட்ட வேண்டும் என்று அவளுக்குத் தோன்றிற்று. ஆனால் மறு கணம், மாலை நேரத்திலே அவள் கண்ட காட்சியை நினைத்துக் கொண்டாள். அவள் ஆற்றின் ஒரு கரையிலே இருக்கிறாள்; மற்றவர்கள் யாவரும் மறு கரையில் இருக்கிறார்கள். இனி அவர்களுக்கும் அவளுக்கும் என்ன தொடர்பு? யார் என்ன வேண்டுமானாலும் செய்யட்டுமே!

அவள் பூஜையறையில் கடவுளுக்கு முன்னல் போய் உட்கார்ந்தாள், நந்தா விளக்கில் திரி கருக்காடி யிருந்ததை அவள் பார்த்தாள். சுடரைத் தட்டாமலே அவள் வெகுநேரம் அமைதியாக உட்கார்ந்திருந்தாள். பிறகு ஆண்டவன் முன்பு தலையைச் சாய்த்துத் தழுதழுத்த குரலில், "நாராயணு, இந்தப் பந்தத்திலிருந்து என்னை விடுவித்துவிடு, அப்பனே!" என்முள். அவள் இப்படிச் சொல்லிவிட்டாள்; ஆனல் இந்தப் பந்தத்திலிருந்து விடுபட மரணத்தைத் தவிர வேறு வழியே இல்லை என்பது கவனத்துக்கு வந்ததுமே, அவளுக்கு என்னவோபோல இருந்தது. ஆனல் அவள் திரும்பி மறு கரைக்கு எப்படிப் போகமுடியும்? நடுவிலே ஆழமான வெள்ளம் ஓடுகிறதே!

பலகாரம் செய்வதற்காக அவள் பூசையறையிலிருந்து வெளிவந்ததும், வீட்டிலே இருந்த மற்முேர் உலகத்தின் மாறுதல் அவளுக்குத் தெளிவாகப் புலப்பட்டது. வெள்ளைப் புடவையைத் தவிர்த்து வேறு துணி அவள் உடம்பிலே பட்டுப் பல வருஷங்களாகி விட்டன. சினிமாவுக்குப் போவதற்குச் சிங்காரித்துக் கொண்டு வந்த குஸுமாவை அவள் பார்த்தாள். ரோஜா நிறப் புதுப் புடவை, அதே நிறத்தில் பிளவுஸ், வட்டமான கூந்தற்கட்டு, இடதுகை மணிக்கட்டிலே பொன் கைக் கடிகாரம்!—நல்ல வேளையாக, அவள் முகத்திலே அப்பிக் கொண்டிருந்த பவுடர் பாட்டியின் கண்ணுக்குத் தென்படவில்லை. ஆனல், அவள் தண்ணீர் குடிப்பதற்காகப் பாட்டியைத் தாண்டிச் சென்றபோது, ஏதோ ஒரு ஸெண்டின் தீவிர நெடி பாட்டியின் மூக்கிலே அடித்தது. பாட்டி மூக்கை அழுத்தி மூடிக் கொண்டாள்.

சற்று நேரத்துக்கெல்லாம் குஸுமாவின் தாயும் அலங்காரம் செய்து கொண்டு வெளியே வந்தாள். 'அந்தப் பெண்ணுக்குத் தாய்தானே இவள்!' என்று பாட்டி மனத்துக்குள் சொல்லிக் கொண்டாள். மூன்று குழந்தைகளுக்குத் தாயான பிறகு அவள் நிலைக்கண்ணுடியிலே அழகு பார்த்துத் தலை பின்னிக் கொள்வது, பாட்டிக்கு அடியோடு பிடிக்கவில்லை. 'இம்மாதிரி உலகத்திலிருந்து தான் கொஞ்சங் கொஞ்சமாக விலகிக் கொண்டே போவது ஒரு விதத்தில் நல்லது தான்' என்று பாட்டிக்குத் தோன்றிற்று.

ஆனல்குழந்தையைத் தொட்டிலிலே விட்டு, அவர்கள் எல்லோரும் வெளியே கிளம்பும் வரையில் தான் இந்த எண்ணம நிலைத்திருந்தது. சிறிது நேரம் அவள் பூஜையறையில் போய் உட்கார்ந்தாள். ஆனல் வீட்டிலே இருந்த நிசப்தமான அமைதி அவளை வாட்டியது. 'நாம் எப்பொழுதோ இந்த உலகத்தை விட்டுப் போயாகி விட்டது. ஏதோ ஓர் ஆசைநூல் ஒட்டிக் கொண்டு இருந்ததனல் நாம் பிசாசாகியிருக்கிறேம். இந்தக் கணத்திலே இதோ ஆண்டவன் முன்னல் உட்கார்ந்திருப்பது நாமல்ல; நம்முடைய பிசாசு!' என்றுகூட அவளுக்குத் தோன்றிற்று.

இதை எண்ணியதும் அவளுடைய இருதயம் படபடவென்று அடித்துக்கொண்டது. அவள் பூஜையிலிருந்து வெளியே வந்து இந்த விளக்கைப் போடு

வதும், அந்த விளக்கைப் போடு வதுமாகச் சும்மா வீடு முழுவதும் சுற்றி வந்தாள். சமையலறையில் மூலையிலே நாலைந்து கரும்புத் துண்டுகள் கிடப்பதை அவள் இயல்பாகப் பார்த்தாள. பக்கத்திலேயே அரிவாள்மணை இருந்தது. பாட்டிக்குக் கரும்பு தின்ன வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. மறுகணமே அவளுக்குச் சுய நினைவு வந்தது. பொக்கைவாய்க் கிழவி எப்படிக் கரும்பு தின்ன முடியும்? அரிவாள்மணையைப் பார்த்து, “கிடக்கட்டும் சனியன்!” என்று சொல்லிவிட்டு, அவள் சமையலறையிலிருந்து வெளியே வந்தாள்.

மருமகளின் அறைக்குள் போனதும் அவள் மனம் பட்ட பாடு சொல்லும் தரமல்ல. கட்டிலிலே தொங்கிய மெல்லிய கொசுவலை, மேஜைமேல் வைத்திருந்த விலையுயர்ந்த ரேடியோப்பெட்டி, சுவரிலே மாட்டியிருந்த அழகிய படங்கள்—எல்லாம் ஒரே உல்லாச உலகந்தான்! தரையில் விழுந்திருந்த கைக்குட்டை பாட்டியின் காலிலே பட்டது. இந்தக் கைக்குட்டைக்கு இவ்வளவு வெண்மை எப்படி வந்தது! இதைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்துப் போட்டால் என்ன என்று அவ்வளவு கோபம் வந்தது பாட்டிக்கு. மருமகளின் இந்த ஒய்யார வாழ்க்கை பாட்டிக்குச் சகிக்கவில்லை.

குழந்தைகளின் அறைக்குப் போனதும் அவளுடைய எரிச்சல் அதிகமாகிவிட்டது. குஸுமாவின் மேஜைமேல் கொண்டை ஊசிகள் குவியலாகக் கிடந்தன. அருகிலே ஏதோ ஒரு புத்தகம் இருந்தது. பாட்டி அதை எடுத்து கண்ணருகே கொண்டுவந்து உற்றுப்பார்த்தாள். ‘நாசமாய்ப் போக!’ என்று சொல்லிக் கொண்டே அவள் அதை விட்டெறிந்தாள். அது ஒரு சமூக நாவல். அதன் அட்டைப் படத்தில், ஓர் இளைஞன் குனிந்து தன் காதலியை முத்தமிட்டுக்கொண்டிருந்தான்!

கோபுவின் சட்டை ஆணியில் தொங்கியது. அதை மேலாகப் பார்த்துவிட்டு, அவனுடைய பலகைமேல் வைத்திருந்த புத்தகத்தைப் பாட்டி எடுத்தாள். விளக்கு வெளிச்சத்தில் போய் அதைப் பிரித்தாள். மிகவும் சிரமப்பட்டு இந்த வரிகளை மட்டும் படித்தாள்:

தாத்தாவுடைய உச்சிக்குடுமி
புசு புசுவென்று பறக்குது பார்!
வளைந்துநிற்கும் பாட்டினுயிடைய
பொக்கைவாய்ச் சிரிப்பின் அழகைப்பார்!

மிகுந்த வெறுப்போடு அவள் அந்த புத்தகத்தைத் தூர எறிந்துவிட்டு, அவசரமாக வெளியே வந்து வாசற் கதவைத் திறந்தாள். வெளியே மையிருள் பரவிருந்தது. வாசல் முற்றத்தில், பழைய பந்தலில் ஏற்றிய மல்லிகைக் கொடி எங்கும் நறுமணத்தை வீசியது. ஆனல் பாட்டிக்கும் அந்த மணத்துக்கும் சம்பந்தமே இல்லை.

அவள் விளக்குகளையெல்லாம் அணைத்தாள்; மறுபடி பூசையறைக்குள் வந்து உட்கார்ந்தாள். அவள் உள்ளத்தில் கடுமையான வேதனை உண்டாயிற்று. அவள் யாருக்காக உயிர் வாழ்கிருள் என்பதே அவளுக்கு விளங்க வில்லை. கடவுளின் முன்னல் தலையைச் சாய்த்து அவள் பேசாமல் படுத்திருந்தாள். மூடிய அவள் கண்முன்பு,

அவளுடைய வாழ்க்கை முழுவதும் பறவையைப் போலப் பறந்து மறைந்தது. அந்தப் பாதி மயக்கத்தில், 'இத்தனை வருஷங்கள் நாம வாழ்ந்தோம்' என்பதே அவளுக்கு உண்மையாய்ப் படவில்லை. எதற்காக, யாருக்காகத் தன் உயிர் இந்த இளைத்த உடம்பிலே இன்னமும் ஒட்டிக் கொண்டிருக்கிறது என்பதை நினைக்க நினைக்க, அவள் மனம் சோர்ந்து போயிற்று. இந்தச் சோர்வினால்தானோ என்னவோ, அவள் கண் அயர்ந்தது.

சிறுது நேரத்துக்கெல்லாம் யாரோ கதவைத் தட்டினார்கள். தூக்கம் கலைந்ததனால் சிடுசிடுப்போடு பாட்டி கண்ணைத் திறந்தாள்.

நந்தா விளக்கு அணைந்திருந்தது. இருட்டில் தடுமாறிக் கொண்டே வெளியே வந்து, அவள் மின்சார விளக்கைப் போட்டாள்; வாசற்கதவைத் திறந்தாள். சினிமாவுக்குப் போனவர்கள் திரும்பி வந்திருந்தார்கள்.

"குழந்தை எழுந்ததா என்ன?" என்று மருமகள் கேட்டாள். பாட்டி பேசவே இல்லை.

மருமகள் தொட்டிலினருகே சென்று, குழந்தையைத் தொட்டுப்பார்த்துக்கொண்டே, "அடியம்மா! குழந்தை சொட்டச்சொட்ட நனைந்திருக்கிறதே! அட என் ராஜா, இந்த ஈரத்திலே யாடா நீ தூங்கினாய்!" என்று கூறியவண்ணம் குழந்தையை எடுத்துத் துடைத்து, அன்போடு முத்தமிட்டாள்.

இதைப் பார்த்ததும், 'நான் சற்றுநேரம் முன்பு துணைக்காக வீடு முழுவதும் தேடினனே. குழந்தையிடம் மட்டும் நான் போகவில்லை. வீட்டிலுள்ள மற்றவர்களின் உலகம் என் உலகத்தினின்றும் வேறுபட்டிருக்கலாம்; ஆனால் குழந்தையின் உலகம் வேறுபட்டதா?' என்று பாட்டிக்குத் தோன்றிற்று. அவள் குழந்தையை எடுத்துக் கொள்ள முன்வந்தாள்; அதற்குள் மருமகள் கோபத்தோடு அதைத் தூக்கிக்கொண்டு தன் அறைக்குப் போய்விட்டாள்.

இருளடர்ந்த பூசையறைக்குள்ளே போய், பாட்டி கண்ணைத் துடைத்துக்கொண்டாள். குழந்தையோடு தானும் ஒட்டிக் கொள்ளலாம் என்று பாட்டி நினைத்தாள். ஆனால் அவளுக்குக் குழந்தையிடம் என்ன உரிமை இருக்கிறது? இப்பொழுது தாயின் அணைப்பிலே குழந்தை சிரித்துத் தூங்கிக்கொண்டிருக்கும். பாட்டிக்கோ இனி இரவு முழுவதும் தூக்கம் வரப்போவதில்லை.

தனிமை—எப்போதும் அழியாத தனிமை—இனி அவள் வாழ்க்கையிலே என்ன மகிழ்ச்சியை உண்டாக்கப் போகிறது!

நந்தா விளக்கை ஏற்ற வேண்டுமென்று அவள் ஆயிரம் தடவை நினைத்தாள். ஆனால் அவளால் எழுந்திருக்கவே முடியவில்லை. 'ஆண்டவன் இருட்டில்தான் இருக்கட்டுமே.' என்ற எண்ணம், அவளுடைய சித்தைக்குச் சிறிதும் பொருந்தாத எண்ணம் அப்பொழுது தோன்றின.

இதற்குள் குழந்தையின் அழுகை கேட்டது. அது பலமாக அழுதது. பாட்டி தன் இடத்தைவிட்டு அசையவில்லை. "பூசையறையிலே இருப்பார்!" என்று மருமகள் சொல்லிய வார்த்தை அவள் காதில் விழுந்தது.

பாட்டி அவசரமாக எழுந்து நந்தா விளக்கை ஏற்றினாள்.

குழந்தையை எடுத்துக் கொண்டு அதன் தாய் உள்ளே வந்தாள். அந்தக் குழந்தை "பாத்தி—பா—த்—தி" என்று கூவிக்கொண்டு அவள்மேல் தாவியது.

"எழுந்ததுமே பாட்டி பாட்டி என்று உங்களிடம் வர அடம் பிடித்தான். எவ்வளவோ தட்டினேன். விளையாட்டுக் காட்டினேன். ஆனால் பாட்டி பாட்டி என்று புலம்பிக்கொண்டேயிருந்தான். உங்களுக்குச் சிரமமாக இருக்குமே என்று பார்த்தேன்..."

"சிரமம் என்னடி எனக்கு? இந்தக் கண்ணன் குழந்தையோடு கொஞ்ச என்ன சிரமம்?" என்று பாட்டி சிரித்துக் கொண்டே சொன்னாள்.

குழந்தையின் தாய் தூங்கப் போனாள். பாட்டி குழந்தைக்கு விளையாட்டுக் காட்ட வாசலுக்கு எடுத்து வந்தாள். "அதோ விளக்கு, விளக்கு!" என்று ஆகாயத்திலிருந்த நட்சத்திரங்களை அவனுக்குக் காட்டினாள். இப்போது அவள் மனதில் வேறு எண்ணம் தோன்றியது முன் போலவே இப்போதும் பூமியில் இருள் சூழ்ந்துதான் இருந்தது. ஆனால் ஆகாயத்தில் தாரகைகள் மினுமினுத்தன. காற்றலையோடு மல்லிகை மலரின் மணமும் வீசியது. அந்தப் பழைய பந்தலின் வாழ்க்கை—தரையிலே ஊன்றிக் கொண்டு அது நிற்பது—மல்லிகையின் இந்த இனிய மணத்துக்காகத்தான் என்பதை உணர்ந்ததும் பாட்டியின் மனம் அமைதியடைந்தது.

மகிழ்வுற்ற அவள் மனம், "ஆண்டவனின் வீட்டிலிருந்து சமீபகாலத்தில் வந்த உயிரும், ஆண்டவனின் வீட்டுக்கு விரைவிலே செல்லப்போகிற உயிரும் உறவு கொண்டாடுவதில் என்ன தடை இருக்கிறது?" என்று பேசியது.

தாய் சொல்லவே, குஸுமா குழந்தையைத் திரும்பி எடுத்துக் கொண்டு போகவந்தாள்.

"யமுனை நதிக்கரையில்
கண்ணன் குழலூதுகிறான்"

என்று முணுமுணுத்துக் கொண்டே அவள் வந்தாள்.

அவள் முணுமுணுத்த அந்தப் பாட்டைக் கேட்டு, குழந்தையைப்போலவே பாட்டிக்கும் புகலரிய ஆனந்தம் உண்டாயிற்று

✲

அவனுக்கு என்ன?

வில்லியம் ஜாக்ஸன் என்பவரை ஒரு வாலிபன் போட்டோ எடுத்தான். ஜாக்ஸனுக்கு அப்போது வயது 98. போட்டோ எடுத்ததும், போட்டோக்காரன் ஜாக்ஸனைப் பார்த்து, "உங்களுடைய நூறுவது வயதில் வந்து உங்களைப் போட்டோ எடுப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது" என்றான்.

அதற்கு ஜாக்ஸன் சொன்ன பதில்:

"நீ ஏன் வரமாட்டாய்? உனக்குச் சிக்கு சிப்பந்தி எதுவும் கிடையாதல்லவா?"

—கிளீவ்லண்டு ஆமொரி

இந்த இதழில் பிளேட்டோவின் சிஷ்யர் அரிஸ்டாட்டிலின் வாழ்க்கைக் குறிப்பைப் பற்றிச் சொல்லப்படுகிறது. கிரேக்கதேசத்தின் மேதைகளில் அசகாயசூரர்களாகக் கருதப்படும் சிலருள் இவர் ஒருவர். இவருடைய கொள்கைகளையும் சித்தாந்தங்களையும் பற்றி அடுத்த இதழில் விளக்கப்பெறும்.

அரிஸ்டாட்டில்

(கி. மு. 384—322)

வி. சக்கரை செட்டியார்

மதிப்புக்குரிய தத்துவ ஞானியும், இயற்கை சாஸ்திரியுமாகிய அரிஸ்டாட்டில் கி. மு. 384-ம் வருஷத்தில் ஸ்டஜீரா என்னும் சிற்றூரிலே பிறந்தார். இச் சிற்றூர் வட கிரேக்கு திசையில், மாஸிடோனியாவின் எல்லைப் புறத்திலுள்ளது. இது கல்வியில் சிறந்த ஊர்; அதனால் அவ்வூரார் தங்களை மேம்பட்டவர்களென எண்ணினார்கள். இவருடைய தந்தையார் நிகோமாகஸ் என்பார் ஒரு மருத்துவர். இவர் குடும்பமே மருத்துவ தெய்வமாகிய எஸ்குலாபியஸின் சந்ததியென்று சொல்லப்பட்டது. தம் தந்தை மாஸிடோனியா மன்னனின் அரண்மனை வைத்தியராக வேலை பார்த்து வந்தவர். தந்தையைப் போலப் பிள்ளையும் உயிர் சாஸ்திர அறிவில் அதிக பயிற்சியுள்ளவர். இயற்கை சாஸ்திரங்களில் அவருக்கு மட்டற்ற அறிவும் ஆர்வமும் உண்டு. இக்காலத்து உயிர் சாஸ்திர நிபுணர்களும் அவர் அறிந்த உயிர் வகைகளின் பழக்கங்களை மிகவும் மெச்சிக் கொள்ளுகிறார்கள். ஆகையால் உயிர் சாஸ்திரத்தின் தந்தையென்றே அவர் அழைக்கப்படுவதுண்டு. அக்காலத்தில் மாஸிடோனியா நாட்டின் மன்னர்கள் அந்நிய நாடுகளைக் கவர்ந்துகொண்டு, தங்களையும், தங்களது நாட்டையும் மேம்பட்டதாகச் செய்தார்கள். பிலிப்பு அரசன் திக்குவிஜயஞ் செய்து கிரேக்க நாட்டையும் அடிமைப்படுத்தினான். தம்முடைய அனுபவ வாயிலாக இம் மன்னர்களின் அக்கிரமச் செயல்களையும், அவர்களது அரண்மனை விவகாரங்களையும் கண்டு அவைகளில் அவருக்கு வெறுப்பு மிகுந்தது. இவரது பதினேழாம் பிராயத்தில் ஆதன்ஸ் நகரம் சென்று பிளேட்டோவின் கலைக்கழகத்தில் சேர்ந்து அவருடைய உத்தம மாணவரானார். தம்மை முழுவதும் பிளேட்டோவின் உபதேசத்திற்கு உட்படுத்தி அவரது 'ஐடியாஸ்' (Ideas) என்னும் தத்துவக்கொள்கையை உண்மையென்று வழிபட்டு வந்தார். ஆயினும் தம் தந்தையின் இயற்கை அறிவையும் தாம் பிறந்த இடத்திற்கு அருகிலிருந்த அப்டிரா

என்னும் ஊரின் பெரிய அணு சாஸ்திரி டிமாக்ரடஸின் சாஸ்திரத்தையும் மறந்து விட வில்லை. நமது நாட்டிலும் இவ் வணு சாஸ்திரத்தை வைசேஷக பண்டிதர் வெளியிட்டிருக்கிறார்.

அவர் பிளேட்டோவினுடைய கலைக்கழகத்தின் கொள்கைகளை எல்லாம ஒத்துக்கொள்ளவில்லை. இது பிளேட்டோ இறந்த பின்னர்—அதாவது (கி. மு. 348-347)க்குப் பின்னர்தான் வெளி யிடப் பெற்றது. பிளேட்டோ உயிருடன் இருந்த காலத்தே அரிஸ்டாட்டில் குருவிற்குகந்த சிடனாகத்தான் நடக்கலாயினர். குருவின் பின் அவருடைய ஸ்தானத்தில் கலைக்கழகததுக்குப் குருபட்டம் அவருக்கு அளிக்கப் படவில்லை! இவரிலும் மிகக் குறைந்த சாமர்த்திய முள்ள வனைத் தேர்ந்தெடுததுக் கொண் டார்கள். அரிஸ்டாட்டில் அதன் பிறகு ஆசியாவின் மார்மராக்கட லோரததிலுள்ள இரண்டு நகரங் களுக்குச் சிற்றரசனாகிய எர்மியானின் நாட்டை அடைந்து சில காலம் தங்கி அவனது மகளையும் மணம் புரிந் தார். தம் வாழ்க்கைத் துணைவி யுடன் இல்லறம் நடத்தினர். மனைவி இறந்த பின்னர் மறு மணஞ் செய்யவில்லை. அவளைத் தம்முடைய உயிலிலேயு வெகு உருக்கமாகக்குறிப்பிட்டுள்ளார். பிறகு இவஸ்பாஸ் தீவுக்குச் சென்று அங்கு தம்முடன் மாணாக்கராக இருந்த ஒருவ ருடன் வசித்திருந்த காலத்தே கடல் வாழும் உயிர்களைப் பற்றி அதிகமாக உற்றுணர்ந்து எழுதி யுள்ளவைகள் இக் காலதது சாஸ்திரிகளாலும் போற்றப் படுகின்றன. இப்பொழுதுதான் அவருக்கு நல்ல நாள் பிறந்தது போல் மாஸிடோனியா நாட் டின் மன்னன் பிலிப்பின் மகனாகிய இளவரசனுக்கு (மகா அலெக்ஸாண்டர், உலகத்தை ஜயங் கொண்டான். இந்தியாவில் போரஸுடன் சண்டையிட்டவன்) கல்விக்கு ஆசிரியனாக அழைக்கப்பட்டார். ஆனாலும—இந்தப்பேர் பெற்ற (இனிமேல் பேர்பெற விருக்கும்) இளைஞனுக்கு பாடஞ் சொல்லி யும் என்ன நடந்தது? அலெக் ஸாண்டர் உலகதலைதத் தன் சேனை பலத்தினாலும்—ராணுவ அறிவினாலும் வெற்றி கொள் ளவே காத்திருந்தான். அவனது மனோபீஷ்டமும் பின்னர் நிறை வேறியது என்று சரித்திரம் கற் றவர்கள் அறிவார்கள். அது அரிஸ்டாட்டிலின் மனோபா வமா? இல்லை, இல்லை. உலகத் தில் கல்வியையும், கிரேக்க ஞானத்தையும் பரவும்படி செய்து—உலகத்தவர்கள் மேன்மையடைய வேண்டுமென் பதே அவருடைய நோக்கம். இவ்வெண்ணமும் ஒருவாறு நிறைவேறியது என்றே கூற லாம். அலெக்ஸாண்டர் வெற்றி யின் பிறகு அவனது நாட்டிலும் அவன் வெற்றி கொண்ட நாடு களிலும் கிரேக்க மொழியும், இலக்கியமும், கலை ஞானமும், புதிய நாகரிகத்திற்கு வழி காட்டின.

அரிஸ்டாட்டிலின் ஒரு முக்கிய கொள்கையை இங்கே தெரிந்து கொள்ளுவோம். பிளேட்டோ வைப் போல நகர ஆட்சியே மேலானது என்று நம்பிக்கை யுள்ளவர் அரிஸ்டாட்டில். இவர் அலெக்ஸாண்டரின் தேசிய ஏகாதிபத்திய முறையைப் புறக் கணிக்காமலிருப்பது எப்படி? இது நம்மவருக்கு ஆச்சரி

யத்தை உண்டாக்கும் கோட்பாடாக விருக்கும். நாம், நாடு, நாடு என்று கூக்குரலிட்டு வருகிறோம். ஆனால் கிரேக்கர்களும் பின்னர் ரோமானியரும் எல்லா ஆட்சியும் ஒரே மேலான நகரத்திலேயே சேர்க்கப்படவேண்டும் என்றும், எல்லாத் தேர்தலும், எல்லா மக்களும் கூட ஒரே இடத்தில் நடத்தப்படவேண்டும் என்றும் கருதினர். இரகசிய வோட்டு (Ballot) அப்பொழுது எங்கும் காணப்படவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் முதல் பாகத்தில் இது ஆங்கில நாட்டில் முதல் முதலாக அதிக எதிர்ப்புகளுக்கிடையில் ஏற்பாடு செய்யப்பட்டது.

அரிஸ்டாட்டில் இளவரசனுக்குப் பாடம் சொல்வதை விட்டு ஆதன்ஸ் நகரம் அடைந்து தாமும் ஒரு கல்லூரியை ஆரம்பித்தார். அதவும் கலைக் கழகத்தைப் போலச் சிக்கிரத்தில் பேர் பெற்று உலகச் சரித்திரத்தில் முதல்மையான ஸ்தானத்தையும் அடைந்தது என்று தத்துவஞானவரலாற்றை அறிந்த புலவர்கள் கூறுகிறார்கள். இத்தக் கலாசாலைக்கு உலாவும் பள்ளிக்கூடம் அல்லது நடைப் பள்ளிக்கூடம் என்பார்கள். அரிஸ்டாட்டில் பாடஞ் சொல்லுகையில் உலாவிக்கொண்டு சொல்வது வழக்கம் போலும்! இது கிரேக்க மொழியில் பெரிபாடெடிக் (நடப்பது) என்று சொல்லப்படும். அலெக்ஸாண்டரின் மரணத்தின் பிறகு இந்த ஜெயங்கொண்டானின் (அலெக்ஸாண்டரின்) நாட்டுக்குப் பகையாக ஒரு கிளர்ச்சி ஆதன்ஸ் நகர்மெங்கும் பரவலாயிற்று. அரிஸ்டாட்டில் தாமும் சாக்கிரடீஸின் கதியை அடையக் கூடுமென்று நினைத்துத் தம் தாயின் பிறந்த நகரமாகிய கால்கிஸ் சென்று அங்கு ஓர் ஆண்டு வதிந்து கி.மு. 384-ம் ஆண்டில் மறைந்தார். இவர் சிறிது திக்கிப் பேசக்கூடியவரென்றும், வழுக்குத் தலையரென்றும், சிங்காரமாக உடை அணிபவரென்றும் கூறுகின்றனர். இவருடைய கால்கள் மென்மையாக இருக்குமாம்.

கிரேக்க மொழிப் பண்டிதர்கள் பிளேட்டோவின் உரைநடை மிகவும் அழகானது என்றும், அது மனதைக் கவரத்தக்க உரை நடை யென்றும் சொன்னால், அரிஸ்டாட்டிலின் நடையை அதற்கு மாறாகக் கூறவேண்டும் என்கிறார்கள். சிற்சில இடங்களில் அரிஸ்டாட்டிலின் கருத்தைத் தெரிந்துகொள்வதும் எளிதாக இல்லை. மத்திய காலத்தில் (Middle Ages) இவரது நூல்கள் சிலவற்றை அதிகக் கீழ்த்தரமான லத்தீன் பாஷையில் மொழி பெயர்த்தனர். எனினும் இந்த நூல்களின் மூலம் ஐரோப்பாவிலும், முக்கியமாகக் கிறிஸ்தவ ஞானிகளிடையிலும் தத்துவ ஞான ஆராய்ச்சி ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரோடிப் பரவியது. அவரது கொள்கைகளையும் சித்தாந்தங்களையும் பின்னால் சுருக்கமாகக் கூறுகிறேன்.

புத்திசாலிப் பெண்

புத்திசாலிப் பெண்களுக்கு அடையாளம் என்ன தெரியுமா? யாரும் முத்தமிட வந்தால் மறுத்துவிட வேண்டும்; அதே சமயத்தில் முத்தத்தை இழந்துவிடாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும். —கி. வா. ரேடியோ.

தொடர்கதை

சாக்கடையிலிருந்து

பி. கேசவதேவ்

கமலத்தின் காதலைப் பற்றியும், கல்யாணத்தைப் பற்றியும் அறிந்தது முதல் மாதவன் புது மனிதன் ஆனான். அவன் சதா வெட்டவெளியைப் பார்த்துக் கொண்டு சிந்தித்தான். அவன் வீட்டில் இருந்தபொழுது கமலம் அவன் தேவைகளைப் பூர்த்தி செய்தாள்; அவனைப் பராமரித்தாள். தான் படித்த புத்தகங்களின் சாரத்தை அவனுக்கு விளக்கினாள். அவள் பாடினாள். எல்லாவற்றையும் மாதவன் பற்றின்றிக் கேட்டான். வானத்திற்கு அப்பால் எதையோ தேடுவதைப் போன்று அவன் வானத்தை உற்றுப் பார்த்தான்.

கமலம் பாடும் பாட்டுக்களில் அவன் ஒரு பாட்டைப் பெரிதும் விரும்பினான். அது அன்று, பள்ளிக்கூடத்தில அவள் பாடின பாட்டு. அந்தப் பாட்டுக்கு அசாதாரண ஆகர்ஷண சக்தி இருந்தது. அதில் சோக ரசம் ததும்பிற்று; அது மதுரமாயும் இருந்தது. அந்தப் பாட்டை அவள் பாட ஆரம்பித்தால் அவன் அவள் முகத்தை இமைகொட்டாது பார்ப்பான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாகப் பெருகி ஓடும். "அந்தப் பாட்டை நீங்கள் விரும்புகிறீர்களா?" என்று கமலம் ஒருநாள் கேட்டாள்.

"ஆம். அந்தப் பாட்டு என்னை அழவைக்கிறது."

"அழுவதை நீங்கள் விரும்புகிறீர்களா?"

"ஆம்!"

"என் பாட்டைக்கேட்டு அழுவதை அவரும் விரும்புகிறார்."

"யார்?"

கமலம் பதில் சொல்லவில்லை. அவள் மௌனமாக இருந்தாள். மாதவன் அந்தக் கேள்வியை மீண்டும் கேட்கவும் இல்லை. அவன் வானத்தைப் பார்த்தான் சிறிது நேரத்திற்குப் பிறகு அவன் பெருமூச்செறிந்தான். பிறகு இருமினான்.

"அம்மா! மாமா துக்கப்படுவதாகத் தெரிகிறது. சதா தனியே இருந்து எதையோ யோசிக்கிறார்!"

"எனக்கு என்ன தெரியும், மகளே! எவரும் தெரிந்து கொள்ளமுடியாத குணம் அவர் குணம்!"

கமலம் பரீட்சையில் ஜயித்தாள். அந்தச் சந்தோஷச் செய்தியை மாமாவிடம் சொல்ல அவள் ஓடிவந்தாள் "மாமா! நான் பரீட்சையில் ஜயித்தேன்."

"ஊம்!" என்று முனகினான் அவன். சந்தோஷத்திற்குப் பதில் துக்கக் குறி அவன் முகத்தில் இடம் பெற்றது.

அவள் நிராசையுடன் கேட்டாள்: "நான் ஜயித்ததை எண்ணி நீங்கள் மகிழவில்லையா?"

"ஊம்!"

"அப்படியானால் உங்கள் முகத்தில் ஏன் துக்கக் குறி தென்படுகிறது?"

"குழந்தாய்!" அந்த வார்த்தையில் துக்கம் கலந்த சாந்தம் தொனித்தது. "இனி நான் யாருக்காக உழைப்பேன்?"

"இனி நீங்கள் யாருக்காகவும் வேலை செய்யவேண்டாம். இனி வேலை செய்ய உங்கள் கரங்களுக்கு வலிமை இல்லை!"

"குழந்தாய்! இந்தக் கையும், காலும் வேலை செய்து பழகினவை."

"அந்தப் பழக்கத்தை மாற்ற வேண்டும், மாமா. இத்தனை காலம் எனக்காகவும், அம்மாவுக்காகவும் நீங்கள் வேலை செய்தீர்கள். சாக்கடையில் கிடந்த புழுவாக இருந்தேன் நான். நீங்கள் அந்தப் புழுவை, மனிதனாக வாழச் செய்தீர்கள். எனக்குக் கல்வியும், நாகரிகமும் அளித்தீர்கள். உலர்ந்து, வறண்டுகொண்டிருந்த என்னை மலரும்படி நீங்கள் செய்தீர்கள்..." ஆர்வத்துடன் அந்த எலும்புக் கூடான தேகத்தை அவள் தழுவினாள்.

"மாமா! உங்கள் முயற்சியின் பலன்தான் நான் .....நான் உங்களுக்குச் சொந்தம்; நீங்கள் எனக்குச் சொந்தம்."

ஊற்றிலிருந்து ஜலம் ஒழுகுவதைப் போன்று மாதவனின் குழிவிழுந்த கண்களிலிருந்து கண்ணீர் பெருகி ஓடிற்று. அவன் அன்புடன் அவள் தலையைத் தடவினான். "என் நோக்கம் நிறைவேறிவிட்டது. உன் உயர்வு, உன் சுகம் — இதுதான் என் லட்சியம். இந்த லட்சியம் பூர்த்தியாகிவிட்டது இனி நான் எங்கு செல்வேன்? யாருக்காக உயிர் வாழ்வேன்?"

"இனி மேலும் நீங்கள் எனக்காக உயிர் வாழ வேண்டும். நீங்கள் இன்றி நான் வாழ முடியாது. நீங்கள் சுகமாக வாழ்வதைக் கண்டு நான் மகிழ்வேன். சிகிச்சைக்காக உங்களை நான் மதனப்பள்ளிக்கு அனுப்புவேன் அவர் இதைத்தான் சொன்னார்."

மாதவனின் வறண்ட அதரங்களில் புன்னகை பூத்தது. "இந்த வியாதிக்கா சிகிச்சை? இந்த வியாதிக்குச் சிகிச்சை செய்ய வேண்டிய அவசியமில்லை. சிகிச்சை செய்யாமலே இந்த வியாதி தீரும்!"

கல்யாணி அறையில் பிரவேசித்தாள். "கடவுளே! இது என்ன குணம்? சிகிச்சை செய்யாமல் வியாதி தீருமா?"

"தீரும். என் வியாதி சிகிச்சை செய்யாமல் தீரும்!"

"சாகும் பொழுதா?"

"ஆம் சாகும்பொழுது தீரும். சாகும்பொழுதுதான் தீரும்."

"மாமா!" கமலம் அழுதாள். "மாமா நீங்கள் சாகமாட்டீர்கள். நீங்கள் இறக்க நான் அனுமதிக்க மாட்டேன். நீங்கள் எனக்காக உயிருடன் இருக்க வேண்டும்!"

அவன் அவளைத் தேற்ற முயன்றான் "நீ அழாதே! உனக்காக உயிர்வாழ இன்னொருவர் இருக்கிறார்!"

காலடிச்சத்தம் கேட்டு எல்லோரும் திரும்பிப் பார்த்தனர். கோபி அங்கே நின்றான்.

கலியாணத்திற்கு நாள் குறிப்பிடப்பட்டது. கோபியின் வீட்டில் கலியாணத்தை நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது. கலியாணத்திற்கு முன்

எல்லோரும் தன் வீட்டில் குடி யேற வேண்டுமென்று அவன் வேண்டினன். அந்த வேண்டு கோளை மாதவன் நிராகரித்தான்.

மயிலைப் போன்று கமலம் ஆனந்தக்கூத்தாடினள். கல்யாணி இன்பக் கடலில் மூழ்கினள். வழக்கம்போல் கயிற்றை எடுத்துக் கொண்டு மாதவன் கடைக்குப் புறப்பட்டான்.

கல்யாணி அவனைத் தடுத்தாள். "இதை எடுத்துக் கொண்டு எங்கே போகிறீர்கள்?"

அந்த வறண்ட அதரங்களில் புன்னகை பூத்தது. "உனக்குத் தெரியாது, அல்லவா? இதை எடுத்துக்கொண்டு எங்கே போகிறேன் என்பது உனக்குத் தெரியாது, அல்லவா?"

"இப்பொழுதுகூட இதை எடுத்துக்கொண்டு போவது அவருக்கும் அவளுக்கும் அவமானமல்லவா?"

"அவமானம்!" கண்ணீர்வடித்த அந்தக் கண்களிலிருந்து தீப்பொறி பறந்தது. அவன் மூக்கு துடித்தது. "அவளுக்கும் அவருக்கும் அவமானம், அல்லவா? ...அவமானம்!...அவமானம்!..." அவன் இருமினன். இருமி இருமி அவன் மூச்சு அடைத்தது.

கமலம் ஓடி வந்து அவனைத் தாங்கினள். "மாமா! மாமா! இதை எடுத்துக் கொண்டு நீங்கள் எங்கும் போகக் கூடாது. கயிறு விற்க இனி நீங்கள் போகக் கூடாது."

"நான் கயிறு விற்பது உனக்கும், அவருக்கும் அவமானம், அல்லவா?"

"அல்ல! நீங்கள் எது செய்தாலும் அது எங்களுக்கு அவமானம் அல்ல. இவ்வளவு நாட்கள் இடைவிடாது வேலை செய்து வியாதிக்கு இரையான நீங்கள் இனி ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் என் வேண்டுகோள்."

மீண்டும் அவன் புன்னகை புரிந்தான். "ஓய்வு எடுத்துக் கொள்ளப் பிறந்தவன் அல்ல நான். இந்த வாழ்க்கை ஓய்வு எடுத்துக் கொள்ளுவதற்காக அல்ல...... என்னை விடு. நான் போக வேண்டும்."

அவள் விலகினள். அவன் நடந்தான். அவள் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்.

தாய் மகளைத் தேற்றினள். 'தனக்குத்தோன்றினதைத்தான் அவர் செய்வார். நீ அழாதே!'

"அம்மா! அவர் சொன்னால் ஒருக்கால் மாமா கேட்பார்!"

"மாட்டார், மகளே, மட்டார். யார் சொன்னாலும் கேட்க மாட்டார்!"

ஆம்; யார் சொன்னாலும் அவன் கேட்கமாட்டான். பிறர் சொல்லுவதைக் கேட்கப் பழகாத மனம் அது. எவருக்கும் வணங்காத தலை அது. பிறர் உணவை ஸ்பரிசிக்காத வயிறு அது.

கயிற்றைத் தோளில் போட்டுக் கொண்டு அவன் நடந்தான். அந்த வாழ்க்கைத் தோணி எவ்வளவு அலைகளை எதிர்த்து நின்றது! அடக்க முடியாத சுதந்திர உணர்ச்சி—அந்தத் தோணிக்குத் துணை புரிந்த சக்தி இதுதான்! வறுமையின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட இருவரைத் தாங்க வேண்டிய பொறுப்பு அந்தத் தோணிக்கு ஏற்பட்டது. காற்றும், அலையும் நிறைந்த கடலில் அந்தத் தோணி கம்பீரமாக முன் சென்றது. அலைகள் மோதி தோணியின் அடித்தளம் நொறுங்கிவிட்டது. அந்த நிமி

டத்திலும் தோணி கடலில் அமிழ்ந்து விடலாம். எனினும், அது கப்பீரமாகப் போகிறது.

அன்றையச் செலவுக்கு வேண்டிய பணத்துடன் அவன் மாலையில் வீடு திரும்பினன். கமலம் அவன் அருகில் சென்ருள். அவள் பல கேள்விகள் கேட்டாள். புரிந்துகொள்ள முடியாத பார்வையைத்தான் அவள் காண முடிந்தது

கல்யாணி அவன் அருகில் செல்லவில்லை. அவனிடம் பேசவும் இல்லை. அவளும் மாறிவிட்டாள்.

"அம்மா! மாமாவைச் சாப்பிடக் கூப்பிடு."

"நான் கூப்பிட மாட்டேன். நல்லதைச் சொன்னல் கேட்காதவரிடம் நான் பேசமுடியாது."

கமலம் அவனுக்குக் கஞ்சி கொடுத்தாள். அவன் கொஞ்சம் கஞ்சி குடித்தான். அன்று இரவு அவன் அதிகமாக இருமினன். அவன் தூங்கவே இல்லை.

மறுநாள் மாதவன் கயிற்றை எடுத்துக்கொண்டு கடைக்குச் சென்ருன். அவனை யாரும் தடுக்கவில்லை. கமலம் கண்ணீர் வடித்தாள். பல்லை நற நற வென்று கடித்துக் கொண்டு கல்யாணி உள்ளே சென்ருள்.

அன்று மத்தியானம் ஒரு பெட்டி நிறைய உடைகளுடன கோபியின் வேலைக்காரன் அங்கே வந்தான். உடைகளையும், நகைகளையும் காண அடுத்த வீட்டுப் பெண்கள் வந்தனர். அவைகளை அவர்கள் போற்றிப் பேசினர். அவர்கள் கமலத்தை ஆசீர்வாதம் செய்தனர். அவர்கள் கல்யாணியைப் பாராட்டினர்.

அந்தி நேரத்தில் இருமிக் கொண்டு மாதவன் திரும்பிவந்தான். கல்யாணி திண்ணையில் நின்றுகொண்டிருந்தாள். அவன் ஒரு பொட்டலத்தை அவளிடம் கொடுத்தான்.

"என்ன இது?" அவள் குரலில் புதுமை தொனித்தது.

"ஊம்!"

"நான் அப்பொழுதே சொல்லவில்லையா, பீடிக் கடைக்குக் கயிற்றை எடுத்துச் செல்ல வேண்டாம் என்று?" அவள் வார்த்தைகளில் கண்டனக் குறி தொனித்தது. "என் மகளை அவமானப்படுத்த வேண்டும் என்பதற்காகத் தானே இவ்வாறு செய்கிறீர்கள்?"

ஒரு மின்னல்! மாதவன் எல்லாவற்றையும் மறந்தான். அவன் திருஷ்டியிலிருந்து உலகம் மறைந்தது. அவன் கர்ஜித்தான். அவன் அவளை நோக்கிப் பாய்ந்தான். வீரமும், அபிமானமும் நிறைந்த அவனைத் தொடாமல் தடுக்க அவன் தேகத்திற்கு வலிமை இருக்கவில்லை. அவன் பின்னல் சாய்ந்தான். கமலம் ஓடிவந்து அவனைத் தாங்கினள்.

நடு நிசி. கமலம் தூங்கவில்லை. அவள் மானசிகக் கோகிலம் வாழ்க்கை வசந்தத்தில் பறந்து, பாடிற்று; துக்கங்களை எண்ணிப் பார்க்கவும், எதிர் காலத்தின் இன்பத்தில் அடைக்கலம் புகவும் இளமைக்கு வலிமை உண்டு.

கல்யாணி குறட்டைவிட்டாள். மங்கின நிலவில் சிறகடித்துப் பறக்கும் தரிஞ்சில்களின் சத்தத்தைத் தவிர வேறு எந்த விதமான சத்தமும் கேட்கவில்லை. மறுநாள் அவள் பாக்ய சூரியன் உதயமாகும். கடந்த காலத்தின் ஞாபகங்கள் அவள் மனத்தில் இடம் பெறவில்லை. எதிர் காலத்தின் மடியில் அவள் இன்பமாகத் தூங்கினள்.

"ஊம்!"

கமலம் கவனமாகக் கேட்டாள்.

"ஊர்!"

கமலம் விழித்திருந்தாள். அவள் ஜன்னல் மூலம் வெளியில் எட்டிப் பார்த்தாள். ஓர் உருவம் முன்னும் பின்னும் நடப்பது நிலா ஒளியில் அவளுக்குத் தெரிந்தது அவள் உற்றுப் பார்த்தாள்,

"ஊம்!" அந்த உருவம் மூஷ்டியை உயர்த்தி காற்றில் வீசிற்று.

அவள் கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்றாள். அவள் மெதுவாக நடந்தாள்.

"யாரது?" என்று அவள் கேட்டாள்.

"ஊம்!"

"மாமாவா?" அவன் அருகில் சென்றாள் "ஏன் இங்கே நிற்கிறீர்கள்? நீங்கள் ஏன் தூங்கவில்லை?"

அவன் மௌனமாக நின்றான். அவள் அவன் கையைப் பிடித்தாள். "மாமா! நீங்கள் ஏன் என்னிடம் பேசாமல் இருக்கிறீர்கள்? நீங்கள் ஏன் வருத்தப்படுகிறீர்கள்? நீங்கள் எதற்காக என்னிடமிருந்து பிரிந்து போகிறீர்கள்?

"குழந்தாய்!" அவன் குரல் நடுங்கிற்று. "நான் உங்களைப் பிரியவில்லை. நீங்கள் தான்—நீயும், உன் அம்மாவும் தான்—என்னைப் பிரிந்து போகிறீர்கள்!"

"நாங்கள் உங்களைப் பிரிந்து போகவில்லை, மாமா! நாங்கள் உங்களைப் பிரியமாட்டோம். நான் பூஜிப்பது தங்களைத்தான்."

"இல்லை, குழந்தாய்! நீயும், உன் அம்மாவும் என்னைப பிரிந்து வெகுதூரம் சென்றுவிட்டீர்கள். நீங்கள் என் பிடியிலிருந்து விடுபட்டு விட்டீர்கள். என் திருஷ்டியிலிருந்து நீங்கள் மறைந்து விட்டீர்கள்." அவன் முகத்தை மூடிக்கொண்டு விம்மி விம்மி அழுதான்.

எத்தனை வீரர்கள், எத்தனை பராக்கிரமசாலிகள் விம்மி விம்மி அழுதிருக்கிறார்கள்!...... அழாத மனிதன் இதுவரையில் பிறக்கவில்லை. அழாத மனிதன் மனிதன் அல்ல.

கமலமும் அழுதாள். அவள் அவனை கட்டிக்கொண்டாள். "அழாதீர்கள், மாமா! நீங்கள் என்றும் என் மாமா தான். நீங்கள் என்றும் என் இருதயத்தில் கோயில் கொண்டிருப்பீர்கள். நான் உங்களை என்றும் பிரிந்து போகமாட்டேன். நான் நன்றி மறவாதவள்!"

ஒரு மின்னல்! அவன் அப்பொழுது அழவில்லை. அப்பொழுது அவன் தேகம் நடுங்கவும் இல்லை. அவன் சிலையைப் போல் நின்றான்!... உணர்வற்ற சில நிமிடங்கள்!!

அவன் முகத்திலிருந்து கைகளை எடுத்தான். அவன் நிமிர்ந்து நின்றான். "நன்றி மறவாதவள்!... நன்றி மறவாதவள்!..." அந்தச் சத்தம் வெகு தூரத்தில் எதிரொலித்தது. "நன்றி அறிதலைக் காத்துக் கிடக்கும் நாயல்ல நான்!"

அவன் பின்வாங்கினான். எலும்புக் கூடான அந்த தேகம் மகா மேருவைப் போல் வளர்ந்தது. அந்த மகா பருவதத்தின் கீழே நெளியும் புழுவாக மாறினாள் அவள்.

சென்ற இதழில் அறிவித்தபடி தொடர்கதை இந்த இதழில் முற்றுப் பெறவில்லை. இடமின்மையே காரணம். அடுத்த இதழில் முடியும்.

—ஆசிரியர், சக்தி

புத்தக உலகம்

செவிலித் தாய்: [ஆசிரியர்: லூயிஜி பிராண்டல்லோ. கிடைக்குமிடம்: ஜோதி நிலையம், திருவல்லிக்கேணி, சென்னை. விலை அணா 12]

இந்தக் கதையை ஸ்ரீ சி. சு. செல்லப்பா மொழிபெயர்த்திருக்கிறார். இத்தாலிய எழுத்தாளர் லூயிஜி பிராண்டல்லோ பிரத்தியக்ஷமாக நடப்பதுபோல கதைகளை எழுதுவதில் வல்லவர்; அவருடைய கதைகளில் ஆழமும், உருவமும், சித்திரிப்பைப் போல முக்கியத்துவம் பெறுவதில்லை. ஆனாலும் கதைகள் படிக்க மிக மிக நன்றாக இருக்கும். அவருடைய சிறந்த கதைகளில் "செவிலித் தா"யும் ஒன்று. ஓர் ஏழைப் பெண் தன் குழந்தையை ஊரில் விட்டுவிட்டு, வெளியூருக்குப் போய், வேறொருவர் குழந்தைக்குப் பாலூட்டும் செவிலித் தாயாகப் போகிறாள். அவளுடைய மனச் சலனங்களையும், அவளுடைய செயல் முறைகளை விமரிசிக்கும் ஒரு அபேதவாதியின் மனச் சலனங்களையும் மிகத் திறம்படச் சித்திரித்திருக்கிறார் ஆசிரியர். உயர்ந்த கதை. படிக்க வேண்டிய கதை.

மதிப்புரைக்கு இரண்டு இரண்டு புத்தகங்கள் அனுப்ப வேண்டும்

இக்பால் கவி அமுதம்: [ஆசிரியர்: ஆர். பி. எம். கனி, பி.ஏ.பி.எல். கிடைக்குமிடம்: வளர்பிறைப் பதிப்பகம், காரைக்கால். விலை ரூ. 1-8-0]

முஸ்லிம் சமூகத்தில் தோன்றிய இக்பால் தற்காலத்தில் மிகவும் பிரசித்திபெற்ற கவிஞர். ஆவேசம் நிறைந்த எண்ணற்ற கவிதைகளை எழுதியிருக்கிறார் இக்பால். அவருடைய சுருக்கமான வாழ்க்கைக் குறிப்புகளை ஆரம்பத்தில் எழுதிவிட்டு, பற்பல துறைகளிலும் அவர் புனைந்துள்ள கவிதைகளின் நயங்களை ஆசிரியர் நன்கு விளக்கியிருக்கிறார்.

மனிதனுடையபெருமையைப்பற்றி ஆண்டவனிடம் கூறுவது போல இக்பால் எழுதியுள்ள கவி ஒன்று:

"நீ இரவைப் படைத்தாய்
நான் விளக்கைச் சமைத்தேன்
நீ மண்ணைச் சிருஷ்டித்தாய்
நான் பாத்திரத்தை ஆக்கினேன்
நீ பாலையை, மலையை
காட்டை உண்டு செய்தாய்
நான் தோட்டத்தை, தோப்பை,
சோலையை அமைத்தேன்
கல்லிலிருந்து கண்ணாடி செய்தவன்
நான்
நானே விஷத்தை மூலிகை
யாக்கியவன்"

இப்படிப்பட்ட முற்போக்கான நோக்கமே இன்றைய கவிஞர்களிடம் இருக்க வேண்டும் என்றால் மிகையாகாது. கடவுளின் பெருமையிலே, மனிதன் தன்னைப் பறிகொடுத்து, செயலற்ற, திராணியற்ற ஜென்மமாக வாழாமல் மனித கம்பீரத்துடன் வாழ வேண்டியதை வற்புறுத்துவதே நவயுகக் கவிஞர்களின் வேலையாகும். முஸ்லிம் மத நம்பிக்கையை வற்புறுத்தும் பாடல்களும், இம்மாதிரி அழகான பாடல்களும் இப் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கின்றன. ஆசிரியர் நல்ல முறையில் புத்தகத்தை எழுதியிருக்கிறார்.

மனோவியின் உரிமை: [ஆசிரியர்: புலவர் வ. சுப. மாணிக்கம், பி. ஓ. எல். கிடைக்குமிடம் தமிழ் நிலையம், புதுக்கோட்டை. விலை ரூ. 1-12-0.]

ருக்மணி—ஸ்ரீகாந்தன்: [ஆசிரியர்: எம். ஏ. ஸ்ரீனிவாஸன். கிடைக்குமிடம்: ரங்க விலாஸ், பெஸண்ட் ரோடு, கும்பகோணம். விலை அணா 12]

முதல் புத்தகத்தில் ஐந்து நாடகங்கள் உள்ளன. இரண்டாம் புத்தகத்

88883

தில் ஒரு நாடகம்தான் இருக்கிறது. பெரும்பாலான அம்சங்களில் இரண்டும் ஒரே ரகத்தைச் சேர்ந்த புத்தகங்களே. நாடக பாத்திரம் தனியறையில் உட்கார்ந்துகொண்டு, மணிக்கணக்காக தன் உள்ளத்துடன் பேசிப் பிரலாபித்துக் கொள்ளுவதிலும், சம்பாஷணைகள் பக்கக் கணக்கில் நீளுவதிலும் இரண்டு புத்தகங்களும் ஒன்றை ஒன்று போட்டி போடுகின்றன. முதல் புத்தகம் பண்டிதத் தமிழிலும், இரண்டாவது புத்தகம் சுமார் இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் நடைபெற்று வந்த ஸ்பெஷல் நாடக வசனத்திலும் எழுதப் பெற்றிருக்கின்றன. இப்போது தமிழ் நாட்டுக்கு அறிவு வளம் சேர்க்கும் நாடகங்கள் இப்படி இருக்கக் கூடாது.

திருமா பத்தினி: [ஆசிரியர்: தி. ராமலிங்க முதலியார், பி. ஏ. எல். டி. கிடைக்குமிடம்: 79, கல்லத்தி முடுக்குத் தெரு, திருநெல்வேலி, விலை ரூ 1-10-0.]

சிலப்பதிகாரக் கதையை ஆசிரியர் சுருக்கி வசனமாக எழுதியுள்ளார். நடு நடுவே சிலப்பதிகார அடிகளும், பிற தமிழ்ப் பாடல்களும் காணப்படுகின்றன. சிலப்பதிகாரத்தைப் படிக்கச் சிரமப்படுகிறவர்கள், ஆரம்பத்தில் இந்நூலைப் படிக்கலாம். புத்தகம் எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது.

தமிழ்நாடும் சினிமா கலையும்: [ஆசிரியர்: "செங்கு." கிடைக்குமிடம்: செங்கு பதிப்பகம், எழுகிணறு, சென்னை. விலை அணா 6.]

மிகவும் குறைந்த விலையில் வெளிவந்துள்ள பிரயோஜனமுள்ள நல்ல புத்தகம்; சினிமாக் கலையில் அக்கறைகொண்டவர்கள் இந்நூலை அவசியம் படிக்கவேண்டும். இந்நூலில் பக்கம் தவறாமல் எழுத்துப் பிழைகள் இருப்பது ஒரு குறையாக இருக்கிறது.

வழிகாட்டும் வான் பொருள்: [ஆசிரியர்: கி. இராமலிங்கம், எம். ஏ. கிடைக்குமிடம்: ஆ. நரசிம்மலு, 97, விளக்கொளி கோயில் தெரு, காஞ்சிபுரம். விலை ரூபாய் 3.]

இது நெல்லை ஜில்லாவில், கோவில்பட்டித் தாலுகாவிலுள்ள இரெட்டியபட்டிக் கிராமத்தில் 1856-ல் தோன்றி 1922-ல் மறைந்த சுவாமிகளின் விரிவான வாழ்க்கை வரலாறு. புத்தகம் எழுதப்பட்டிருக்கும் முறையும், வெளியிடப் பட்டிருக்கும் முறையும் மிகவும் பாராட்டக் கூடியவாறு அமைந்துள்ளன. இந்நூல் வேதாந்தத்தில் தேட்ட முடையவர்களுக்கு மிகவும் பயன்படும்.

இக்பால் கவிதை மலர்: [ஆசிரியர்: ஹாபிஸ் கலீலுர் றஹ்மான், கிடைக்குமிடம்: முஸ்லிம் யூனியன், கடையநல்லூர், திருநெல்வேலி ஜில்லா. விலை அணா 6.]

முஸ்லிம்களின் முன்னேற்றத்தை வற்புறுத்தும் இக்பாலின் பாடல்கள் சிலவற்றின் தமிழாக்கமே இந்தச் சிறு புத்தகம். இந்த யுகத்தில் கவிஞர்கள் என்றால் குறிப்பிட்ட மதத்தினருக்கு மட்டுமல்லாமல், ஒரு தேசத்தினருக்கோ, அல்லது பொதுவாக மனித வர்க்கத்துக்கோ பயன்படும் கவிதைகளைப் புனைகிறவர்களாக இருக்கும்போது, இக்பால் மட்டும் பெரும்பாலும் மதக் கூட்டத்திலேயே ஒதுங்கிவிடுகிறார். இக்பாலின் போதனைகளில் பல இன்றைய நவீன கருத்துக்களுக்கும் முற்போக்கான கருத்துக்களுக்கும் முரண்பட்டிருக்கின்றன.

ஆலய வழிகாட்டி: [தொகுத்தவர்: க. வெ. அருணகிரி முதலியார். கிடைக்குமிடம்: 92, காமாட்சி கோயில் தெரு, காஞ்சிபுரம். விலை ரூபா 1.]

ஸ்தல யாத்திரை செய்யும் பக்த கோடிகளுக்கு மிகவும் பயன்படும் புத்தகம். ஒவ்வொருகோவிலின் சிறப்பும், அக் கோவிலுக்கும் ரயில்வே ஸ்டேஷனுக்கும் உள்ள தூரமும், இவை போன்ற பல விபரங்களும் இப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

—கு. அ.

Edited, Printed and Published by Vai. Govindan at the Shakti Press Ltd
(Shanti Press) 115-E, Mowbrays Road, Royapettah, Madras, 14.

காலையில் குதூகலத்துடன் எழுந்திருங்கள்

காலை நேரத்தில் குதூகலமாயிருப்பது சாத்தியமே. இரவில் படுக்கச் செல்லுமுன் "மில்க் ஆப் மெக்னீஷியா" உட்கொண்டால் புளியேப்பம், அஜீரணம், அமிதமாக ஆகாரம், பானங்கள் உட்கொண்டதால் ஏற்படும் உபாதைகளை நீக்கி நல்ல தூக்கம் அளிப்பதுடன் விரைவில் சுகம் உண்டாகிறது. நீங்கள் நன்றாகத் தூங்குகிறீர்கள். தூங்கும்பொழுது "பிலிப்ஸ் மில்க் ஆப் மெக்னீஷியா" உபாதைகளைப் போக்கி, மலத்தை நளினமாகவும் பூரணமாகவும் இளக்குகிறது. ஆதலால் மறுநாள் காலையில் சுறுசுறுப்பாகவும், குதூகலமாகவு மிருக்கிறது.

Remember...

PHILLIPS

"MILK OF MAGNESIA"

Tonight!



LIQUID or TABLETS

No. 2

UTERONA

பெண்களுக்கு ஏற்படும்
சூதக வாய்வு, சூதகக் கட்டி,
அகால பஹிஷ்டை, மலட்டுத்
தன்மை இவைகளை நீக்கி புத்திர
சந்தானத்தைக் கொடுக்கும்
அரிய டானிக்

BHARATH DRUG HOUSE
Madura

தமிழிலே அரிய நூல்

உலோகங்களும் நாமும்

இரும்பு, தங்கம், வெள்ளி
முதலிய உலோகங்கள்
பற்றிய அருமையான நூல்.

ஸ்ரீ அருணாசலம் எழுதியது.

ரூ. ஐந்து

(தபால் செலவு தனி)

சக்தி காரியாலயம் சென்னை-14

ராஜ ஜோதிஷர்

உலகம் புகழும் சிறந்த ஜோதிஷர், மாந்திரீகர்.
(அரசாங்கத்திலிருந்து குறிப்பிடத்தக்க பல பட்டங்கள் பெற்றவர்)

பண்டிட் ஹரிஷ்சந்திர சாஸ்திரி ஜ்யோதிஷ் தீர்த்தா

(அகில வங்க ஜோதிஷச் சங்கத் தலைவர்)

ஹௌஸ் ஆப் அஸ்ட்ராலஜி, 141/11 C, ரஸ்ஸா ரோட், காளிகட்
ஜக்ர்ராபார்க்குக்கு கீழ்புறம் **கல்கத்தா** போன் South 978

மாஜி மன்னர் எட்டாம் எட்வர்ட்டின் ஜாதகத்தை மிகவும் சுத்தமாகக் கணித்து பிரக்யாதி அடைந்த இந்த நிபுணர் மேல் நாட்டு நம் நாட்டுசோதிடத்திலும்,கைரேகை பார்ப்பதிலும் தேர்ந்தவர். சோதிட சம்பந்தமான கேள்விகளுக்குச் சரியான பதிலளிப்பது இவரது திறமையின் முக்கிய அம்சம். நக்ஷத்திரக்கோளாறுகளுக்கு பரிகாரம்செய்வதற்கும், மிகவும் சிக்கலான வழக்குகளில் நிச்சயம் வெற்றிகிடைக்கச் செய்யவும், என்றும் தீராத, மூர்ச்சை நோய், காக்காய் வலிப்பு, க்ஷயம்,பைத்தியம்,நீரழிவு,மலட்டுத்தன்மை, மற்றும் ஸ்திரீ சம்பந்தமான எல்லா வியாதிகளையும் சொஸ்தம் செய்யவும், யோக ஸாதனத்தாலும் மந்திர சக்தியாலும், அசாதாரணமான சக்தியைப் பெற்றிருக்கிறார். இந்தியா, இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா, சைனா, இன்னும் மற்ற தேசங்களிலிருந்தும் அநேகம் பிரமுகர்கள் இவருக்கு நற்சாக்ஷிப் பத்திரங்கள் கொடுத்து மரியாதை செய்திருக்கிறார்கள்.

இவரது அற்புதமான ரக்ஷைகள் அணிவதால் காரிய வெற்றி நிச்சயம்.

சாந்தி கவசம்: இதை அணிபவர்களுக்கு தீராத நோய்களைத் தீர்த்து விபத்துக்கள், அகால மரணம், தீ, திருட்டு இன்னும் எல்லாவிதமான கஷ்டங்களினின்றும் காப்பாற்றி; பரீக்ஷையில் வெற்றியும், குடும்பத்தில் சந்தோஷமும், மனச்சாந்தியும் கொடுக்கிறது. மனச்சோர்வைப் போக்கி, சரீர சுகத்தையும் விருத்தி செய்கிறது. துர் நக்ஷத்திரங்களையும் சமனப்படுத்துகிறது. சாதாரணம் ரூ. 5/- ஸ்பெஷல் (உடனே பலன்) ரூ. 20/-

பகளா கவசம்: இதை அணிபவர்களுக்கு தொழிலில் வெற்றி,விருப்பம் கைகூடுதல்,ராஜாங்க மரியாதை கிடைத்தல்,உத்தியோகத்தில் உயர்வு, வியாபார விருத்தி, தனலாபம், அதிகார உயர்வு முதலியவை கிடைக்க உதவுகிறது. இதை அணிந்து கொண்டவர்கள் எதிரிகளை வென்றிருக்கிறார்கள்; பிரதிகூலமாகக் கூடிய பல சிக்கலான வழக்குகளில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இது குடும்பஸ்தர்களுக்கு எப்பொழுதும் நன்மையளிக்கக் கூடியது.
சாதாரணம் ரூ. 12/- ஸ்பெஷல் (உடனே பலன்) ரூ. 45/-

ந்ருஸிம்ஹ கவசம்: இதை அணியும் ஸ்திரீகளுக்கு குழந்தைகள் வயிற்றிலேயே இறந்து பிறக்கும் கோளாறுகளை நீக்கி,மலட்டுத்தன்மையைப் போக்கி சூதகசம்பந்தமான வியாதிகளைப் போக்கி உதவுகிறது. குடும்ப வாழ்க்கையை வெறுக்கச்செய்யும் எல்லா வகையான துன்பங்களையும் ஓட்டவல்ல ஓர் சிறந்த ரக்ஷை. சாதாரணம் ரூ.10/- ஸ்பெஷல் (உடனே பலன்) ரூ. 29/-

ஆகர்ஷணி கவசம்: இதை அணிவதால் நாம் விரும்பும் நபர்களை நமது வசமாக்குகிறது. எவரெவரிடம் நமக்கு என்னென்ன காரியங்கள் ஆகவேண்டுமோ அவையெல்லாம் பூர்த்தியாகிறது.

சாதாரணம் ரூ. 12/- ஸ்பெஷல் (உடனே பலன்) ரூ. 50/-

உடனே எழுதுங்கள்

சக்தி

மாதப் பத்திரிகை

○

தனிப் பிரதி 'தபால்'	0	8
ஆறு மாதம்	3	8
ஒரு வருஷம்	6	0
2 வருஷம்	11	0

ரெஜிஸ்டர் மூலம் பெற விரும்புவோர் பிரதி ஒன்றுக்கு 0-3-0 விகிதம் சேர்த்து அனுப்பவேண்டும்

பர்மா

தனிப் பிரதி	0	9
ஆறு மாதம்	4	0
ஒரு வருஷம்	7	0
2 வருஷம்	13	0

மலேயா, முதலிய வெளி நாடுகளுக்கு

தனிப் பிரதி	0	10
ஆறு மாதம்	4	0
ஒரு வருஷம்	8	0
2 வருஷம்	15	0

○

சக்தி காரியாலயம்

சென்னை

என்ற விலாசத்திற்குச் சந்தாத் தொகை அனுப்பவேண்டும்

பிரபஞ்ச ஜோதி பிரசுரங்கள்

சமீபத்தில் வெளியான

வெ. சாமிநாத சர்மா நூல்கள்

★

அரசியல் வரலாறு	2	10
கார்ல் மார்க்ஸ்	3	4
மானிட் ஜாதியின் சுதந்திரம்	1	4
ஸ்ரீராம கிருஷ்ணர்— ஒரு தீர்க்கதரிசி	2	4
ஆசியாவும் உலக சமாதானமும்	2	8
ஐக்கியதேச ஸ்தாபனம்	2	0
ருஷ்யா-சரித்திர வரலாறு	1	8
சுப்பிரமணிய சிவம்	1	2
பிளேட்டோவின் அரசியல்	(அச்சில்)	
சமுதாய சிற்பிகள்	(அச்சில்)	

சென்னையில் கிடைக்கும்:
சக்தி காரியாலயம்
ராயப்பேட்டை :: சென்னை 14

பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்
புதுக்கோட்டை
திருச்சி ஜில்லா

உண்டு உடுப்பதோடன்றி
வாழ்வில் செழிப்பும் அளிக்கும்

ஓர் அரிய வாழ்க்கை

★

லைப் இன்ஷ்யூரன்ஸ் பிடிப்பது வாழ்க்கைக்குச் செழிப்பும் அளிக்கிறது. அது வாழ்க்கையில் பொதுஜன சேவை, முன்னேற்றம், பரந்த நட்பு, நல் உணர்வு ஆகியவைகளை அளித்து ஐச்வரியமும் கொடுக்கிறது.

ஆடவர்களும் பெண்மணிகளும், அவர்கள் செழிப்பாகவும், நாகரிகமாகவும் வாழ்க்கை நடத்த போதிய அளவு பொருள் திரட்ட ஓர் சந்தர்ப்பம் அளிக்கவல்ல நிலையில் தாங்கள் இருப்பது பற்றி "ஹிந்துஸ்தான்" கம்பெனியார் சந்தோஷமடைகிருர்கள்.

புதிய தொழில் (1946)

ரூ. 12 கோடியும் 40 லக்ஷங்களுக்குமேல்.

நியாயமான தொழில்முறைக்கு நம்பகமான இடம்:

ஹிந்துஸ்தான் கோ-ஆபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்,

"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
4, சித்தரஞ்சன் அவென்யூ, கல்கத்தா.

டிவிஷனல் ஆபீஸ்:
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
107, அரண்மனைக்காரத் தெரு,
சென்னை—1.

பெங்களூர்:	பெஜவாடா:
கெம்பே கௌடா ரோட்,	ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்,
பெங்களூர் சிடி.	கவர்னர்பேட், பெஜவாடா

அழகும் மணமும் பொருந்திய புஷ்பம் “[illegible]”
சுவையும் மணமும் பொருந்திய பாக்குத்தூள் “[illegible]”

தயாரிப்பவர் :

எம். கே. கிருஷ்ண செட்டி

‘அசோகா பாக்டரி’ :: கோயமுத்தூர்